Registered as a News Paper in Sri lanka


விலை : ரூபா 10 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU


முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 02 சனிக்கிழமை (18.08.2012) பக்கங்கள் 20 ஓசை - 321

விஷானி நகை மாளிகை
மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு


இல. 187, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)


கிழக்குத் தேர்தலும் மக்களும் (05)


நுரைச்சோலை நீக்கப்படவேண்டும் (06)


காகத்திற்கு கனவிலும்... (07)


சாய்னாவை சந்திக்க சச்சின்... (08)


நிதானம் இழந்த... (11)

# மனிதாபிமான உதவிகள் இலங்கைக்குத் தேவை

## பிரிட்டன் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு தொடர்ந்தும் மனிதாபிமான உதவி தேவைப்படுவதாக பிரித்தானியா அறிவித்துள்ளது.

யுத்தம் நிறைவடைந்து மூன்றாண்டுகள் கடந்துள்ள நிலையிலும் மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கீன் தெரிவித்துள்ளார்.

உலக மனிதாபிமான தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள விசேட செய்தியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2013 ஆம் ஆண்டில் நிலக்கண்ணி வெடி அகழ்வுப் பணிகள் பூர்த்தியாகும் வரையில் பிரித்தானியா தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்துள்ள போதிலும் தொடர்ந்தும் மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நிலக்கண்ணி வெடி அகழ்வுப் பணிகளுக்கு இலங்கை தொடர்ச்சியான உதவிகளை வழங்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். யுத்தத்தின் பின்னர் மோதல் இடம் பெற்ற வலயங்களின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது எனவும், அதற்கு நிலக்கண்ணி (19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ். போதனாவிலும் பணிப் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் ஆகியன நேற்று நடைபெறவில்லை.

கொழும்பில் வைத்திய நிபுணர் ஒருவரின் வீடு கைக்குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானதையிட்டு நாடளாவிய ரீதியில் வைத்தியர்கள் நேற்று பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.

இதற்கு ஆதரவாக யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களும் பணிப புறக்கணிப்பை மேற்கொண்டனர்.

அத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடியுடன் தொடர்புடைய இரண்டு அதிகாரிகள் மீது (19) ஆம் பக்கம் பார்க்க

# ஜனாதிபதி தலைமையில் வன்னி அபிவிருத்தி மாநாடு



(கொழும்பு)

வன்னி மாவட்ட விசேட அபிவிருத்தி குழுக்கூட்டம் நேற்றையதினம் ஜனாதிபதி தலைமையில் அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா, றிசாட் பதியுதீன் ஆகியோர் உள்ளிட்ட பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

நேற்றுக் காலை வவுனியா செயலகத்தில் ஆரம்பமான இவ் விசேட அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் மகிந்த சிந்தனையின் கீழான வடக்கின் வசந்தம் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டங்கள் விரிவாக ஆராயப்பட்டதுடன் வன்னிப் பிரதேசத்தின் காணி, வீடமைப்பு, மீன்பிடி, சுகாதாரம், கல்வி உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதுடன் எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளும் பிரேரிக்கப் பட்டன.

இவ் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அரசாங்கத்தின் சேவைகள் அனைத்து மக்களுக்கும் பாகுபாடின்றி கிடைக்கும் வகையில் அரச ஊழியர்கள் பணியாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

வன்னிப் பிரதேசத்திலுள்ள காணிகளைப் பொறுத்தமட்டில் பல்வேறு வகையான காணி உறுதிப்பத்திரங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு அதன் காரணமாக பல பிரச்சினைகள் எழுந்திருப்பது குறித்து இந்தக் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது. எனினும், ஜப்பான் காணி (19) ஆம் பக்கம் பார்க்க

## நகைத்தொழிலாளி மீது தண்ணீரூற்றில் சூடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - தண்ணீரூற்று பகுதியில் இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நகைத்தொழில் செய்பவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் தண்ணீரூற்று, முள்ளியவளையைச் சேர்ந்த பாலசுந்தரம் கிரிதரன் (வயது - 44) என்பவரே தொடைப்பகுதியில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக (19) ஆம் பக்கம் பார்க்க

## லலித், குகன் கைதா? மறுக்கிறது இராணுவம்

(கொழும்பு)


முன்னணி சோசலிசக் கட்சியின் உறுப்பினர்களான லலித் குமார் மற்றும் குகன் ஆகியோரை இராணுவம் கைது செய்யவில்லை என இராணுவம் மறுத்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் காணாமற் போனதாகத் தெரிவிக்கப்படும் லலித் மற்றும் குகன் ஆகயோரை இராணுவத்தினர் கைது செய்துள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

லலித் மற்றும் குகன் ஆகியோரை இராணுவத்தினர் கைது செய்துள்ளதாகவும், வடக்கு இராணுவ முகாம் ஒன்றில் தற்போது அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அண்மையில் (19) ஆம் பக்கம் பார்க்க

# கிழக்கு மாகாண தேர்தல் கடவுள் தந்த சந்தர்ப்பம்

## என்கிறார் சம்பந்தன்



(திருகோணமலை)

கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் கடவுளால் தரப்பட்ட சந்தர்ப்பமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை - ஆனந்தபுரியில் இடம் பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது பிரசார உரையில் மேலும் தெரிவித்ததாவது,

ஜெனிவா தீர்மான அழுத்தங்களில் இருந்து தப்பவே அரசாங்கம் கிழக்கு மாகாணசபைத் தேர்தலைப் பயன்படுத்தப் பார்க்கிறது. அதற்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்று, அந்த ஜனநாயகத் தீர்ப்பைத் தவறாகப் பயன்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. தந்தை செல்வாவின் (19) ஆம் பக்கம் பார்க்க

## வைத்தியர்களுக்குப் பாதுகாப்பு பொலிஸார் இணக்கம்

(கொழும்பு)

மருத்துவப் பேரவையின் அங்கத்தவர்களுக்கு விடுக்கப்படுகின்ற அச்சுறுத்தல்கள் குறித்து ஆராய்ந்து அவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலிஸார் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் பிரதி பொலிஸ் மாஅதிபர்கள் சிலருக்கும் இடையில் பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முற்பகல் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது வைத்தியர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பில் இணக்கம் காணப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தெஹிவளையில் வைத்தியர் ஒருவரின் வீட்டின் மீது கைக்குண்டு வீசப்பட்ட சம்பவம் தொடர்பாகவும் இந்தப் பேச்சுவார்த்தையில் முக்கிய கவனம் (19) ஆம் பக்கம் பார்க்க

# துரித மீள் எழுச்சித் திட்டம்

# வேலணையில் செயல் வடிவம்



வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் மீள் எழுச்சித்திட்டத்தின் அமுலாக்கல் நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

இதன் ஒரு கட்டமாக வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசாவின் வேண்டுகோளுக்கிணங்க வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் குளங்கள் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

வேலணைப் பிரதேச சபையின் தவிசாளரும் வேலணைப் பிரதேச சபையின் உறுப்பினர் பா.தவபாலன் அவர்களும் திட்ட பொறியியலாளர் மற்றும் திட்ட உத்தியோகத்தர்கள், அல்லைப்பிட்டி, சரவணை, அம்பிகைநகர் மற்றும் மண்கும்பாண், மண்டைதீவுப் பகுதிகளில் உள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்வதற்காக நேற்று அங்கு சென்று பார்வையிட்டனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு அமைவாகவும் அவரின் முயற்சியாலும் யாழ்ப்பாணத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (85)

## விதிகளை மீறிய கடற்றொழில்

## பொன்னாலையில் பொலிஸார் அதிரடி

சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைக்குப் பயன்படுத்தப் பட்டு வந்த ஒரு தொகுதி தங்கூசி வலைகள் நேற்று பொன்னாலைப் பாலத்தில் வைத்து கடற்றொழிலாளர் சிலரிடம் இருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரிற்குக் கிடைத்த தகவலை அடுத்தே இவ் வலைகள் கைப்பற்றப் பட்டதாகத் தெரியவருகின்றது.

இந்த வலைகளும், இதனைப் பயன்படுத்திய கடற்றொழிலாளர்களும் பொலிஸாரினால் யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஏற்கனவே தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவது அரசாங்கத்தினால் தடைசெய்யப் பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## நகைக்கடையில் மோசடி

## தங்க நகைகளுடன் தப்பியோட்டம்

(வடமராட்சி)

நெல்லியடியில் நகைக்கடை ஒன்றில் இடம்பெற்ற மோசடிச் சம்பவம் ஒன்றின்போது சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் பறிபோயுள்ளன.

நெல்லியடி மத்திய பேருந்து நிலையத்திற்கு அண்மையில் உள்ள வைஸ்ணவி நகைப் பூங்கா என்ற நகைக்கடைக்கு நேற்று முற்பகல் 11.00 மணியளவில் வருகைதந்த இரு மோசடி நபர்கள் நகைக்கடை ஊழியர்களுடன் மிக சாதுரியமாகப் பேசி ஒரு பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியையும் அரைப் பவுண் நிறையுடைய தங்க மோதிரம் ஒன்றையும் தமது கைகளுக்குள் எடுத்துக்கொண்டனர்.

திடீரென மேற்படி நகைகளை சுருட்டிக்கொண்டு இவர்கள் இருவரும் தப்பிச்செல்ல முற்பட்டனர். நிலமையை உணர்ந்துகொண்ட கடையின் ஊழியர்கள் அவர்களில் ஒருவரை மடக்கிப்பிடித்து விட்டனர். மற்றையவர் தப்பிச் சென்றுவிட்டார். பிடிபட்டவர் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார். இச்சம்பவம் குறித்துப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். (116)

## நூல் வெளியீட்டு விழா


(திருநெல்வேலி)

'ஓய்வு' என்னும் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி திருநகர் கிராம அபிவிருத்திச் சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வு கரைச்சிப் பிரதேச செயலர் கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்துகொள்வார். வெளியீட்டுரையை மலையாளபுரம் காவேரி கலாமன்றத்தைச் சேர்ந்த ஜோசுவா அடிகளாரும், ஆய்வுரையை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையைச் சேர்ந்த ஆசிரிய ஆலோசகர் பெருமாள் கணேசனும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலாசிரியர் கலாபூஷணம் எஸ்.நடராசா ஏற்புரையை வழங்குவார். (137)







அருட்பணி வி.பி.தனேந்திரா அவர்களின் "சமூக மாற்றத்திற்கு வித்திட்டவர்கள்" எனும் நூல் வெளியீட்டுவிழா அரியாலை காந்தி நிலைய வெள்ளிவிழா அரங்கில் நடைபெற்றபோது, இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் தலைவர் வி.கே.கணேசலிங்கம் நூலினை வெளியிட்டு வைப்பதுடன் நூலாசிரியருக்கும் மலர்மாலை அணிவித்துக் கௌரவிப்பதனையும், நூலாசிரியர் ஏற்புரை நிகழ்த்துவதையும் காணலாம்.

## ஆன்மீகப் பெருவிழா

சர்வதேச இந்துமத குருபீடம் தொடங்கி 15 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு ஆன்மீகப் பெருவிழாவினைக் கொண்டாடவுள்ளதாக இந்துமத குருபீட நிர்வாகப் பணிப்பாளர் பிரம்மஸ்ரீ நித்திய சதானந்த சர்மா அறிவித்துள்ளார்.

இந்த ஆன்மீகப் பெருவிழா இம்மாதம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 9.00 மணிக்கு நல்லை ஆதீன சிவனாலயத்தில் கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

மறுநாள் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு சங்கானையில் பைந்தாழ் ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தானத்தில் விசேட திவ்விய ஹோமத்துடன் ஆன்மீகவிழா நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பகல் மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது.

26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் கல்யாண மண்டபத்தில் இந்த ஆன்மீக விழா நடைபெறவுள்ளது. இவ்விழா சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சபரிமலைக் குருஜி ஸ்ரீ ஐயப்பதாச சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பல்துறை சார்ந்த 150 பிரமுகர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். இவ்விழாவிற்கு இந்து மதப் பற்றாளர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர். (06)

## வவுனியாவில் தீ விபத்து

## பாடசாலைக் கொட்டில் நாசம்



(வவுனியா)

வவுனியா நொச்சிமோட்டை கனிஷ்ர மகாவித்தியாலயத்தில் நான்கு வகுப்பறைகளைக் கொண்ட தற்காலிக கொட்டில் தீயில் எரிந்துள்ளது.

கடந்த வியாழன் பிற்பகல் 2.30 மணியளவில் இந்தப் பாடசாலைக்கு அருகாமையில் இருந்தவர்கள் தமது காணியை துப்பரவு செய்து குப்பைகளை எரித்துள்ளனர்.

அதிகமான காற்று காரணமாக தீப்பொறி பாடசாலை வளாகத்திற்குள் இருந்த தற்காலிக கொட்டிலில் வீழ்ந்து முற்றுமுழுதாக தீக்கிரையாகியுள்ளது.

வகுப்பறைகளில் இருந்த கரும்பலகை, வெண்பலகை மற்றும் பாடசாலை தளபாடங்களும் தீக்கிரையாகியுள்ளன.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த கிராமவாசிகள் தீயணைப்பு பணியில் ஈடுபட்டனர்.

## ஸக்காத்துல் பித்ர்

ஸக்காத்துல் பித்ர் வழங்கும் தினம் இன்று ம..றிப் தொழுகையிலிருந்து பெருநாள் தொழுகை நிறைவேற்றும் முன்னர் கொடுத்தல் வேண்டும். பொக்காத்துல் பித்ர் ராக இரண்டரைக் கிலோ அரிசி ஒருவருக்கு வழங்குதல் வாஜிபா கும்.

நோன்பு நோற்றவர்கள் அவர்களின் நோன்பு பூர்த்தியாவதற்கு இக்கடமையைச் செய்தல் வேண்டும். குடும்பத்தில் எத்தனை உறுபபினர்கள் உள்ளார்களோ அவர்கள் இரண்டரைக் கிலோ வீதம் அனைவருக்குமாக அரிசியாக உணவுப்பொருள் கொடுப்பது கடமையாக்கப்பட்டுள்ளன.

இந்த வகையில் கூட்டமாக அரிசி வழங்குவதற்காக அரிசி சேமிப்பைத் தகவல் வழிகாட்டி அமைப்பு மேற்கொண்டுள்ளது. (105)

## யாழ். நீதவானுக்கு

## மேலதிக கடமை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட நீதிபதி ஆனந்தராஜா இந்தியா போபால் நகரில் நீதிபதிகள் பயிற்சி முகாமிற்குச் செல்லவிருப்பதனால், நாளை முதல் 31.08.2012 வரை யாழ். மாவட்ட நீதிமன்றக் கடமைகளையும் யழ். நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா பொறுப்பேற்கவுள்ளார்.

இதற்கான அனுமதியை நீதிச்சேவை ஆணைக்குழு நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவுக்கு வழங்கியுள்ளது என்று யாழ். நீதிமன்ற வளாகத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சமூகத்தின் வைத்தியர்களாக எழுத்தாளர்கள் இருக்க வேண்டும்

## தமிழ்நேசன் அடிகளார்

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழிநுட்பம் நிறைந்த காலகட்டத்தில் எழுத்தாளர்கள் முக்கிய பங்கு வகிப்பதுடன் அவர்கள் ஒவ்வொருவரும் சமூகத்தினுடைய வைத்தியர்களாக இருக்க வேண்டும். சமூகத்தினுடைய நோய்களை இனங்கண்டு அவற்றுக்கு தகுந்த வைத்தியம் செய்வதும் அச்சமூகம் அல்லது சமுதாயம் மேன்மேலும் தாக்காது காத்துக் கொள்ளவதும் எழுத்தாளர்களுடைய கடமையாகும் என மன்னார் தமிழ்ச்சங்க தலைவர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

சமரபாகு உதயகுமார் எழுதிய "பகிர்வு" எனும் கட்டுரைத் தொகுதி அறிமுக விழா கடந்த 4ஆம் திகதி யா/கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் எஸ்.செல்வானந்தன் தலைமையில் நடைபெற்றது இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்

வாழ்க்கை என்ற கடலில் கற்றுக்கொள்வதிலேயே நம் ஆயுள் முடிந்து விடுகின்றது மாடுகள் உணவை உண்பதை விட அசைபோடுகின்ற போது தான் அழகாக இருக்கும், மாட்டுக்கும் அதுதான் சுவையாகவும் இருக்கும்,

விரிக்கும் சிறகுகள் இரண்டாக இருந்தாலும் பறக்கும் திசை ஒன்று தான் பலவகையான நூல்கள் இருந்தாலும் இந்நூலின் ஆசிரியர் தான் கற்றுக் கொண்டதை நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள் என்று பறைசாற்றுகின்றார் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையினை மூளாய் சைவப் பிரகாச வித்தியாலய அதிபர் திருமதி.சிவமலர் சுந்தரபாரதி ஆற்றினர் முதற்பிரதியினை பொருளியலாளர் கோப்பாய் த.தர்மசீலன் ஏற்றுக்கொண்டார். நூல் அறிமுகவுரையினை ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் லண்டன் முகாமைத்துவ பட்டதாரி சி.இன்பரூபன் ஆகியோர் ஆற்றினர். மேலும் 'பகீர்வு' எனும் இந் நூல் வெளியீட்டுக்கு எழுத்தாளர்கள், கல்விமான்கள், படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்திருந்தனர். (116)

## நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

எல்.பி.பினான்ஸ் நிதி நிறுவனத்தின் சாவகச்சேரிக்கிளையின முதலாவது ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் 2.00மணி தொடக்கம் 3.00வரை நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு வாடிகையாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

## மண்டைதீவில் கள் விற்பனை நிலையம்

(மண்டைதீவு)

மண்டைதீவுப் பகுதியில் சட்டவிரோத கள் விற்பனை நடவடிக்கையைத்தடுக்கு முகமாக கள் விற்பனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாதத்தில் போயாதினத்தன்று மட்டும் மூடியிருக்கும் இந்தக்கள் விற்பனை நிலையம் தினமும் முற்பகல் 4.00 மணிமுதல் இரண்டு மணிவரையும் திறந்திருக்கும் மாலை 5.00 மணிக்கு மீண்டும் திறக்கும் இந்த விற்பனை நிலையத்தில் இரவு 8.30 மணி வரை வியாபார நடவடிக்கைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் கள் சட்டவிரோதமான முறையில் அங்கு பல்வேறு பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதனை அங்குள்ள பொலிஸார் பல்வேறு தடவை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்திருத்தனர். இந்நிலையிலேயே தற்போது ஏற்கனவேகள் விற்பனை நிலையம் அமைந்திருந்த பகுதிக்கு சமீபமாக இந்த கள் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று...

(நல்லூர்)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் பூங்காவனத் திருவிழாவான இன்று மன்ற மாணவர்களின் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளது.

திருமதி.நாகம்மா மகாலிங்கத்தின் மாணவர்களின் பாட்டுக் கச்சேரி, திருமதி.அ.கிருஷ்ணாலினியின் மாணவர்களின் வயலின், க.கண்ணதாஸனின் மாணவர்களின் தாளவாத்திய அரங்கு, திருமதி.பாலினி கண்ணதாஸனின் மாணவர்களின் நடன நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் ஆன்மிக சிந்தனையும் சமய சொற்பொழிவும் கலைநிகழ்வுகளில் இன்று "அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்" என்னும் விடயம் பற்றி விரிவுரையாளர் ச.லலீசன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

கலை நிகழ்வுகளில் சுதுமலை ஞான வைரவர், தெல்லிப்பளை அண்ணமார் ஆகிய அறநெறிப்பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். விசேட நிகழ்வாக மா.ந.பரமேஸ்வரனின் திருப்புகழ்கச்சேரி இடம் பெறவுள்ளது.



ஈ.பி.டி.பியின் சிரேஷ்ட உறுப்பினரும், நெடுந்தீவுப் பிரதேச சபையின் முன்னாள் தலைவருமாகிய கலாபூஷணம், புலவர் அரியநாயகம் அவர்களுக்கு கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டது.

இந்தியாவில் அக்கடமி ஒவ்யூனிவேர்சல் கிளோபல் பீஸ் அமைப்பினால் திருகோணமலை மறைமாவட்ட புனித மரியாள்பேராலய மண்டபத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு வைபவத்தில் சமூக சமயக் கட்டுரைக்கான கலாநிதிப்பட்டத்தினை "அக்கடமி ஒவ் யூவேர்சல் கிலோபல் பீஸ்" அமைப்பின் துணைவேந்தர் மேன்மை தங்கி கலாநிதி கிறிஷான் வழங்கினார்.

ஐவருக்கு வழங்கிய கலாநிதிப் பட்டத்தின் போது சமாதனத்திற்கான கலாநிதிப் பட்டம் அருட்பணி ஜோஜ் திசநாயக்காவுக்கு வழங்கப்பட்டது.

## வாழ்வியல் வசந்தங்கள் நூல் வெளியீட்டு விழா

(தும்பளை)

பருத்தித்துறை பால வைரவநாதனின் வாழ்வியல் வசந்தங்கள் 18நூல்கள் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் உள்ள சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே. விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வாழ்த்துரையை கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராஜா, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி.சாந்தி திருநாவுக்கரசு, ஊவா பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.நாகேஸ்வரன், கொழும்பு தமிழ்ச்சங்க தலைவர் மு.கதிர்காமநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (62)

## நல்லூர் முருகனுக்கு இன்று பூங்காவனத்திருவிழா



### பூங்காவனத்தில் பூசிப்போம் கந்தனை

பூங்கா வனத்தன்று பூசிப்போம் நல்லூரில்
ஆங்கழகுக் காய்வளரும் பூமரங்கள் - தீங்கான
சூழலை மாசகற்றுஞ் சூக்குமமாம் மக்களுயிர்
வாழ வகுத்த வழி

-நல்லை கந்தன் பாமாலை-

### கதிர் வேலன் சந்நிதியில் கல்யாணம்!

-எடுப்பு-
நல்லூர் போக வேண்டும்
நான் இன்றே... (நல்லூர்)
-தொடுப்பு-
கல்யாணம் நடக்கு தாமே
கதிர்வேலன் சந்நிதியில்... (நல்லார்)
-முடிப்பு-
குஞ்சரியை தஞ்சமடை நெஞ்சினொடு
விஞ்சு புகழ் கந்தனவன் கைப்பற்றி
மெஞ்ஞான வாழ்ரதம் ஊர்ந்துவர
பஞ்சமெம் வாழ்வதனில் ஓடிவிடும்... (நல்லூர்)

சம்சார சாகரத்தில் சாகுமெமை
இம்சிக்கும் விலைவாசி வறுமைநிலை
சம்காரம் செய்துகதி உயர்த்திடவே
சம்சாரம் இருவரொடு வந்தருள்வான்... (நல்லூர்)

மழையில்லை மரஞ்செடி தழையில்லை
உழைப்பில்லை ஊர்மக்கள் களையில்லை
விளைவில்லை வயல்கடல் தரவில்லை
அழைக்கின்ற குரல்கேட்டு அருளுமையா... (நல்லூர்)

- கவிஞர் பாலி-

### துயர் தீர்க்கும் முருகா!

தந்தை பரமனுக்கு அன்புப் புதல்வனே
தாயார் பார்வதியின் செல்வப் பாலகனே
இளமைத் தோற்றம் உந்தன் எழிலே
இனிமை உள்ளம் காட்டும் முருகனே..!

-கே.பாலேந்திரன் கொள்ளுப்பிட்டி-




## பல வருடங்களாக புனரமைக்கப்படாத வரணி வாழைத்தோட்ட வீதி

(வரணி)

வடக்கு வரணி வாழைத்தோட்ட நாச்சிமார் கோவில் வீதி மக்கள் பயணிக்க முடியாதவாறு பற்றைகளால் மூடுண்டு காட்சி அளிக்கறது. இவ்வீதி கிட்டத்தட்ட அறுபது வருடங்களுக்கு முன்பு புனரமைக்கப்பட்டது. தற்போது வீதி என்று தெரியாதபடி மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

இவ்வீதியால் வடவரணி மக்கள் இறப்பு பிறப்பு விவாக பதிவாளர் அலுவலகம் சென்று வருகின்றது. தற்போது இவ் வீதியால் பயணிக்க முடியாதலால் நீண்டதூரம் சுற்றி பயணிப் பதை காணமுடிகிறது. எனவே இவ்வீதியை தற்போதைய சமாதான காலத்திலாவது கவனம் எடுத்து புனரமைப்பு செய்ய முன் வர வேண்டும்மென பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (150)

முன்நோக்கி செல்லும் போது கனிவாயிரு. ஒருவேளை பின்நோக்க வரநேரிட்டால் யாராவது உதவுவார்கள். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## வெறும் வார்த்தைகள்... வார்த்தைகள்...

கிழக்கில் தேர்தல் பிரசாரத்திற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் முழங்கும் வார்த்தைகள் எல்லாவற்றையும் தொகுத்துப் பார்த்தால், இந்தத் தேர்தலுக்குப் பிறகு தமிழ்மக்களுக்கு விமோசனம் வந்துவிடும் என்றுதான் புளகாங்கிதம் உண்டாகிறது. போன தேர்தலுக்கும் இதே வார்த்தைகளே "இதோ நம் பிரச்சினை தீர்ந்துவிடப் போகிறது" என்று புளகாங்கிதப்படுத்தியது நினைவுக்கு வந்து தொலைப்பது தான் சிக்கலாக இருக்கிறது.

வார்த்தைகளை எழுதி ஒரு சாடிக்குள் போட்டுக் குலுக்கி கையில் வந்ததை எடுத்துக்கொண்டு போய் எல்லோரும் மேடைகளில் பேசுகிறார்களோ என்று சந்தேகம் வருகிறது. "இந்தத் தேர்தலில் எங்களுக்கு வாக்களித்து ஒற்றுமையைக் காட்டுங்கள்; எங்கள் பின்னால் நிற்கும் சர்வதேசம் முன்னால் வந்து தீர்வைத் தந்துவிட்டுத்தான் மறுவேலை பார்க்கும்" என்று இந்தத் தேர்தலிலும் கூசாமல் அதே சத்தியத்தைச் செய்கிறார்கள். அடடா இந்தச் சர்வதேசம் உடனே வந்து தொலைத்துவிடக் கூடாதே, அவசரப்பட்டுத் தீர்வைத் தந்துவிடக் கூடாதே, அடுத்த செப்ரெம்பரில் வடமாகாணத் தேர்தல் வரும்போது கூப்பிடவும் அவர்கள் தீர்வோடு காத்திருக்க வேண்டுமே என்று நமக்குக் கவலையுண்டாகி விடுகிறது.

சரி, அந்தச் சர்வதேசம் எங்கள் பிரச்சினைக்கு எது தீர்வு என்கிறது? அதைப்பற்றி இவர்களுக்குக் கவலையில்லை. ஏனென்றால் இவர்களுக்கே தாங்கள் என்ன தீர்வைக் கேட்கிறோம் என்பதில் தெளிவில்லையே! எதிர்பார்க்கும் தீர்வுத்திட்டம் என்னவென்பதை இவர்கள் எந்தச் சர்வதேசத்திடமும் சொன்னதில்லை. அத்தனை இரகசியம் அது.

தமிழ்மக்கள் தங்களுக்கே வாக்குகளைப் போடவேண்டும் என்பதற்கான அடுத்த பயமுறுத்தல் இன்னும் உணர்ச்சிகரமானது. "தேர்தலில் அரசாங்கம் வென்றுவிட்டால், தமிழ் முஸ்லிம் மக்கள் எல்லாம் அரசை ஆதரித்து நிற்கிறார்கள் என்று சர்வதேசம் நினைத்துவிடும். அந்த ஆபத்தை நிகழ விடப் போகிறீர்களா? இந்த ராஜதந்திரப்போரில் வெற்றிபெற எங்களுக்கு வாக்களியுங்கள், இல்லையேல் தமிழ்மக்கள் கதி அதோகதிதான்"

சரி, இப்போது தமிழ்மக்கள் இருக்கும் கதி என்ன? இவர்களுக்கு வாக்களித்து ராஜதந்திரப்போரில் இவர்கள் வெற்றி பெற்று விட்டால் என்ன நடந்துவிடும்? இன்னும் எத்தனை தேர்தல்களுக்கு இப்படியே வாக்களித்துக் கொண்டிருக்க வேண்டும்?

தமிழ்மக்கள்தான் உணர்ச்சிவசமாகி விட்டார்களென்றால் எந்தப் பதிலையும் எதிர்பார்ப்பதில்லையே! தமிழ்வீரம் பொங்கி விட்டால், கேள்வி கேட்காமலே பின்தொடர்ந்து போய் எந்தக் குழியிலும் விழத் தயாரானவர்களல்லவா தமிழர்கள்! எனவே, இவர்கள் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொன்னபடி அழைத்துப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

தாங்கள் விட்ட தவறுகள் பற்றி சுயவிமர்சனம் செய்து கொள்ளாமல், அதனால் விளைந்த அழிவுகள் பற்றித் தாம் உணர்ந்து கொண்டதற்கு எந்த அறிகுறியும் காட்டாமல், என்னதான் முடிவு, என்னதான் தீர்வு வைத்திருக்கிறார்கள் என்பதையும் சொல்லாமல், எப்போது வீரவசனங்களை நிறுத்தி நாம் தற்கால மனிதர்களாய் வாழ ஆரம்பிப்பது என்பதும் தெரியாமல், தொடர்ந்தும் பழைய அதேவிதமான கருத்துக்களை உதிர்த்தபடி ஒரு தேர்தலிலிருந்து மறுதேர்தலுக்கு மக்களை நடத்திச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஏமாற்றைப் பற்றிய குற்றவுணர்வோ சுயவிமர்சனமோ இல்லாமல் தொடர்ந்தும் இனத்துவேசமும் ஆவேசமுமாகக் கருத்துக்களை வெளியிடுபவர்களையும், அரசியல் செய்பவர்களையும் நாம் விலக்காமல் தீர்வு வரப்போவதில்லை.

- ஆசிரியர்

# யாழில் 1900 கடற் கலங்களுக்கு மானிய எரிபொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் 1900 கடற்கலங்களுக்கு மானிய எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த மாவட்டத்தில் மொத்தம் 4000 கடற்கலங்கள் பயன்பாட்டில் இருப்பதாகவும் தெரிவித்த அவர் அவற்றில் 1900 கடற்கலங்களுக்கு மானிய எரிபொருள் விநியோகம் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். மிகுதியான கடற்கலங்களுக்கான மானிய எரிபொருள் விநியோகம் அவற்றின் பதிவுகள் கடற்றொழில் நீரியல்வள அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் அதற்கான அனுமதிப்பட்டியல் வந்து சேர்ந்ததும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை நேற்றைய தினம் எழுவைதீவைச் சேர்ந்த சுமார் முப்பதிற்கும் மேற்பட்ட கடற்கலங்களுக்கான மானிய எரிபொருள் விநியோகத்திற்கான முத்திரைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளதாகவும் ந.கணேசமூர்த்தி மேலும் தெரிவித்துள்ளார். (பா)

## வாழ்வாதார உதவிகளை வழங்க நடவடிக்கை

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்க வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், விதவைகள் மற்றும் யுவதிகளுக்கு அப்பகுதிகளில் உள்ள மாதர் சங்கங்கள் மூலம் தையல்பயிற்சி, தையல் இயந்திரங்கள் வழங்கவுள்ளன. வடமராட்சி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தின் மேற்பார்வையின் கீழ் வழங்குவதற்கான நடவடிக்கைகளை நல்லொழுக்க நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இதேவேளை பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள மக்களுக்கு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கங்கள் மூலமும், குழுக்கள் மூலமும் குறைந்த வட்டியில் கடன்கள் மேற்படி நிறுவனம் வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (109)

## ஒப்பந்தகாரர் காசோலை மோசடி; பாதிக்கப்பட்டவர் பொலிஸில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

வீதிப் புனரமைப்பு ஒப்பந்தகாரர் ஒருவர், யாழ் வர்த்தகரிடம் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்டு காசோலை மோசடியில் ஈடுபட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவரால் முறைப்பாடு செய்யப்படுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, பளைப்பகுதியினை பிறப்பிடமாகவும், நுணாவில் பகுதியினை வசிப்பிடமாகவும் கொண்டுள்ள பிரபலமான வீதிப்புனரமைப்பு ஒப்பந்தகாரர் யாழ். வர்த்தகர் ஒருவரிடம் நீண்டகாலமாகப் பணக் கொடுக்கல் வாங்கல் செய்து வந்துள்ளார்.

அண்மையில் அவர் 23 இலட்சம் ரூபாவினை வர்த்தகரிடம் பெற்றுக் கொண்டு, பொறுப்புக்கு காசோலை வழங்கியதாகவும், உரியகாலத்தில் காசோலைக்கான பணம் வங்கியில் இடப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட வர்த்தகர் தெரிவித்துள்ளார். (06)

# வீதித்திருத்தத்துக்கு பறித்த கருங்கற்கள் திருட்டு

(நயினாதீவு)

நயினாதீவு பெருங்குள வீதித்திருத்த வேலைகளுக்கென பறிக்கப்பட்ட கருங்கற்கள் திருடர்களால் அள்ளிச் செல்லப்பட்டுள்ளதாக நயினாதீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கருங்கற்கள் திருடர்களால் களவாக அள்ளிச் செல்லப்பட்டது தொடர்பாக வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் த.கருணாகரகுருமூர்த்தி மற்றும் வேலணைப் பிரதேச சபையினர் ஆகியோர் பொலிஸில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளனர்.

மேற்படி வீதித்திருத்தத்திற்கு நெல்சிப் திட்டத்தின் கீழ் சுமார் 96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (175)

## நோன்புப்பெருநாளை தீர்மானிக்கும் தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

நோன்பு பெருநாளை தீர்மானிக்கும் தினம் இன்றாகும். இன்று ம.'.ரிப் தொழுகைக்குப் பின்னர் இலங்கையின் எப்பாகத்திலாவது ஷவ்வால் மாத பிறை தென்பட்டால் ஞாயிறு நோன்புப் பெருநாளைக் கொண்டாடலாம்.

இதற்காக இன்று கொழும்பு பெரிய பள்ளிவாசலில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அதிகாரிகள், உலமாக்கள், பள்ளிவாசல்கள் நிர்வாகிகளின் மாநாடு நடைபெறுகின்றது.

யாழ்ப்பாணத்திலும் யாழ். உலமா சபையினர் நோன்புப் பெருநாளுக்கான பிறை பார்க்கும் குழுவை நியமித்துள்ளனர். (105)

## ஜின்னா மைதானத்தில் நோன்புப் பெருநாள் தொழுகை

(யாழ்ப்பாணம்)

நோன்புப் பெருநாள் யாழ்ப்பாணம் ஜின்னா மைதானத்தில் நடைபெறுமென யாழ். பள்ளிவாசல்கள் தீர்மானித்துள்ளன. இன்று ஷவ்வால் மாத பிறை தென்பட்டால் ஞாயிறு காலை 6.30 மணிக்கு நோன்புப் பெருநாளுக்குரிய ஜும்மாவும் தொழுகையும் இடம்பெறும்.

ஆண்கள் ஜின்னா மைதான வழியாகவும், பெண்கள் ஒஸ்மானியாக் கல்லூரி வழியாகவும் வருமாறு யாழ். உலமா சபையினர் வேண்டுகின்றனர். பெருநாள் அன்று விசேட பயானும், பெருநாள் தொழுகையும் உலமாக்களினால் நடத்தப்படும். (105)

# சீரற்ற சிற்றூர்தி நேர நடைமுறை; வீதிவிபத்துக்கள் ஏற்படும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தனியார் சிற்றூர்தி சேவையின் சீரற்ற நேர நடைமுறைகளால் வீதிவிபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். யாழ். மாவட்டத்தில் குறுந்தூர சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகளிற்கு வழங்கப்பட்டுள்ள நேர நடைமுறைக்கேற்ப ஐந்து அல்லது பத்து நிமிடங்களுக்கொரு பேருந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு குறுகிய நேரத்தில் பேருந்துகள் சேவையில் ஈடுபடும் சாரதிகள் ஒன்றையொன்று முந்த வேண்டுமென்ற போட்டி மனப்பாங்கு காரணமாக அதிவேகமாக பேருந்துகளைச் செலுத்துவதுடன் குறைந்த அளவிலான பயணிகளை ஏற்றாமல் செல்லுகின்றனர்.

இவ்விடயத்தில் சாரதிகளின் சமூக நலனற்ற செயற்பாடு காரணமாக வீதி விபத்துக்கள் அதிகரிக்கின்றன. எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் சரியான நேர ஒழுங்கில் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தினால் பயணிகள் பயன்பெறுவதுடன், வீதிவிபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் எனப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (65)

**வடக்கு கிழக்கு இணையாத எந்தவொரு தீர்வையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் கிழக்கு மாகாணத் தேர்தல் உலகத்தை ஏமாற்றும் போலி நாடகம் எனக் கூறிவந்த கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன், தமது தொனியை மாற்றி தற்போது கிழக்குமாகாண தேர்தலின் வெற்றியிலேயே தமிழ் மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளதெனக் கூறி வருகிறார். அப்படியானால் வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகக் கோட்பாட்டை கூட்டமைப்பு கைவிட்டுவிட்டதா என்ற கேள்வி கிழக்கு மாகாண தமிழ் மக்களிடையே எழுந்துள்ளது.**

# கிழக்கு மாகாண தேர்தல் திருவிழாவும், தமிழ் மக்களும்

- த. கடலவன்

கிழக்கு மாகாணத்தில் தேர்தல் திருவிழா தற்போது சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை கடந்தகால போர் நடவடிக்கைகளின்போது பல்வேறு இன்னல்களையும், அவலங்களையும் சந்தித்த மக்கள் தற்போது இப்பகுதியில் ஓரளவுக்கு அபிவிருத்தியைக் கண்டு வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் இந்த மக்கள்போரின் அவலங்களைச் சந்தித்த பொழுது இந்த மக்களுடன் (களத்தில்) அதாவது தளத்தில் நின்று முகங்கொடுக்க முடியாமல் கொழும்பில் நின்று அறிக்கை அரசியல் நடத்தியவர்கள் போரின் முடிவுகளைத் தொடர்ந்து தங்களை தமிழ் மக்களின் காவலர்களெனக் காட்டிக் கொண்டு மூட்டை முடிச்சுக்களுடன் கிழக்கு தேர்தல் களத்தில் தற்போது கடைவிரித்துள்ளனர்.

கிழக்கு மாகாண தேர்தல் களத்தைப் பொறுத்தவரையில் தேர்தலுக்கு இன்னும் மூன்று வாரங்களே உள்ள நிலையில் தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளன. இந்தத் தேர்தலில் ஆட்சியைப் பிடிக்கப்போவது யார் என்ற கேள்வி பலமாக உள்ளது. ஆனால், ஒன்று மட்டும் உறுதியானது. இந்தத் தேர்தலில் முக்கிய போட்டியாளராக இருக்கின்ற மூன்று அணிகளில் எதனாலும் தனித்து ஆட்சியைப் பிடிக்க முடியாது என்பதே அது. கிழக்கின் இனப் பரம்பல், தற்போதைய நிலையில் எவரையும் தனித்து ஆட்சியமைக்க இடமளிக்கப்போவதில்லை.

இங்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகிய மூன்று கட்சிகளும் தான் வலுவான போட்டியில் உள்ள கட்சிகள். ஐ.தே.க, ஜே.வி.பி, தேசிய சுதந்திர முன்னணி, இடதுசாரிக் கட்சிகள் போன்ற மற்றெல்லாமே அடுத்தடுத்த கட்டங்களில் உள்ளவைதான். முதல் மூன்று நிலைகளில் உள்ள கட்சிகளில் எது அதிக ஆசனத்தைப் பிடிக்கப் போகிறது என்ற கேள்வியே முக்கியமானது. எந்தக் கட்சி அதிக ஆசனத்தைக் கைப்பற்றினாலும் ஆட்சி அமைப்பதற்கு பிற கட்சிகளின் ஆதரவைப் பெற வேண்டியிருக்கும். அப்படி ஆட்சி அமைப்பதற்கான கூட்டணி எது என்ற கேள்விதான் தொடர்கிறது.

காரணம், முன்னதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோடு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டணி அமைந்திருந்தது. இருந்தபோதிலும் வேட்பாளர் பங்கீட்டில் ஏற்பட்ட அதிருப்தி, கட்சிக்குள் நிலவிய கடும் எதிர்ப்புகள் ஆகியவற்றை அடுத்து ஆளும் கட்சியுடன் இணைந்து போட்டியிடாமல் தனித்து போட்டியிடும் முடிவை முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துள்ளது. முஸ்லிம்களைப் பொறுத்தவரை இத்தேர்தலில் தமது இனம் சார்ந்து தெளிவான நிலைப்பாட்டினை அறிவித்திருக்கிறார்கள். ஒன்று தாம் தனியாக தனிச் சின்னத்தில் போட்டியிடுவது, மற்றயது வெற்றிவாய்ப்பைப் பொறுத்து அரசுடன் இணைந்தோ இணையாமலோ ஆட்சியை நடத்துவது.

இதேவேளை தமிழ் தேசிய கூட்டமைப்பு, தேர்தலுக்குப் பின் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைக்க முஸ்லிம் காங்கிரஸ் வருமென எதிர்பார்க்கிறது. ஆனால் முஸ்லிம் காங்கிரசைப் பொறுத்தவரையில் அது இத்தேர்தலில் வெற்றிபெறுமாக இருந்தால் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சி அமைக்காது என்பதே அரசியல் ஆய்வாளர்களின் எதிர்வு கூறலாகும்.

ஏனெனில் கடந்த கால அரசியல் ஓட்டங்களின்போது தமிழ்தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் சமூகத்தை பெருமளவில் அனுசரித்துச் செல்லவில்லை என்ற குற்றச்சாட்டு முஸ்லிம் சமூகத்திடம் பரவலாகக் காணப்படுகிறது. அங்குள்ள முஸ்லிம் கல்வியியலாளர்கள் தாங்கள் தமிழ் மக்களுடன் சகோதரத்துவத்துடன் வாழ்வதாகவும் ஆனால் தமிழ் அரசியல் தலைமைகள் தமது சமூகத்தை அனுசரித்துச்செல்ல தவறி வருவதாகவும் கூறுகின்றனர். இதனால் முஸ்லிம்கள் தமது தனித்துவத்தைப் பேணுவதற்காக தனித்துவமாகவே செயற்பட வேண்டிய தேவை இருப்பதாக காத்தான்குடியைச் சேர்ந்த கல்வியியலாளரும், ஓய்வுபெற்ற ஆசிரியருமான அப்துல் பாரூக், அண்மையில் கிழக்கு மாகாண தேர்தல் நிலவரம் தொடர்பில் கல்வியியலாளர்களுடன் இடம் பெற்ற சந்திப்பொன்றில் தெரிவித்திருந்தார். இவரது கருத்தை இக்கருத்தரங்கில் கலந்து கொண்டிருந்த முஸ்லிம் சமூகத்தவர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டதையே காணமுடிந்ததென கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஊடக நண்பர் ஒருவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் மூவினங்களும் பரந்து வாழுகின்ற போதிலும் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் அரசாங்கம் அங்குள்ள மக்கள் மனதில் இடம்பிடித்துள்ளதெனவே சொல்லலாம். கிழக்கின் உதயத்தின் ஊடாக அங்குள்ள மக்களின் வாழ்விலும் படிப்படியாக உதயம் ஏற்பட்டு வருகிறது. எனவே முழுமையான மறுவாழ்விற்கு மக்கள் திரும்பவேண்டிய தேவையுள்ளதால் இங்குள்ள மக்கள் அரசாங்கத்தையும் அனுசரித்து செல்வதற்கான வாய்ப்புகள் உள்ளதாக களநிலவரங்கள் கோடி காட்டுகின்றன.

இதேவேளை வடக்கு கிழக்கு இணையாத எந்தவொரு தீர்வையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் கிழக்கு மாகாணத் தேர்தல் உலகத்தை ஏமாற்றும் போலி நாடகம் எனக் கூறிவந்த கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தமது தொனியை மாற்றி தற்போது கிழக்குமாகாண தேர்தலின் வெற்றியிலேயே தமிழ் மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளதெனக் கூறி வருகிறார். அப்படியானால் வடக்கு கிழ்க்கு இணைந்த தமிழர் தாயகக் கோட்பாட்டை கூட்டமைப்பு கைவிட்டுவிட்டதா என்ற கேள்வி கிழக்கு மாகாண தமிழ் மக்களிடையே எழுந்துள்ளது.

எது எப்படி இருக்கின்ற போதிலும் கிழக்கு மாகாணத் தேர்தலில் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், அரச தரப்பு ஆகிய முத்தரப்புப் போட்டிகள் கடுமையாகவே இருக்கப் போகிறது. இத்தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி தனது தோல்வியை இப்பொழுதே ஏற்பதான கருத்துக்களை வெளியிடத் தொடங்கியுள்ளது. இக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, நீதியான முறையில் நடைபெறுகின்ற தேர்தலில் ஏற்படுகின்ற தோல்வியை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொள்ளுமென தமது தேர்தல் தோல்விக்கு இப்பொழுதே ஆருடம் கூறத் தொடங்கியுள்ளார். இதே வேளை ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து கிழக்கு மாகாணத்தில் கூட்டாட்சி அமைக்குமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் சூளுரைத்துள்ளார். சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டம் எட்டியாந்தோட்டையில் இடம்பெற்ற போதே இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார். தமிழ் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுகின்ற அதே நேரம் சிங்கள, மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக்கொள்ளும். எனவே கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து கூட்டாட்சி அமைக்கும் என எதிர்வு கூறியுள்ளார்.

இதே வேளை தேர்தல்களைக் கண்காணிக்கும் பவ்ரல் அமைப்பு, மாகாணசபைத் தேர்தல் பிரசாரத்திற்காக அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதாக குற்றம் சுமத்தியுள்ளது. அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படமாட்டாது என அளிக்கப்பட்ட உறுதிமொழியை மீறி அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கு சொந்தமான 30 வாகனங்கள் முற்று முழுதாக தேர்தல் பிரசாரப் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வருவதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியராச்சி தெரிவித்துள்ளார். வாகனங்கள் சோடிக்கப்படுவதாகவும் இது மோட்டார் போக்குவரத்து சட்டங்களை மீறுதலாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக வ்ட மத்திய மாகாணத்தில் சட்டவிரோத தேர்தல் பிரசார நடடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.


இக்குற்றச்சாட்டை முற்றாக மறுத்துள்ள அரசாங்கம் எதிர்க்கட்சியும், கூட்டமைப்பும் தமது தோல்விகளை மறைப்பதற்காக அரசாங்கத்தின்மீது வழமையாக சுமத்துகின்ற குற்றச்சாட்டாகவே இக்குற்றச்சாட்டை தாம் பார்ப்பதாக தெரிவித்துள்ளது. ஒட்டு மொத்தத்தில் கிழக்கு மாகாண தேர்தல் திருவிழா களைகட்டியுள்ள போதிலும் தமிழ் மக்கள் இத்தேர்தல் தொடர்பில் புத்திசாலித்தனமான முடிவுகளையே இம்முறை எடுப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல்களுக்காக மட்டுமே கடைவிரித்து வருபவர்களை இம்முறை தமிழ்மக்கள் நிராகரிப்பதற்கே வாய்ப்புகள் உள்ளன.

**கடந்த கால அரசியல் ஓட்டங்களின்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் சமூகத்தை பெருமளவில் அனுசரித்துச் செல்லவில்லை என்ற குற்றச்சாட்டு முஸ்லிம் சமூகத்திடம் பரவலாகக் காணப்படுகிறது. அங்குள்ள முஸ்லிம் கல்வியியலாளர்கள் தாங்கள் தமிழ் மக்களுடன் சகோதரத்துவத்துடன் வாழ்வதாகவும் ஆனால் தமிழ் அரசியல் தலைமைகள் தமது சமூகத்தை அனுசரித்துச் செல்ல தவறி வருவதாகவும் கூறுகின்றனர்.**



# மெனிக்பாம் நிவாரணக் கிராமம் டிசம்பர் மாதம் மூடப்படும்

## – மீள்குடியேற்ற அமைச்சர்



வவுனியா மெனிக்பாம் நிவாரணக் கிராமம் விரைவில் மூடப்படவுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்த நிவாரணக் கிராமத்தில் தற்போது சுமார் 800 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மாத்திரமே தங்கியுள்ளனர்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வவுனியா நிவாரணக் கிராமங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் அநேகமானவர்கள் ஏற்கனவே அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் ஏனையவர்களும் விரைவில் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படுவார்கள்.

இதற்கமைய இந்த வருடம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி மெனிக்பாம் நிவராணக் கிராமத்தை மூடுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும் என்றார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் நேற்று முன்னெடுக்கப்பட்ட மீள்குடியேற்ற நடவடிக்கையில் அமைச்சர் குணரத்ன வீரக்கோனும் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது 342 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் மீள்குடியேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் மந்துவில், ஆனந்தபுரம், அம்பலவன்பொக்கணை, முள்ளிவாய்க்கால் மேற்கு மற்றும் முள்ளிவாய்க்கால் கிழக்கு அகிய பிரதேசங்களில் மக்களை மீள்குடியேற்ற வேண்டியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

# திவிநெகும சட்ட மூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

பாராளுமன்றில் சமர்பிக்கப்பட்டுள்ள திவிநெகும என்ற சட்ட மூல ஆவணம் குறித்து ஆராயுமாறு கோரி உயர் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சமூர்த்தி அதிகாரிகள் சங்கம் நேற்று (16) இந்த மனுவை தாக்கல் செய்ததோடு மனுவின் பிரதிவாதியாக சட்ட மா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார்.

திவிநெகும எனப்படும் சட்ட மூல ஆவணம் எதிர்வரும் ஒகஸ்ட் 10ம் திகதி பாராளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இந்த சட்ட மூல ஆவணம் மாகாண சபையுடன் தொடர்புபட்டிருப்பதால் இது குறித்து மாகாண சபைகளுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என மனுவில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் அப்படி மாகாண சபைகளுக்கு அறிவிக்கப்படவில்லை என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே குறித்த சட்ட மூல ஆவணத்தை பரிசீலித்து அது அரசியல் யாப்புக்கு முறையானதாக இல்லையா என தீர்ப்பளிக்கும்படி மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# நூறு ரூபா நாணயத்தாளிலிருந்து நுரைச்சோலை நீக்கப்படவேண்டும்



2011ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூறு ரூபா நாணயத்தாளில் சீன நிறுவனமான "சீன இயந்திரம் மற்றும் பொறியியல் கூட்டுத்தாபனம் வழங்கிய 455 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நுரைச்சோலை மின்னாலையின் ஒளிப்படமானது அச்சிடப்பட்டிருந்தது.

அந்த ஒளிப்படத்தை குறிப்பிட்ட நாணயத்தாளிலிருந்து தெரிவித்துள்ளார். நீக்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கர்சாட் சில்வா இந்த நுரைச்சோலை மின்னாலையில் தொழிநுட்ப பிரச்சினைகள் காணப்படுவதுடன், மின்உற்பத்தியில் சீரற்ற தன்மை காணப்படுவதும், அடிக்கடி மின்வெட்டு நிகழ்வதும் குறிப்பிடத்தக்கது.

நாணயத்தாளில் காணப்படும் நுரைச்சோலை மின்னாலையின் ஒளிப்படமானது அபிவிருத்தி மற்றும் செழுமையைக் குறிக்கும் குறியீடாக காணப்படுகின்றது.

இவ் ஒளிப்படமானது தேசத்தின் அபிவிருத்தி மற்றும் சுபீட்சத்தை குறிக்கும் குறியீடாக அதிகாரிகள் சித்தரிக்கின்ற போதிலும், உண்மையில் இது நாட்டின் ஊழலை வெளிப்படுத்தும் குறியீடாக காணப்படுகின்றது. நுரைச்சோலை மின்னாலை திட்டத்தின் ஒப்பந்தப் புள்ளி தொடர்பாக ஆளும் அரசாங்கத்திற்கும் சீன அரசாங்கத்திற்கும் இடையில் இழுபறி நிலை காணப்படுவதே, மின்னாலை உற்பத்தி தடைப்படுவதற்கான பிரதான காரணம் ஆகும்.

தற்போது புழக்கத்திலுள்ள நூறு ரூபா நாணயத்தாளில் நுரைச்சோலை மின்னாலையின் ஒளிப்படம் அச்சிடப்பட்டுள்ளதானது தமக்கு கிடைத்துள்ள "நிகரற்ற பெருமை என சீன இயந்திர மற்றும் பொறியியல் கூட்டுத்தாபனம் தனது இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ளது.

இத்திட்டத்துடன் தொடர்புடைய தரப்புக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலை காணப்பட்ட டி சில்வா தெரிவித்துள்ளார். நுரைச்சோலை மின் திட்டத்தின் இழுபறிநிலைக்கு இலங்கையில் உள்ள இரு பிரதான கட்சிகளுமே பொறுப்பேற்க வேண்டும்.

இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்

# ஷவ்வால்மாத தலைப்பிறை இன்று பார்க்குமாறு அறிவிப்பு

ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறையை இன்று சனிக்கிழமை (ஓகஸ்ட் 18ஆம் திகதி) ம.்.ரிப் தொழுகை அடுத்து பார்க்கும் படி அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா அனைவரையும் வேண்டிக் கொள்கின்றது.

இது தொடர்பில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பிறைக்குழு செயலாளர் அஷ்-ஷைக் ஏ.எம்.ஏ.அஸீஸ் (மிஸ்பாஹி) விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் பிறை மாதங்களை கணித்துக் கூறும் பாரிய பொறுப்பை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, கொழும்பு பெரிய பள்ளிவாசல் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியவை மிகத் திறம்பட செய்து வருகின்றன.

இலங்கையில் முஸ்லிம்கள் இவ்வழிகாட்டலிலேயே ஹிஜ்ரி வ்ருடத்தினை பின்பற்றி வருகின்றனர். அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கடந்த 2009 செப்டம்பர் 6ஆம் திகதி பிறை பார்ப்பது பற்றிய 5தீர்மானங்களை நிறைவேற்றியது.

அதற்கமைவாக மாதாந்தம் பிறை மாதத்தைத் தீர்மானித்து இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு அறிவித்து வருகிறது. குறித்த தீர்மானங்கள் வருமாறு:


உள்நாட்டில் வெற்றுக்கண்களுக்கு பிறை தென்படுவதை அடிப்படையாகக் கொண்டே இஸ்லாமிய மாதம் தொடர்பான அனைத்து முடிவுகளும் பெறப்படும்.

தலைப் பிறையை பூமியிலிருந்து வெற்றுக்கண்களால் பார்க்க வேண்டும்.

வானியல் துறையில் புலமை பெற்ற முஸ்லிம் அறிஞர் குழுவொன்று அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமாவின் பிறைக் குழுவுக்குத் துணையாக செயற்படும்.

ஒரு நாளில் பிறை வெற்றுக் கண்களுக்குப் புலப்படுவது சாத்தியமற்றது என நம்பகமான முஸ்லிமான வானியல் அறிஞர்கள் உறுதி செய்யுமிடத்து, வானியல் அவதானத்தின் அடிப்படையிலான நிலைப்பாடு ஏற்றுக் கொள்ளப்படுவதோடு, அவ்வடிப்படையில் அன்றைய தினம் பிறை காண முடியாத நாளாகக் கொள்ளப்படும்.

பிறை வெற்றுக் கண்களுக்குத் தென்படுவது அசாத்தியமானது என முடிவு செய்யப்பட்ட நாளில் ஒருவரோ அல்லது பலரோ பிறை கண்டதாக கருதினால் அவரோ அல்லது அவர்களோ தலைமைத்துவத்திற்கு கட்டுப்படல் என்ற வகையிலும், முஸ்லிம் சமூகத்துடன் இணைந்து செயற்படல் என்ற வகையிலும் குறித்த நாளில் நோன்பு நோற்பதற்கோ, பெருநாள் கொண்டாடுவதற்கோ பிறரை தூண்டவோ, பிரகடனப்படுத்தவோ கூடாது. தனிப்பட்ட முறையில் அவரோ அல்லது அவர்களோ தான் அல்லது தாம் கண்டதாகக் கருதும் பிறையின் அடிப்படை



யில் செயற்படும் அனுமதியைப் பெறுவர்.

இத்தீர்மானங்களின் அடிப்படையில் சென்ற ஜுலை மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை ரமழான் மாதம் ஆரம்பமானது. அவ வகையில், எதிர்வரும் ஷவ்வால் மாதத்திற்கான பிறையை இன்று (ஓகஸ்ட் 18ஆம் திகதி) ம.்.ரிப் தொழுகை அடுத்து பார்க்கும் படி அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா அனைவரையும் வேண்டிக் கொள்கின்றது. சமூக ஒற்றுமையைக் கருத்திற் கொண்டு, இஸ்லாத்தின் கண்ணியத்தை காத்து, ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளை கொண்டாடுமா[று] கேட்டுக்கொள்கிறது".

இதேவேளை, ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறை வெற்று கண்களுக்கு தென்படும் பட்சத்தில் 011 5234044, 011 - 2432110, 011 - 2390783 மற்றும் 0777 - 366099 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக கொழும்பு பெரிய பள்ளிவாசலிலுள்ள மத்ரஸதுல் ஹமீதியா மண்டபத்தில் நடைபெறும் பிறை தீர்மானிக்கும் மாநாட்டிற்கு அறிவிக்கும் படி கோரப்பட்டுள்ளது.



அநீதிக்கு எதிரான தேசிய இயக்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் இடம்பெற்றது. ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பல அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் புத்திஜீவிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தீ பரவுவதை கட்டுப்படுத்த தீயணைப்பு வாகனங்கள்

(கொழும்பு)


காடுகளில் தீ பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களுக்கு தீயணைப்பு வாகனங்களை பெற்றுக்கொடுக்க சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.இதற்கமைய பதுளை, மொனராகலை உள்ளிட்ட மேலும் சில பிரதேசங்களுக்கு இந்த தீயணைப்பு வாகனங்கள் வழங்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் டி.எம்.யூ.ரி.பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

காடுகளை உரிய முறையில் பராமரிப்பது தொடர்பாக மக்களை தெளிவுபடுத்தி அவற்றைப் பாதுகாப்பதற்கான விரிவான திட்டமொன்றை தயாரித்துள்ளது. இந்த திட்டத்திற்காக பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.



இதேவேளை நேற்று முன்தினம் சொமாவத்திய காட்டில் பரவிய தீயினால் சுமார் 100 ஏக்கர் காடுகள் அழிவடைந்துள்ளதாக இடர்முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.

# கிளிநொச்சி சந்தை வர்த்தகர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வு




(கிளிநொச்சி)

ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்களுக்கும் கிளிநொச்சி சந்தை வர்த்தக சங்க பிரதிநிதிகளுக்கும இடையில் நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சந்திப்பில், கிளிநொச்சி சந்தை வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாகவும் எதிர்கால சந்தை நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதோடு எதிர்வரும் பருவ மழைக்கு முன் சந்தை வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பிலும் வர்த்தகர்களின் நலன்கள் தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினருடன் சந்தை வர்த்தகர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது சந்தை வர்த்தக சங்கத்தின் தலைவர் இரத்தினமணி, செயலாளர் மற்றும் சங்கத்தின் பிரதிநிதிகள் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பரமர் சங்கமம்



"காகத்திற்கு கனவிலும் இந்த எண்ணம்" என்று சிலேடையாக ஒரு சொற்றொடர் தமிழில் வழங்கப்பட்டு வருகிறதல்லவா?

இந்த நிலைமைதான் நம் நாட்டில் இப்பொழுது மலிந்து கிடக்கின்ற பண்பலை அலை வரிசை ஒலிபரப்புகளுக்கு ஏற்பட்டிருப்பதாகப் படுகிறது.

இக்காலத்தில் "வீட்டுக்கு வீடு வாசல்ப்படி" என்பதைப்போல் எந்த வீட்டைப் பார்த்தாலும் தொலைக்காட்சிப் பொட்டிதான் வீற்றிருக்குது. இதனால் வாசிப்புப் பழக்கம் அருகி விட்டதாக கூப்பாடு வேறை போடப்படும் காலம்.

அது போலவே ஒரு காலத்தில் வீட்டுக்கு வீடு வானொலிப்பொட்டிகள் கிடந்து அலறிக்கொண்டிருந்தன. அவைகளெல்லாம் பாவனையற்று கொல்லைப் புறங்களில் தூசி படித்துப் போய் கிடக்கின்றன.

இந்த இலட்சணத்தில் கிட்டத்தட்ட ஐந்து பண்பலை ஒலிபரப்புகள் தமிழில் சேவையாற்றுகிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத இடங்களில் வானொலிகள் பாவிக்கப்பட்டு வருகிறது.

அதில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகள் மறந்தே விட்ட நிலைமை தென்றல் அங்கனேக்க இடைக்கிடை ஞாபகத்துக்கு வந்து போகும்.

இதுக்கிடையே பண்பலையில் முந்தித் தோன்றிய சக்தியும், சூரியனும் போடுகிற போட்டி சிரிப்புக்கு இடமாகவே அமைந்து விடுகிறது. தமது நிகழ்ச்சிகளை கேட்குமாறு அவர்கள் போடுகின்ற கொட்டம் தனியாக சுவாரஸ்யம் மிக்க நிகழ்ச்சிகளாக அமைந்து விடுவதுமுண்டு.

"ஒரு நிமிடம் பேசு ஒரு இலட்சம் காசு" எண்டு சக்தி சொன்னால் - சூரியன் கேட்பதாகச் சொன்னால் 50 ஆயிரம் பரிசு இப்படி மற்றது அலறுகிறது.

இதனிடையே நமது நாட்டின் கிராமம், கிராமமாகச் சென்று சக்தி வானொலியை கேட்பவர்களைக் கண்டு பிடித்து ஆறுபடி அரிசு வழங்கும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தி வருவதையும் அவர்களின் வானொலி மூலமே கேட்டறிகிறோம்.

அதனையும் விஞ்சிக் கொண்டு கஷ்ட வீட்டு வாசல்களில் நாங்கள் சூரியன் எப்.எம் மட்டுமே சத்தமாகப் போட்டு கேட்கிறோம். என்னும் விளம்பரப் பலகையைத் தொங்க விட்டால் அதற்கு கையில் அகப்படும் பணத்தொகை வழங்குவதாகவும்

தொலைபேசியில் டயல் செய்து கேட்டாலும், வீதிகளில் மறித்து விசாரித்தாலும், கை எழுத்தில் எழுதிக் கேட்டாலும் சூரியன் வானொலி என்று சொன்னால் எழுதி வழங்கினால் ஆயிரக்கணக்கில் பணம் பரிசளிக்கப்படுமென்று ரசிகர்களின் காலடியில் வீழ்கின்ற நிலைக்கு ஒலிபரப்புகள் வந்துள்ளன.

வசந்தம், வெற்றி, ஆலை எப்.எம் அலைகளுக்கும் இந்த இரண்டுக்கும் இடையே அகப்பட்டு நசிந்து போகின்ற நிலைமைதான் காணப்படுகிறது.

போகிற போக்கைப் பார்த்தால் ஒலி ஊடகக்காரர்களுக்கு மிகக் கெதியில் தட்டினாலும் ஆச்சரியமொன்றும் இல்லையல்லவா?

செல்லுங்கவன் பாப்பம்.

## பேருந்துகளால் நெருக்கடி

(சுன்னாகம்)

வீதியில் நின்று பயணிகளை ஏற்றும் தனியார் பேருந்துகளால் போக்குவரத்து நெருக்கடிகளும் விபத்துக்களும் ஏற்படுகிறத.

குறிப்பாக காங்கேசன்துறை வீதியில் சேவையிலீடுபடும் பேருந்துகள் பயணிகள் மறிக்கும் இடங்களில் திடீரென தரித்து பயணிகளை ஏற்றுவதால் இந்நிலைமை ஏற்படுகிறது. சாரதிகளும், நடத்துனர்களும் உரிய போக்குவரத்து விதிமுறைகளை மீறி தமது வருமானத்திற்காக இவ்வாறு செயற்படுவதால் வீதியில் பயணம் செய்யும் ஏனைய வாகனங்கள் நெருக்கடிகளை சந்திக்கிறது. காங்கேசன் வீதியில் உரியமுறையில் பேருந்து தரிப்பிடங்கள் வீதிக்குறிகள் காணப்படாத நிலையிலும் சாரதிகள் போக்குவரத்து விதிமுறைக்கு அமைவாகவே பேருந்துகளை நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்குவது சிறந்தது என பயணிகள் தெரிவிக்கின்றனர்.

(148)

## சந்நிதி முருகன் ஆலய கொடியேற்றம்

"சந்நிதியே உனது தாற்பரியம்"



செல்வச் சந்நிதியில் நின்று பார் உனது
சரித்திரமே தெரியும்,
செல்வச் சந்நிதியில் இருந்து பார் உனது
சாமர்த்தியம் புரியும்,
செல்வச் சந்நிதியில் பூசித்துப் பார் உனது
சௌக்கியம் நிறையும்,
செல்வச் சந்நிதியில் நீராடிப்பார் உனது
தாற்பாரியம் விளங்கும்.

கே.எஸ்.சிவஞானராஜா - கொக்குவில்.

## "அன்னதானக் கந்தனுக்கு சேவற்கொடி ஏறுகிறது

அமாவாசை நீங்கி பிரதமை கூடும் வேளை -இரவு
ஆற்றங்கரை வேலனுக்கு கொடி ஏறியது
அடியார்கள் புடை சூழ - பக்தர்கள்
அரோகரா என்ற சேவற்கொடி ஏறியது.
அகிலம் போற்றும் அன்னதானக் கந்தனுக்கு
ஆறுதல் தருமந்த கொடி ஏறியது.

பொலிகண்டி - விசிந்தன்

கந்தா கருணை அளித்திடுவாய்....

KIST
Kist பிஸ்கட் வகை, Kist குடி தண்ணீர்,
கொத்மலை பால், யோக்கட் போன்றவற்றின்
யாழ். மாவட்ட விநியோகஸ்தர்
மகிழ்ச்சியை பகிருங்கள்
சுவையை அனுபவியுங்கள்


நடராசா B.S
41, 49 மருதடி லேன்
நல்லூர்
021 4900624,
077 2229354

# விண்ணப்பம் கோரல்

இலங்கை prosthetics and Orthotics பாடசாலையினால் (SLSPO) கல்வியாண்டு 2012க்கு சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பிரந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

SLSPO நிறுவன இலங்கை பிரஜைகளுக்காக மூன்று வருட பயிற்சித்திட்டம் இருவருட கல்வி பயிற்சி மற்றும் ஒரு வருட உள்வாரி மருத்துவப் பயிற்சி விடயமாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சுகாதார அமைச்சின் நிப்போன் அறக்கட்டளை கம்போடிய அறக்கட்டளையுடன் இணைந்து SLOSP நிறுவனத்தினூடாக இலங்கையருக்கான செயற்கை உறப்புக்கள் தயாரிப்பு மற்றும் அவைகள் சம்பந்தமாக செயற்படுவதற்காக கல்வி மற்றும் பயிற்சி வழங்கப்படும்.

2012.09.10ஆம் திகதியில் 18-30 வயது எல்லைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

க.பொ.த.(சா/த) பரீட்சையில் ஆகக்குறைந்த இரு முறைகளுக்கு கூடாத வகையில் விஞ்ஞானம், கணிதம் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி, சிங்கள மொழி பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி.

க.பொ.த.(உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது விஞ்ஞான பாடங்கள் பிரிவில் பௌதீக விஞ்ஞானம்/உயிரியலுக்காக திறமைச்சித்தியுடன் மூன்று பாடங்களில் சித்தி. இருக்கவேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் தமது கையெழுத்துக்களில் ஆங்கில மொழியில் எழுதி அழைபபுக்காக ஒரு தொலைபேசி இலங்கத்தையும் குறிப்பிட்டு சான்றிதழ்களின் போட்டோ பிரதிகளுடன் கீழ் வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

பணிப்பாளர், (கல்வி பயிற்சி மற்றும் ஆய்வு) சுகாதார அமைச்சு "சுவசிறிபாய", 385, வணக்கத்திற்குரிய பத்தேசம விமலவங்க தேரர் மாவத்தை, கொழும் -10


மேலதிக தகவல்களை தொலைபேசி இலக்கம் 011 2960686 ஐ அழைத்தோ அல்லது வெப்பதளம் www.Slspo.com மூலமும் பெற்றுக்கொள்ளலாம். அல்லது விரிவான விளம்பரத்தினை அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அல்லது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பார்வையிடலாம். விண்ணப்ப இறுதித்திகதி 2012.09.10 ஆகம்.



# பிரித்தானியாவில் ஓடமாட்டேன்

பிரித்தானியாவில் எந்தவிதமான ஓட்டப் பந்தயத்திலும் தாம் மீண்டும் கலந்துகொள்ளப்போவதில்லை என உலகின் அதி வேக மனிதரான ஜமேக்காவின் உசைன் போல்ட் தெரிவித்துள்ளார். பிரித்தானியாவில் உள்ள வரிமுறைகளில் மாற்றம் கொண்டுவரப்பட்டால் மாத்திரமே தாம் மீண்டும் போட்டிகளில் கலந்துகொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த வரிமுறைகளால் அனுசரணை மற்றும் விளம்பர வருமானங் களில்பாதிப்புக்கள் ஏற்படுவதாக உசைன் போல்ட்கூறியுள்ளார். எனினும் பிரித்தானியாவில் தமக்கு அதிகளவான இரசிகர்கள் இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் உசைன் போல்ட் மொத்தமான 3 தங்கப் பதக்கங்களை சுவிகரித்தார்.

# ஒலிம்பிக் சபை மீது ஜமேக்கா கண்டனம்



(கிங்ஸ்டன்)

எங்கள் வீரர்கள் குறித்து கருத்து தெரிவித்த, சர்வதேச ஒலிம்பிக் சபை (ஐ.ஓ.சி.,) உறுப்பினர் டிக் பவுண்டுக்கு, ஜமேக்கா ஊக்க மருந்து தடுப்பு சபை, கண்டனம் தெரிவித்துள்ளது.

மேற்கிந்திய தீவுகளில் ஒன்றான ஜமேக்கா நாட்டு வீரர்கள், சமீப காலமாக தடகளத்தில் எழுச்சி பெற்று வருகின்றனர். இந்த நாட்டின் உசைன் போல்ட், பீஜிங், லண்டன் ஒலிம்பிக்கில் 100, 200 மற்றும் 4ஒ100 மீ., ஓட்டத்தில் தொடர்ந்து தங்கம் வென்றார். இதையடுத்து, இந்த வீரர்கள் ஊக்க மருந்து பயன்படுத்துவதாக சர்ச்சை எழுந்தது.

லண்டன் ஒலிம்பிக்கில் பங்கேற்ற, ஜமேக்கா வீரர்களிடம் நடத்தப்பட்ட ஊக்க மருந்து சோதனை குறித்து, ஐ.ஓ.சி.உறுப்பினர் டிக் பவுண்டு கூறுகையில், சில வீரர்களிடம் சோதனை நடத்துவது கடினமாக இருந்தது. இதிலுள்ள உண்மையை வெளிக்கொண்டுவரவேண்டும். அனைவரும் தீவிர கண்காணிப்பில் உள்ளனர் என, தெரிவித்திருந்தார்.

இதற்கு ஜமைக்கா ஊக்க மருந்து தடுப்பு சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இதன் தலைவர் வின்ஸ்டன் டேவிசன் கூறுகையில், டிக் பவுண்டு சொல்வது அப்பட்டமானபொய். எங்கள் வீரர்கள் ஊக்க மருந்து பயன்படுத்துகிறார்களா என சோதனை செய்தனர். அமெரிக்கா போன்ற பெரிய நாடுகளின் வீரர்களை இப்படி நடத்துவார்களா. மொத்தத்தில், சிறிய நாட்டின் மீது கொடூரமான முறையில் தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது என்றார்.


# உலக ருவென்ரி - 20 ஆஸி. அணி அறிவிப்பு

(மெல்போன்)

இலங்கையில் அடுத்த மாதம் (செப்டம்பர்) 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ருவென்ரி - 20 உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி அறிவிக்கப்பட்டது. அனுபவம் வாய்ந்த மைக் ஹஸி, டேவிட் ஹஸி, பிராட் ஹாக், கிளைண்ட் மெக்கே உள்ளிட்டோர் அணியில் இடம் பெற்றுள்ளனர். ருவென்ரி -20 அணியின் கப்டன் பதவியில் இருந்து தூக்கப்பட்ட கமரூன் வையிட் அணிக்கு மீண்டும் திரும்புகிறார். ஐ.பி.எல். கிரிக்கெட்டில் கலக்கியதால் அவருக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது.

அவுஸ்ரேலிய அணி வருமாறு:- ஜார்ஜ் பெய்லி (கப்டன்), வட்சன், டானியல் கிறிஸ்டியன், பேட்ரிக் கம்மின்ஸ், சேவியர் டோஹர்த்தி, பென் ஹில்பனாஸ், பிராட் ஹாக், டேவிட் ஹஸி, மைக் ஹஸி, மேக்ஸ்வெல், கிளைண்ட் மெக்கே, மிட்செல் ஸ்டார்க், மேத் வேட், டேவிட் வோர்னர், கமரூன் வையிட்.

# சர்வதேச போட்டிகளுக்குத் தயார்




(மும்பை)

சர்வதேச போட்டிகளில் பங்கேற்க மனதளவிலும், உடலளவிலும் தயாராக இருக்கிறோம் என, இந்திய அணி கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

இந்தியா, நியூசிலாந்து அணிகள் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றன. இது முடிந்தவுடன், இலங்கையில் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் நடக்கவுள்ளது. இதற்கான இந்திய அணியின் புதிய ஆடை அறிமுக விழா நடந்தது. இதில் பங்கேற்ற கப்டன் டோனி கூறியது: இலங்கைக்கு எதிரான தொடரில் பங்கேற்க, ஒவ்வொரு போட்டியின் போதும், அதிக இடைவெளி இருந்தது. தற்போது நீண்ட தொடரில் கலந்து கொள்ள மனதளவிலும், உடல் அளவிலும் தயாராகவுள்ளோம். யுவராஜ் சிங்கை டிரெசிங் ரூமில் மிஸ் பண்ணுகிறோம். இவரின் பணியை ஹோலி நிரப்பிவிட்டார். தற்போது மீண்டும் யுவராஜ் அணிக்கு திரும்பி இருப்பது, மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்த புதிய ஆடை பற்றி நிறைய ஆராய்ச்சிகள் நடக்கும். இந்த ஆடையினால் ஓட்டங்கள் அதிகமாகுமா என்பது பற்றியெல்லாம் தெரியவில்லை. ஆனால் அதிக வசதியாக உணர்கிறேன். ரசிகர்கள் தொலைக்காட்சியில் போட்டியை காணும் போது, வெள்ளை நிறத்தில் இருந்தால் டெஸ்ட் போட்டி என்றும், நீல நிறத்தில் இருந்தால் ஒரு நாள் போட்டி என்றும் கணிப்பார்கள். தற்போது இதன் மூலம் ருவென்ரி -20 போட்டி என்று அடையாளம் கண்டு கொள்வார்கள். மேலும் இந்த ஆடையில் மூவர்ணக் கொடியும் இடம்பெற்றுள்ளது. இது என் இதயத்தின் அருகில் உள்ளதால், கொஞ்சம் சிறப்பானது எனத் தெரிவித்தார்.

# ஆர்ஜென்ரீனா அசத்தல் வெற்றி



(பிராங்க்பர்ட்

ஜேர்மனிக்கு எதிரான சர்வதேச நட்பு கால்பந்து போட்டியில், ஆர்ஜென்ரீனா அணி அசத்தல் வெற்றி பெற்றது.

ஜேர்மனி, ஆர்ஜென்ரீனா அணிகள் மோதிய நட்பு கால்பந்து போ[illegible] ஜேர்மனியின் பிராங்க்பர்ட் நகரில் நடந்தது. போட்டியின் 32ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை, கோல் போஸ்ட்டில் அடித்து வீணாக்கினார் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸி. 45 ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் கெடிரா, சேம்சைட் கோல் அடித்தார்.

அடுத்து ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸி, ஏஞ்சல் டி மரியா (52, 73 ஆவது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். ஜேர்மனி சார்பில் ஹோவேட்ஸ், ஒரு கோல் அடித்தார். முடிவில், அர்ஜென்ரீனா அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றொரு நட்பு போட்டியில் இங்கிலாந்து, இத்தாலியை (2-1) வீழ்த்தியது.

# பங்களாதேஷ் அணி அறிவிப்பு

(டாக்கா)

சர்வதேசக் கிரிக்கெட் சபையின்உலக கிண்ண ருவென்ரி - 20 தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓரளவுக்கு எதிர்பார்க்கப்பட்ட அணியாகவே பங்களாதேஷ் அணி அமைந்துள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள பங்களாதேஷ் அணி:

முஷ்பிக்கூர் ரஹீம், மகமதுல்லா, தமிம் இக்பால், மொஹமட் அஷ்ரபுல், ஜுனைட் சித்திக்கி, ஜுஹருல் இஸ்லாம், ஷகிப் அல் ஹசன், நசீர் ஹொசைன், ஷியவுர் ரஹ்மான், எலியஸ் சனி, அப்துர் ரஷாக்,மஷரபி மோர் தஷா, ஷபீல் இஸ் லாம், பர்ஹத் ரேஷா, அபுல் ஹசன்.

# வெண்கலம் வென்ற சாய்னாவை சந்திக்கிறார் சச்சின் டெண்டுல்கர்

(ஹைதராபாத்)

லண்டன் ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற சாய்னாவை சந்திக்க ஐதராபாத் பறக்கிறார் இந்தியாவின் நட்த்திர துடுப்பாட்ட வீரர் சச்சின்.

லண்டன் ஒலிம்பிக் பட்மின்ரனில் அசத்திய இந்தியாவின் சாய்னா நேவல் வெண்கலம் வென்றார். இவர் பதக்கம் வென்றால் பி.எம்.டபிள்யூ., காரை பரிசாக தருவதாக ஆந்திர முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் சாமுண்டீஸ்வரநாத் உறுதி அளித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், சாய்னாவிடம் எப்போது பேசினாலும், இந்திய கிரிக்கெட்டின் சாதனை வீரர் சச்சினை பற்றி அதிகமாக விசாரிப்பார். எனவே, நான் உறுதி அளித்த பரிசை, அவர் கொடுத்தால் நன்றாக இருக்கும் என நினைத்தேன். இதன்னை ஏற்றுக் கொண்ட சச்சின், கார் சாவியை வழங்க உள்ளார் என்றார்.

சாய்னா கூறுகையில், எனது பரிசை சச்சினிடம் இருந்து பெற உள்ளது மகிழ்ச்சியான விடயம் என்றார்.



# இலங்கை கோரிக்கை

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி –20 தொடருக்கானஅணிகளை அறிவிப்பதற்கு மேலதிக கால அவகாசத்தை வழங்குமாறு இலங்கைக் கிரிக்கெட் சபை கோரிக்கை விடுத்துள்ளது. இலங்கை உட்பட இன்னும் சில நாடுகள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன. சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி –20 தொடருக்கான அணிகளை அறிவிப்பதற்கான இறுதித்தினமாக இன்றையதினமேகாணப்பட்டிருந்தது. இதுவரை அவுஸ்ரேலியா, இந்தியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், பங்களாதேஷ், சிம்பாப்வே அணிகள் தங்களது அணிகளை அறிவித்துள்ளன. இந்நிலையில் இலங்கையில் தற்போது இலங்கா பிரீமியர் லீக் தொடர் தற்போது தான் ஆரம்பித்துள்ள நிலையில் இலங்கை அணியைத் தெரிவுசெய்வதற்கு மேலதிக காலம் கோரிக்கை விடுத்தது.

# லோட்ஸ் டெஸ்ட்; இங்கிலாந்து ஆதிக்கம்


(லண்டன்)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் இங்கிலாந்து அணிக்கு மிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டி லோட்ஸ் மைதானத்தில் நேற்று முன் தினம் ஆரம்பமானது.

நா- ணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய தென்னாபிரிக்க அணி தொடர்ச்சியான இடைவெளியில் விக்கெட்டுக்களை இழந்தது. ஒரு கட்டத்தில் 5 விக்கெட்டுக்களை இழந்து 105 ஓட்டங்களை தென்னாபிரிக்க அணி பெற்றிருந்தது. தொடர்ந்து வந்த வீரர்கள் சிறப்பாக ஆடி தென்னாபிரிக்க அணியை ஓரளவு ஸ்திரப்படுத்தினர். இறுதியில்முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஜே.பி.டுமினி 61, வேர்ணன் பிலாந்தர் ஆட்டமிழக்காமல் 46, ஜக்ஸ் ருடோல்ப் 42, ஏ.பி.டி.வில்லியர்ஸ் 27, அல்விரோ பீற்றர்சன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஜேம்ஸ் அன்டர்சன் 58 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஸ்டீவன் ்.பின் 68 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதேவேளை, இப்போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெறும் பட்சத்திலேயே டெஸ்ட் தரப்படுத்தலில் தொடர்ந்தும் முதல் நிலையை தக்கவைத்துக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. தென்னாபிரிக்கா 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.



விளையாட்டுச் செய்திகள்

# கிண்ணம் வென்றது ஆவரங்கால் இந்து

(அச்சுவேலி)

அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டித் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

இக்கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் ஆவரங்கால் மத்திய அணியும் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் மோதிக்கொண்டன.

ஐந்து சுற்றுக்களைக்கொண்ட இறுதிப்போட்டியில் முதல் சுற்றை ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25 - 23 என்ற புள்ளியடிப்படையில் தனதாக்கியது. இரண்டாவது சுற்றை ஆவரங்கால் மத்திய அணி 25 - 22 என்ற புள்ளியடிப்படையில் கைப்பற்றியது.

மூன்றாவது சுற்றிலும் ஆவரங்கால் மத்தி 25 - 18 என்ற புள்ளியடிப்படையில் மூன்றாவது சுற்றையும் கைப்பற்றியது. நான்காம் சுற்றை ஆவரங்கால் இந்து இளைஞர் 26 - 24 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. ஐந்தாம் சுற்றில் 15 - 8 என்ற புள்ளியடிப்படையில் ஐந்தாம் சுற்றை இலகுவாக கைப்பற்றி ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கிண்ணத்தை தனதாக்கியது. (93, 118)

## விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் வழிகாட்டலில் வட மாகாணத்தில் கடமையாற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 13ஆம் திகதி வட மாகாணபிரதம செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி, வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோரிடம் இருந்து விளையாட்டு உபகரணங்களை வட மாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் எஸ். அண்ணாதுரை பெற்றுக் கொண்டார்.

சப்பாத்துக்கள் மற்றும் பைகள் அடங்கிய விளையாட்டு உபகரண பொதி மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டு பயிற்றுனர்கள் ஆகியோருக்கு கையளிக்கப்படவுள்ளது. (93)

## வவுனியா பிறிமியர் லீக்

### யுனிபைட், ரெக்ரேஷன், செவ்வானம் அணிகள் வெற்றி

(வவுனியா)

செவ்வானம் விளையாட்டுக்கழகத்தினால் வவுனியாவில் முதன் முறையாக நடத்தப்பட்டு வரும் வவுனியா பிறிமியர் லீக் (வி.பி.எல்.) ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் லீக் சுற்றுப் போட்டிகளில் யுனிபைட், ரெக்ரேஷன், செவ்வானம் ஆகிய அணிகள் வெற்றிபெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற முதல் போட்டியில் யுனிபைட் அணியும் வடதாரகை அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யுனிபைட் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விதுஷ் 20 பந்துகளில் 29 ஓட்டங்களையும், கஜன் 15 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சிதர்ஷன், விதுர்ஷன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 127 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வடதாரகை அணி 19 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது. இதில் பிரசாஷ் 32 பந்துகளில் 31 ஓட்டங்களையும், அசங்க 21 பந்துகளில் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சஞ்சிவன் நான்கு, விதுஷ் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக சஞ்சிவன் தெரிவானார்.


தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ரெக்ரேஷன் அணியும், வி.பி.எ. அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ரெக்ரேஷன் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரகாஷ் 37, சாள்ஸ் 29, ருபன் 25, துமிந்த 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கோபி, வசந்தன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 168 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வி.பி.எல். அணி 19.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் குமணேஷ் மட்டுமே அதிரடியாக ஆடி 73 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் டினோ, துமிந்த தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக துமிந்த தெரிவானார்.

மற்றுமொரு போட்டியில் செவ்வானம் அணியும், வானவில் அணியும் மோதின. இதில் முதலில் ஆடிய செவ்வானம் அணி 19.3ஓவர்கள்நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுதர்சன் 48, ரேகன் 25 ஓங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கஜா மூன்று, வினோத் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.பதிலுக்கு 175 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வானவில் அணி 18.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது. இதில் டினோஷன் 43, கஜா 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெயபால் மூன்று, சிவசாலி, சுரேன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக சுதர்ஷன் தெரிவானார். (93)

## வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க சிறுவர்களுக்கான புத்தகம் அறிமுகம்




(கொழும்பு)

சர்வதேச கிரிக்கெட் சபை மற்றும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் எழுத்தறிவு, கல்வியில் பாலியல் சமத்துவத்தை ஊக்குவிப்பதை இலக் காகக் கொண்டு செயற்படும் இலாப நோக்கற்ற சர்வதேச அமைப்பான Room to Read ஆகியவற்றுடனான ஒன்றிணைந்த முயற்சி ஒன்றின் ஊடாக இலங்கை கிரிக்கெட் நட்சத்திரமான அஞ்சலோ மத்தியூஸ் சிறுவர்களுக்கான புத்தகம் ஒன்றை அறிமுகம் செய்து வைத்துள்ளார்.

ஆங்கிலத்தில் இப்புத்தகததிற்கு Little Angelo's Big Day in Cricket என்று தலைப்பு இடப்பட்டுள்ளது. சிங்களத்தில் புஞ்சி அஞ்சலோ எனவும் தமிழில் சிறிய வயதினில் அஞ்சலோ எனவும் தலைப்பிடப்பட்டுள்ள இப்புத்தகமானது, நாடெங்கிலும் உள்ள இளம் கிரிக்கெட் ரசிகர்களின் இதயங்களை கொள்ளை கொள்ளும் விதத்திலும் அதேநேரம் வாசிப்புப் பழக்கத்தை வளர்ப்பதற்கு உதவும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தரம் 1 மற்றும் 2 இல் கல்வி கற்கும் ஆரம்ப நிலை மாணவர்களுக்கென வடிவமைக்கப்பட்டுள்ள இப்புத்தகமானது தயான் செனவிரத்ன வி-னால் எழுதப்பட்டுள்ளதுடன், அருண கீர்த்தி கமகேவினால் விளக்கப் படங்கள் வரையப்பட்டுள்ளன.

சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள இப்புத்தகத்தில் அஞ்சலோ மத்தியூஸ் 10 வயதுடைய சிறுவனாக சித்தரிக்கப்பட்டுள்ளதுடன், அவர் ஒரு தனிப்பெரும் கிரிக்கெட் வீரராக முன்னேறுவதற்கான பயணத்திற்குஆரம்பமாக அமைந்த - அக்காலத்தில் அவர் பங்குபற்றிய நகத்தை கடித்துக்கொண்டு இரசிக்குமளவுக்கு விறுவிறுப்பான போட்டிகள் குறித்தும் இதில் விபரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கிரிக்கெட் வீரரான அஞ்சலோ மத்தியூஸ் இந்நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கையில், சர்வதேச கிரிக்கெட் சபை மற்றும் Room to Read அமைப்பு ஆகியவற்றுக்கிடையிலான இந்த சர்வதேச அடிப்படையிலான பங்காளித்துவ முயற்சியில் பங்கெடுப்பதையிட்டு பெருமிதம் அடைகின்றேன்.

உள்நாட்டில் உள்ள சமூகங்களுக்கு நன்மை அளிக்கக் கூடியதாகவும், அதேநேரம் சிறுவயதில் வாசிப்புப் பழக்கத்தை பேண வேண்டியதன் அவசியம் குறித்து அறிவைப் புகட்டுவதற்கு உதவுவதாகவும் இம்முயற்சி அமைந்துள்ளது.

இலங்கையிலுள்ள எதிர்பார்ப்புமிக்க அதிகளவிலான இளம் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் இரசிகர்களுக்கு உத்வேகத்திற்கான மூல ஆதாரமாக இப்புத்தகம் திகழும் அதேநேரம், இளைய தலைமுறையினருக்கு மத்தியில் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிப்பதற்கு துணையாகவும் அமையும் என்று நான் நம்புகின்றேன் என்றார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான டேவிட்றிச்சர்ட்சன் கூறுகையில், உலகெங்கும் வாழும் இளைய சமுதாயத்தினரின் வாழ்க்கைக்கு எழுத்தறிவும் கல்வியறிவும் மிக மிக முக்கியமானவையாகும். எனவே வாசிப்பை மேலும் மனமகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றாக மாற்றுவதற்கு உதவும் வகையிலான இந்த முயற்சியில் Room to Read அமைப்புடன் இணைந்து பண்ணியாற்றுவதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். இதனை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகள் கிரிக்கெட்டினால் சமூகத்திற்கு வழங்கப்படக்கூடிய சாதகமான பங் களிப்புக்களை உறுதிப்படுத்தும் வகையிலமைந்த சர்வதேசகிரிக்கெட் சபையின்அர்ப்பணிப்பினை அடிப்படையாகக் கொண்ட முன்னெடுப்பாகும் எனக் குறிப்பிட்டார்.

## பயிற்றுநர் இணைவதை தடுத்தனர் அதிகாரிகள்

### இலங்கை வீரர்கள் குற்றச்சாட்டு



(கொழும்பு)

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின்போது, தமது உள்ளூர் பயிற்றுநர்கள் தம்முடன் இணைந்து கொள்வதை அதிகாரிகள் தடுத்ததாகவும் இதனால் தமது செயற்பாடுகள் பாதிக்கப்பட்டதாகவும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றியபின்னர் நாடு திரும்பிய இலங்கை போட்டியாளர்கள் தெரிவித்தனர்.

தனது பயிற்றுநர் தன்னுடன் இணைந்துகொள்வதை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரிகளிடம் தான் கோரிக்கை விடுத்ததாகவும் ஆனால் அதற்கு பலன் கிடைக்கவில்லை எனவும் துப்பாக்கி சுடுதல் போட்டியில் பங்குபற்றிய மங்கள சமரகோன் கூறினார்.

பிரிகேடியர் கே.டபிள்யூ.எட்மன்ட் மற்றும் புஷ்பமாலி ராமநாயக்க ஆகிய எனது இரு பயிற்றுநர்களில் ஒருவரை அனுமதிக்கமாறு நான் அதிகாரிகளிடம் கோரினேன். போட்டியின்போது ஒரு பயிற்றுநர் அவசியம் என நான் விளக்கினேன். போட்டியின்போது பயிற்றுநர் மிக அவசியம் என்பதை நான் மிகவும் உணர்ந்தேன் என அவர் கூறினார்.

முன் கால் இறுதிப் போட்டியின்போது பயிற்றுநரின் ஆலோசனை மிகப் பெரும் உதவியாக இருக்கும் என இலங்கை குழுவின் தலைவர் நிலூக கருணாரட்ன தெரிவித்தார்.

பொலிஸ் பயிற்றுநர் ஒருவரும் எனது தந்தையினதும் உதவி எனக்கிருந்தது. ஆனால், இந்தியருடன் நான் போட்டியிட்டபோது, சர்வதேச அனுபவம் கொண்ட பயிற்றுநர் ஒருவர் என்னுடன் இருக்க வேண்டுமென்பதை உணர்ந்தேன் என அவர் தெரிவித்தார்.

லண்டன் ஒலிம்பிக்கில் இலங்கையின் சார்பில் 7 போட்டியாளர்கள் பங்குபற்றிய நிலையில் அவர்களுடன் 30 அதிகாரிகள் கலந்துகொண்டதாகச் செய்திகள் வெளியாகிருந்தன.

# பெயரில் என்ன இருக்கிறது?



எனது மூத்தவன் கனடா வந்து பாடசாலையில் சேர்ந்த முதன்நாள் வகுப்பில் ஆசிரியர் அவனது பெயரைக் கேட்டிருக்கிறார். “கரிகாலன்”. அவன் மீளமீள நான்குதடவை சொல்லியும் அவரால் அந்த உச்சரிப்பை உருப்போட முடியவில்லை. இதுவொன்றும் பெரிய கஸ்டமான பெயர் அல்ல. தமிழில் ஐந்து எழுத்துக்கள் மட்டுந்தான். முடிவில் “ஹலி” என அழைக்கலாமா? என்றாராம். இவனும் அலுத்துப்போய் சரி என்றிருக்கிறான். இன்று வரை அவன் நண்பர்களால் “ஹலி” என்றே அழைக்கப்படுகிறான். இதுபோல் ஆசிரியரின் பெயரை தனக்கு ஏற்றால் போல் இவன் மாற்றி அழைக்க அந்த ஆசிரியர் அனுமதித்திருப்பாரா? ஊரில் என்றால் இது சாத்தியமா? இதை அவன் அனுமதித்திருப்பானா? அல்லது நான்தான் விட்டிருப்பேனா? பாடசாலை சென்று அந்த ஆசிரியரோடு சண்டை போட்டிருக்கமாட்டேன்? என்னதான் பல்கலாச்சாரம் என்று சொன்னாலும் கூட நாங்கள் இன்னொரு நாட்டின் அடிமை இனமாக மாறியதால் அல்லவா எல்லாவற்றிற்கும் பணிந்து போகிறோம்.

கடந்த வாரத்தில் ஒருநாள் என் மைத்துனர் வீட்டுக்கு போயிருந்தேன். அங்கு மிகச் சுவாரசியமான விடயம் ஒன்று பேச்சுவாக்கில் வந்தது. அவர்கள் வீட்டிலிருந்து ஐந்து வீடு தள்ளி ஒரு இளம் குடும்பம் குடிவந்திருந்தது. தினமும் அந்த வீட்டுப் பெண் இவர்கள் வீட்டைத் தாண்டி செல்வார். அதிக நாட்களில் தலைக்கு மொட்டாக்குப் போட்டிருப்பார். ஆனால் அது கட்டாய விதியாகத் தெரியவில்லை. சில சமயம் தலை மூடப்படாமலும் இருக்கும். அவரது தோற்றத்தையும் செயல்பாடுகளையும் அவதானித்து இவர்கள் பாக்கிஸ்தான், ஆப்கானிஸ்தான் அல்லது ஈரான் போன்ற இஸ்லாமிய நாட்டு குடும்பமாக இருக்கலாம் என நினைத்திருந்தனர். ஆறு ஏழு வருடங்களாகிவிட்டது. அவர்களுக்கு குழந்தைகள் பிறந்தன. வளர்ந்தன. இப்போ பாலர் பள்ளிக்கு போகத் தொடங்கிவிட்டனர். இருந்தும் ஒருநாளில் கூட இவர்களுடன் பேசும் சந்தர்ப்பம் வாய்த்ததில்லை. சில மாதங்களுக்கு முன் என் மைத்துனர் தன் பேரக்குழந்தையுடன் வீட்டின் முன் நின்றிருக்கிறார். அந்த பிள்ளைகள் இந்தக் குழந்தையைக் கண்டதும் குதூகலித்து குழந்தையுடன் விளையாடத் தலைப்பட்டிருக்கிறார்கள். பிள்ளைகளின் தாயார் விளையாடுங்கள். ஆனால் கொஞ்ச (முத்தங்கொடுக்க) வேண்டாம் என கொஞ்சு தமிழில் சொல்லியிருக்கிறார். என் மைத்துனருக்கு அதிர்ச்சி.

“நீங்க தமிழா?”


“ஆமா”

இவர் விடவில்லை. அடுத்த கேள்வியை வைத்தார். “இலங்கையா தமிழ் நாடா?” இது எங்களிடம் முதலில் வருகிற வழக்கமான கேள்விதான். நல்லகாலம் “நீங்க யாழ்ப்பணத்தில் எவடம்?” எனக் கேட்கவில்லை. “இரண்டும் இல்லை” என்றிருக்கிறாள் அவள். நாங்கள் எப்போதும் முன் முடிபுகளோடு வாழ்பவர்கள். நிச்சயமாக மைத்துனரின் மூன்றாவது கேள்வி “அப்படியாயின் மலேசியாவா” என்பதாகவே இருந்திருக்கும். ஆனால் அந்தப் பெண்மணி அதற்கு இடங்கொடுக்கவில்லை. “இந்தோனேசியாவிலுள்ள சிறிய தீவு” என்கிறாள். இவர் வெலவெலுத்துப் போனார்.

ராஜராஜன் படையெடுத்துச் சென்ற போது அவனுடன் போனவர்கள். இப்போ ஆயிரமாண்டுகள் கழிந்தது. தமிழே பேசுகிறார்கள். தமிழர்களாக வாழ்கிறார்கள். கனடா வந்தபின்பும் கூட இங்கு பிறந்த தங்கள் பிள்ளைகளோடு தமிழிலே பேசுகிறார்கள். அன்று நானும் தற்செயலாக அப் பெண்மணியை சந்தித்தேன். என் சகோதரி அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். “அருகிலா இருக்கிறீர்கள் அண்ணா?” என்றார். அவரது தூயதமிழ் என்னை அதிசயிக்க வைத்தது. “இல்லை அரைமணி நேரத்துக்குள் நடக்கும் தூரத்தில்” என்றேன்.

என் வீட்டின் நேர் எதிரே வீட்டில் வசிப்பவர் ஜெய்நாராயண். அடிக்கடி அவரோடு உரையாடும் சந்தர்ப்பம் கிடைக்கும். கயானா நாட்டின் இந்திய வம்சாவழியினர். இப்போ அவருக்கு அறுபது வயதிருக்கும். அவரின் பாட்டனார் கூலித்தொழிலாளியாக நாடுகடத்தப்பட்டவர். அப்படியாயின் ஒரு இருநூறு ஆண்டுகளுக்குள்தான் அவர்கள் இடப்பெயர்வும் வாழ்வும் அடங்கும். இருந்தும் இவர்களுக்கு இந்திய மொழி எதுவும் தெரியாது. தாங்கள் இந்தியாவின் எந்த மாநிலம்.? எந்த மொழிக்குடும்பம்.? தங்கள் முன்னோர் பேசிய மொழி என்ன? எதுவும் தெரியாது. அவரின் பிள்ளைகள் திருமண வயதை எட்டியவர்கள். அவர்களின் பெயர்களைக் கேட்டேன். மூத்தவள் பெயர் “அமலாதேவி” அடுத்தவள் “அஞ்சலிதேவி”. நான் அந்தப் பெயர்களை உச்சரித்தேன். எனது வாயிலிருந்து “தேவி” என வந்ததை “டேவி” என்று திருத்தினார். “கனகரட்னம்” “ராஜரட்னம்” போன்ற எம்மவர்களின் பெயர்களில் இரத்தினம் அல்லது ரத்தினம் என்ற சொல் “ரட்னம்” ஆனதை நினைத்துக் கொண்டேன்

ஆயிரம் வருடங்களுக்கு முன் ராஜராஜன் படைகளோடு இந்தோனேசியா வரை சென்று அந்த நாட்டை வெற்றிகொண்டான். அங்கு வாழ்ந்தவர்கள் இன்றும் தங்கள் மொழியை மறக்காமல் தமிழோடு வாழ்கிறார்கள். இருநூறு ஆண்டுகளுக்கு முன் கயானா சென்றவர்கள் எல்லாவற்றையும் இழந்து வெறும் இந்தியப் பெயர்களோடு மட்டிலுமே தொங்கி நிற்கிறார்கள். இதற்கான காரணம் என்னவாக இருக்கும். ராஜராஜன் இந்தோனேசியாவை வெற்றிகொண் டான். அதனால் அதிகாரம் பெற்றவனின் மொழி என்பதால் இன்றும் அங்கு தமிழ் அவர்கள் பேச்சுமொழியாக இருக்கிறதா? ஆங்கிலேயரால் வெற்றிகொள்ளப் பட்டு கயானாவுக்கு கூலிகளாக கொண்டுவரப்பட்டவர்கள் அதிகார மொழியான ஆங்கிலத்துக்கு மாறினார்களா? அப்படியாயின் எல்லாம் இழந்து அகதிகளாக புலம் பெயர்ந்த எம்மிடம் எவ்வளவு காலம் எங்கள் மொழி தங்கி நிற்கப் போகிறது? கயானாவுக்கு போனவர்களிடம் பெயர்களாவது எஞ்சியிருக்கிதே. ஆனால் எங்களிடம்?



- திருமாவளவன் -




# காக்கா ராதாகிருஷ்ணன்

மறைந்த நடிகர் காக்கா ராதாகிருஷ்ணனுக்கு அந்தப் பெயர் ஏன் வந்தது?

பி.யு.சின்னப்பாவின் “மங்கையற்கரசி“ (1949) படத்தின் மூலம் தான் திரையில் காக்கா அறிமுகமானார். காக்கா பிடித்தால் தான் முன்னுக்கு வர முடியும் என்பதைக் கேட்க நேர்ந்த ராதா கிருஷ்ணன் சிரத்தையுடன் நிஜமாகவே ஒரு காக்கையைப் பிடித்துக்கொண்டு வருவார்! அதனால் தான் காக்கா ராதாகிருஷ்ணன்!

முத்துராமன், வாணிஸ்ரீ நடித்த கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் “தபால்காரன் தங்கை”(1970)யில் தியேட்டரே கலகலக்க “காதர் பாட்சா” என்ற அவர் வசனம் பிரபலம். நடிகர் சங்கத் தலைவர் தேர்தலில் எம்.ஜி.ஆரை எதிர்த்துப் போட்டியிட்டவர் காக்கா ராதாகிருஷ்ணன்.



# முதல் பூட்டு சாவி

பூட்டு சாவியை முதன்முதலில் கண்டுபிடித்து பழக்கத்துக்கு கொண்டு வந்தவர்கள் அசிரியர்கள். அந்தக் காலத்து அசிரியா தற்போதைய ஈராக்கின் வட பகுதியாகும். சுமார் 4,000 ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் பூட்டு சாவியை பயன்படுத்தி வந்ததற்கான சரித்திர சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அசிரியர்கள் பயன்படுத்திய பூட்டுகள் மரத்தினால் ஆனவை. சாவியும் மரத்தினால் ஆனதுதான். அது மிகப்பெரியதாக இருக்கும். எனவே வெளியூர்களுக்குச் செல்லும்போது வீட்டைப் பூட்டிவிட்டு, சாவியைத் தோள்மீது வைத்துத்தான் சுமந்து செல்வார்களாம். இவர்கள் பயன்படுத்தியதைப் போன்ற பூட்டு - சாவிகள் எகிப்து, ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகளில் கண்டுடெடுக்கப்பட்டுள்ளன.

உலோகத்தால் பூட்டு - சாவி செய்யும் முறையைக் கண்டுபிடித்தவர்கள் ரோமானியர்கள். அவர்கள் கையாண்ட முறையின் அடிப்படையில்தான் தற்போதைய பூட்டு-சாவிகள் தயாரிக்கப்படுகின்றன.

# செல்வமணிக்குக் கிட்டாத ரஜினி படம்!

ரஜினிகாந்தின் மெகா ஹிட் படமான “பாட்ஷா”வை முதலில் ஆர்.கே.செல்வமணிதான் இயக்குவதாக இருந்தது. செல்வமணியை அழைத்த ரஜினி, “வேறு எந்த கமிட்மென்டையும் எடுத்துக்கொள்ள வேண்டாம் திரைக்கதை வேலை முடிஞ்சதும் சூட்டிங் போயிடலாம்” என்று கூறியுள்ளார்.

இதை கேள்விப்பட்ட விஜயகாந்த் தரப்பினர் செல்வமணிக்கும் தெரியாமல், விஜயகாந்த் நடிக்கும் படத்தை செல்வமணி இயக்குவதாக செய்தித்தாள்களில் விளம்பரம் கொடுத்தனர். இதைக் கண்டு அப்செட் ஆன ரஜினி செல்வமணியை நீக்கிவிட்டு சுரேஷ் கிருஷ்ணாவை ஒப்பந்தம் செய்தார்.



இந்தப் பிரச்சினையில் செல்வமணிக்கும் ரோஜாவிற்கும் இடையே கடுமையான சண்டை ஏற்பட்டு அவர்களது காதலில் ஓர் விரிசல் ஏற்பட்டது என்பது கூடுதல் தகவல்.

# ஆரம்பகால அஜீத்!

ரஜினிக்குப் பிறகு தமிழ் சினிமாவின் வசூல் மன்னனாகச் சொல்லப்படுபவர் அஜீத். ஆரம்ப காலத்தில் அவருக்குப் பேசப்பட்ட சொற்ப சம்பளத்தை வாங்குவதற்காக, அவர் நடையாய் நடந்து அவமானப்பட்டிருக்கிறார்.

அஜீத் அவருடைய சக போட்டியாளருடன் இணைந்து நடித்த ஒரே படமான இப்படத்தில் ஒரு சிறு வேடத்தில் நடித்திருப்பார். இதற்காக அஜீத்துக்கு பேசப்பட்ட சம்பளம் மிக மிகக் குறைவு. ஒரு அலுவலக ஊழியரின் குறைந்தபட்ச சம்பளம் அளவிற்குக் கூட கிடையாது. படத்தை நடித்து கொடுத்த பிறகும் கூட அஜீத்தின் சம்பளம் முழுமையாக தரப்படவில்லை. இதை வாங்குவதற்காக மதிய உணவு நேரத்தில் ஒரு பைக்கில் தயாரிப்பாளர் அலுவலகத்திற்கு தினமும் வருவார். அப்போது அந்த தயாரிப்பாளர் இப்படி கூறுவாராம் “வந்துட்டான்யா...சாப்பாட்டு நேரத்துக்கு. அவனுக்கு சாப்பாட்டைப் போட்டு அனுப்பி விடுங்க. சம்பளம் அப்புறம் வந்து வாங்கச் சொல்லுங்க” என்று. இந்த அவமானங்களுக்கு பின்னராவது அஜீத்துக்கு சம்பளம் கிடைத்ததா என்றால் பதில் இல்லைதான்.



# நிதானம் இழந்த தலைமை

- லெ. முருகபூபதி கட்டுரையிலிருந்து.



ரோஹன விஜேவீராவும் தோழர்களும் விடுதலை செய்யப்பட்ட 1977 காலப்பகுதியில் புலிகள் இயக்கம் ஒரு நூலை தமிழகத்தில் அச்சிட்டு வெளியிட்டிருந்தது. அப்பொழுது அந்த இயக்கத்தில் உமாமகேஸ்வரனும் பிரபாகரனும் இணைந்திருந்தனர்.

அந்த நூல் எனக்குக் கிடைத்தது. குற்றவியல் நீதி ஆணைக்குழுவில் ரோஹன விஜேவீராவின் வாக்கு மூலம் சுருக்கமாக தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அந்த நூலில் பதிவுசெய்யப்பட்டிருந்தது. ஜே. வி.பி.யின் தோற்றம், வளர்ச்சி தொடர்பாகவும் பரந்துபட்ட மக்களின் ஆதரவு இல்லாமல் அதன் ஆயுதப்புரட்சிக்கு நேர்ந்த தோல்வி பற்றியும் அந்நூலில் விமர்சிக்கப்பட்டிருந்தது.

இறுதியில், மக்கள் ஆதரவு அற்ற எந்தவொரு போராட்டமும் தோல்வியையே தழுவும் என்றும் தங்களது தமிழ் மக்கள் தொடர்பான விடுதலைப் போராட்டத்திற்கு ஜே.வி.பி.யின் போராட்டமும் அதன் வீழ்ச்சியும் சிறந்த படிப்பினையாக அமையும் என்றும் அந்த நூலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒரு நாள் இந்த நூலை எடுத்துக்கொண்டு விஜேவீராவின் கட்சித்தலைமையகம் அமைந்திருந்த ஆமர்வீதி- புளுமென்டால் வீதி சந்தியிலிருந்த மரக்காலைக் கட்டிடத்திற்குச் சென்றேன். அவருக்கு அருகிலிருந்து நூலை படித்துக்காண்பித்து மொழிபெயர்த்தேன். சிரித்தவாறு கேட்டுக்கொண்டிருந்தார். அவரது வாக்குமூலம் சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டிருந்தமை கண்டு திருப்திப்பட்டார். எனினும் தனது தரப்பு வாதங்களை என்னிடம் அவர் சொல்லவில்லை. தமிழ் சிங்கள. முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வைத்தான் தனது கட்சி தொடர்ந்து பேசும் என்று மட்டும் சொன்னார்.

அதன் பிறகு பல சந்தர்ப்பங்களில் அவருடன் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாக விவாதித்தேன். ஏற்கனவே சண்முகதாஸன் போன்றவர்களினால் அவருக்குள் விதைக்கப்பட்டிருந்த இந்திய விஸ்தரிப்பு வாதம் என்ற கருத்தியலில் தொடர்ந்தும் பிடிவாதமாகவே இருந்தார்.

ஆரம்பத்தில் பஸ் நிலையங்கள், பஸ் தரிப்பிடங்களில் கால்கடுக்க நின்று பஸ்ஸிலேயே பயணம் செய்து கூட்டங்களுக்குப் பேசச்செல்வார். கடையில் பார்சல் சோறு வாங்கி பகிர்ந்துண்பார்.

கட்சிப்பணிகளுக்கு சிக்கனமாகவே செலவிடுவார். தரையிலே செங்கொடிகளை அல்லது பேப்பர்களை விரித்து படுத்துறங்குவார். சிறையிலிருந்து வெளியானதும் எளிமையாகவே வாழ்ந்தார். என்னை அவர் முதல் முதலில் எங்கே சந்தித்தாரோ அந்தச் சங்கத்தின் (இலங்கை ஆசிரியர் சங்கம்) தலைவர் எச்.என்.பெர்னாண்டோவின் சகோதரியையே காதலித்து மணந்துகொண்டார். அவரதும் லயனல் போப்பகேயினதும் திருமணங்கள் மிகவும் எளிமையாக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நடந்தன.

பஸ்ஸிலும் ரயிலிலும் பயணித்து கட்சிப்பணிகளை மேற்கொண்டவர், பாதுகாப்பு காரணங்களின் நிமித்தம் தோழர்களின் வற்புறுத்தலினால் பின்னர் ஒரு பேஜோ வாகனத்தை பயன்படுத்தினார். விஜேவீராவின் மிகப்பெரிய பலவீனம் அவசரப்பட்டு தோழர்களை பகைத்துக்கொள்வது.



தனது காதல் மனைவியின் அண்ணன் எச்.என்.பெர்னாண்டோவுடனும் கருத்து முரண்பட்டு பகைத்துக் கொண்டார். அவருக்காகவும் அவரது இயக்கத்திற்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்துவந்த இடதுசாரி தொழிற்சங்கவாதி பாலாதம்புவையும் பிற்காலத்தில் பகைத்துக்கொண்டார்.

வேற்றுமையில் ஒற்றுமைகண்டு இயக்கத்தை வளர்க்கத் தவறியவர்கள் வரிசையில் விஜேவீராவும் இணைந்துகொண்டதும் வரலாற்றின் சோகம்.


புலிகள் இயக்கம் ஆரம்பத்தில் ஜே.வி.பி. யின் (1971 ஏப்ரல் கிளர்ச்சியில்) தோல்வியிலிருந்து பாடம் கற்றுக்கொண்டது. மீண்டும் 1987 இல் பாடம் கற்றது.

தற்போது எம்மவர்கள், 2009 மே மாதத்தின் பின்னர் புலிகள் இயக்கத்திடமிருந்து பாடம் கற்றுக்கொள்கின்றனர்.

சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் பாடம்கற்றுத் தந்த இந்த இரண்டு தலைவர்களும் இப்போது எங்களிடம் நினைவுகளாக இருக்கிறார்கள்.

பாடங்களினால் பயன் கிடைத்ததோ இல்லையோ பாடங்கள் வரலாறாகியதுதான் மிச்சம்.

## கரப்பான் பூச்சி!



பெரும்பாலும் தானியக் கிடங்கு, கழிவறை, சமையலறை போன்ற இடங்களில் காணப்படுவது கரப்பான்பூச்சி. பொதுவாக இருவகை கரப்பான்கள் உண்டு. ஒன்று கீழை நாட்டுக் கரப்பான் பூச்சி மற்றொன்று ஜெர்மன் கரப்பான் பூச்சி. கீழை நாட்டுப் பூச்சி, ஜெர்மன் பூச்சியை விட இருமடங்கு பெரயது. கீழை நாட்டுக் கரப்பான் பூச்சியின் நிறம் கரும்பழுப்பு. ஜெர்மன் வகையைச் சேர்ந்தது கரும் மஞ்சள் நிறம். இதுவே எண்ணிக்கையில் அதிகமாம். இரண்டு வகைப் பூச்சிகளின் தாயகம் ஆபிரிக்கா கண்டமே! துருவப்பகுதி தவிர்ந்த பூமிப்பகுதி எங்கும் ஆறு குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 3490 கரப்பான் இனங்கள் இப்பொழுது வாழ்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. கரப்பானுக்கு குருதி வெண்ணிறமானது. உடல் பலபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியிலும் அதைக் கட்டுப்படுத்தும் நரம்புத்திரள்கள் இருப்பதால், தலையை வெட்டிவிட்டால் கூட கரப்பான் பூச்சிகள் இரண்டு வாரத்திற்கு உயிர்வாழும். அணுகுண்டு வெடிப்பையும் தாண்டி கரப்பான்கள் வாழும் என்று நம்பப்படுகிறது.

## ஆரோக்கியம் தரும் "பழஞ்சோறு"

- ஜெயந்தி - சிகரம் -

காலை உணவு குறித்து தற்போது பெரிதாக எவருமே பெரிதாக நாட்டம் கொள்வதில்லை, காலையில் எதுவும் சாப்பிடாமல் இருப்பேன் என்பதை பலர் பெருமையாகச் சொல்கிறார்கள், காரணம் வறுமை இல்லை. காலை உணவைத் தவிர்ப்பது ஏதோ ஒரு புதிய உடற்பயிற்சி என நம்புவதுமே காரணமாகின்றது.

"சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்" என்பது பழமொழி. சித்திரம் வரைவதற்கு சுவர் எவ்வளவு முக்கியமானதோ அதேபோல எமது உடலை



நாம் ஆரோக்கியமாக வைத்திருந்தால் மட்டுமே நன்றாக வாழமுடியும்.

நாம் எமது உணவுப் பழக்கங்கள் மற்றும் உடல் நலத்தில் அக்கறை காட்டுவது மிகக் குறைவு. உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் உணவுகளையே உட்கொள்கின்றோம். அத்துடன், உடல் நலத்தைப் பேணும் உணவுகள் எவை என்பதே நம்மில் பலருக்கும் மறந்து விட்டது.

### பழஞ்சோறு

நாம் மறந்து போன அல்லது நினைக்காத உணவுகளில் ஒன்றுதான் பழஞ்சோறு. பழஞ்சோறு என்றவுடன் முகத்தைச் சுழிப்பவர்களும் இருக்கின்றார்கள், முகம் மலர்பவர்களும் இருக்கின்றார்கள்.

முதல் நாள் சமைக்கும் சோற்றினுள் இரவு நீர் ஊற்றி வைத்த பின்னர் காலையில் நீரினை எடுத்து விட்டு பழைய கறியுடனோ அல்லது சம்பல், ஊறுகாய் என்பவற்றுடன் சேர்த்து உண்ணலாம்.

வெப்பம் அதிகரித்த காலப்பகுதியான பங்குனி தொடக்கம் ஐப்பசி மாதம் வரையிலும் கடின உழைப்பாளிகளாகிய கிராமத்து மக்கள் குறிப்பாகக் கூலித் தொழில் செய்வோர், விவசாயிகள் போன்றோர் பெரும்பாலும் விரும்பி உண்பது பழஞ்சோற்றையே.

தமது கடின உழைப்புக்குப் பலனான நெல் அரிசியை பல்வேறுவிதமான உணவுகளாக்கி உண்கின்றனர். பழஞ்சோறு, பால்புக்கை, பால்க்கஞ்சி, இலைக்கஞ்சி என்ற பல்வேறு உணவுகளுக்கும் ஆதாரமாகவிருப்பது நெல் அரிசியே.

### பழஞ்சோற்றை விரும்பாதவர்கள்

நகரவாசிகள் நாகரீகத்தை மட்டுமே விரும்புவார்கள் என்று கிராமங்களில் நினைக்கிறார்கள். ஆனால் நகரத்தில் இருப்பவர்களுக்கு கிராமத்துப் பழக்கங்கள் தெரியாமல் இருப்பதுதான் காரணம். பொருளாதாரம், நேரமின்மை போன்ற காரணங்களுக்காக உடனடியாகக் கிடைக்கும் உணவுகளை உண்டு வாழும் இந்த மக்கள் இவற்றிற்குத் தம்மை அடிமைகளாக்கியுள்ளனர். அத்துடன், 1 கிலோ அரிசியினை 60 ரூபாவுக்கு கடையில் வாங்கி அடுத்த நாளைக்கும் அந்தச் சோற்றை மிச்சப்படுத்தி வைப்பது என்பதும் முடியாத காரியமே.

ஆனால் கிராமங்களில் உள்ள பெரியவர்கள் கூறுகின்றார்கள், தாம் அரிசியைக் கடைகளில் வாங்குவதில்லை என. நெல்லினை மூடையாக வாங்கி, பச்சை அரிசியாகவும், அவித்துப் புழுங்கலாக்கி குத்தரிசி ஆக்கியும் உணவுக்குப் பயன்படுத்துவார்கள். அத்துடன், கிராமங்களிலுள்ள அனேகமான மக்கள் எந்த நேரமும் வேலையுடன் இருப்பதால் அவர்களுக்கு மூன்று நேரமும் உணவு தயாரிப்பது என்பது முடியாத காரியம். அதனாலேயே மதிய உணவாகச் சமைக்கும் சோற்றினை இரவுக்குப் பயன்படுத்துவதுடன், அடுத்த நாட் காலையிலும் பழையசோறாகப் பயன்படுத்துவார்கள்.

### பழங்கஞ்சி

முதல் நாள் சமைக்கப்படும் சோறு பழுதடையாமல் இருப்பதற்காக அதில் தண்ணீர் ஊற்றி வைத்து அடுத்தநாட் காலையில், தண்ணீரை வடித்து அதற்குள் பச்சை மிளகாய், வெங்காயம், தேங்காய்பூ என்பவற்றுடன் ஊறுகாய் கலந்து குடிப்பார்கள். இது உடலுக்கு ஆரோக்கியத்தை வழங்குவதுடன், களைப்பினைப் போக்கி உற்சாகமாக இருப்பதற்கும் உதவும்.

### பழஞ்சோற்றின் மருத்துவக் குணம்

மலச்சிக்கலைப் போக்கும். கர்ப்பிணிப் பெண்களுக்கு மிகவும் உகந்த உணவு. களைப்பினைப் போக்குவதுடன், வெயில் காலங்களில் வெப்பமான எமது உடலுக்கு குளிர்ச்சியை அளிக்கின்றது. அல்சரைக் குணப்படுத்தும் குணம் பழஞ்சோற்றுக்கு உள்ளது.




என்னதான் புதிய புதிய உணவுகளை நாம் செய்து சாப்பிட்டு வந்தாலும் எமது உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் பழஞ்சோற்றுக்கு அவை நிகராகாது.

### பழஞ்சோற்று வடகம்

பழஞ்சோற்றினை உணவாக உண்ண விரும்பாதவர்கள் அல்லது விரதம் அனுஷ்டிப்பவர்கள் மிஞ்சிய சோற்றினை வீணாக்காமல் பழஞ்சோற்று வடகம் செய்யலாம். சிறிய வெங்காயம், செத்தல் மிளகாய், பெருஞ்சீரகம், உப்பு, கறிவேப்பிலை என்பவற்றினைச் சேர்த்து சிறு சிறு உருண்டைகளாகப் உருட்டி வெயிலில் நன்றாகக் காயவைக்க வேண்டும். வெயிலில் நன்றாகக் காய்ந்த பின்னர் எண்ணெயில் பொரித்து உணவுடன் சேர்த்து உண்ணலாம்.




# தினமுரசின் புதிர்ப்போட்டியில் நீங்களும் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்!



**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**


**சரியான விடை எழுதுபவர்களின் விபரங்கள் புகைப்படத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவருகின்றது**

## 1 பொது அறிவு துணுக்குகள்!

1) இலங்கையைப் போர்த்துக்கேயர் ஆட்சிசெய்த காலம் யாது?
2) இலங்கையை ஒல்லாந்தர் ஆட்சி செய்த காலம் யாது?
3) இலங்கையில் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
4) இலங்கையில் மாகாண சபை அறிமுகமான ஆண்டு எது?
5) இலங்கையில் பெருந்தோட்ட பயிர்ச் செயகை ஆரம்பிக்கப்பட்ட ஆணடு எது?

## 2

கீழே காட்டப்பட்டுள்ள எண் கோலத்தைப் பார்க்க இங்கு எண்கள் ஏதோவொரு கோலத்திற்கமைய இடப்பட்டுள்ளன. அவற்றினைக் கருத்திற் கொண்டு L,M,N,O,P போன்ற கூடுகளுக்கு இடப்படவேண்டிய எண்ணைத் தரப்பட்டுள்ள சரியான விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | 1 |
| | | | | | | | | 2 | 3 |
| | | | | | | | 3 | 5 | 4 |
| | | | | | | 4 | 7 | 7 | 11 |
| | | | | | 5 | 9 | 10 | L | 15 |
| | | | | 5 | 10 | 13 | 23 | 24 | 39 |
| | | | 4 | 9 | M | 28 | 33 | 57 | 54 |
| | | 3 | 7 | 14 | 29 | 41 | 74 | N | 135 |
| | 2 | 5 | O | 25 | 44 | 85 | 107 | 188 | 189 |
| 1 | 3 | 8 | 19 | 39 | 83 | 126 | 233 | 269 | P |

1. L இன் பெறுமானம்
   1) 14 2) 12 3) 17 4) 22 (..........)
2. M யின் பெறுமானம்
   1) 15 2) 22 3) 24 4) 32 (..........)
3. N இன் பெறுமானம்
   1) 125 2) 90 3) 81 4) 151 (..........)
4. O இன் பெறுமானம்
   1) 10 2) 11 3) 21 4) 16 (..........)
5. P இன் பெறுமானம்
   1) 200 2) 268 3) 455 4) 458 (..........)

## 3

கீழேயுள்ள எண் நெய்யரியை அடிப்படையாகக் கொண்டவை. இதில் A,B,C,D,E ஆகிய கூடுகள் வெற்றிடமாக இருக்கின்றன. இந்நெய்யரியின் ஒவ்வொரு நிரையும் ஒவ்வொரு நிரலும் 1 தொடக்கம் 6 வரைக்கும் இலக்கமிடப்பட்டுள்ளன. வெற்றிடங்களில் இடப்படவேண்டிய எண்களைக் கொண்ட திருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 6 | 5 | 1 | | 2 |
| 1 | A | | 3 | | B |
| 5 | | 1 | 4 | 2 | 6 |
| 3 | 4 | 2 | | C | 1 |
| D | | 3 | 2 | 4 | |
| | 5 | 4 | 6 | | E |

1. A யிற்குரிய திருத்தமான தெரிவு

(1)

| | |
|---|---|
| 6 | 2 |
| 3 | |

(2)

| | |
|---|---|
| 3 | 2 |
| 6 | |

(3)

| | |
|---|---|
| 2 | 6 |
| 3 | |

(4)

| | |
|---|---|
| 2 | 3 |
| 6 | |

( ............................)

2. B யிற்குரிய திருத்தமான தெ்ரிவு

(1)

| | |
|---|---|
| 3 | |
| 4 | 5 |

(2)

| | |
|---|---|
| 5 | |
| 4 | 3 |

(3)

| | |
|---|---|
| 4 | |
| 5 | 3 |

(4)

| | |
|---|---|
| 3 | |
| 5 | 4 |

( ............................)

3 C யிற்குரிய திருத்தமான தெரிவு

(1)

| | |
|---|---|
| 5 | 6 |

(2)

| | |
|---|---|
| 6 | 5 |

(3)

| | |
|---|---|
| 2 | 3 |

(4)

| | |
|---|---|
| 3 | 2 |

( ............................)

4 D யிற்குரிய திருத்தமான தெரிவு

(1)

| | |
|---|---|
| 6 | 2 |
| 1 | |

(2)

| | |
|---|---|
| 1 | |
| 6 | 2 |

(3)

| | |
|---|---|
| 5 | 3 |
| 1 | |

(4)

| | |
|---|---|
| 3 | 4 |
| | 5 |

( ............................)

## புதிர்ப்போட்டி 4 இல் வெற்றியீட்டியோர்

| | |
|---|---|
| இரவீந்திரன் சுஜந்தி<br>உடுவில் மகளிர் கல்லூரி | கைலநாதன் சுரேன்<br>மகாஜனா கல்லூரி. |
| து.கோகுலன்<br>யாழ். இந்துக் கல்லூரி. | கைலநாதன் பவதாரணி<br>வட்டு. இந்துக் கல்லூரி. |



**புதிர்ப்போட்டி 6 இற்கான விடைகளை எதிர்வரும் ஆகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.**



**புதிர்ப்போட்டி 4 இற்கான சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறுவோர்**


ரஞ்சன் அபிதா
யாழ். இராமநாதன் கல்லூரி.

அனுப்பவேண்டிய முகவரி
**புதிர்ப்போட்டி இல....**
தினமுரசு
இல .373 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## புதிர்ப்போட்டி 4 இன் சரியான விடைகள்

**1**
1). டுபாய்
2) State Bank of India
3) வாழைப்பழம்
4) 2.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு
5) வட்டம்

**2**
1) 25
2) 3
3) 530
4) 84
5) 29



**3**
1) 2
2) 10
3) 190/=
4) 13
5) 2415/=





## முக்கிய குறிப்பு

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியில் போடலாம். யாழ் பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் பேடலாம்.

## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ........................................
பாடசாலையின் பெயர் ........................................
தரம் :- :-........................................
தொலைபேசி இல.:-........................................
முகவரி :-........................................
........................................

# தமிழ்க்கலவன் பாடசாலை உடையார்கட்டில் உதயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட உடையார்கட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாட சாலை என்ற பெயரில் கல்வி அமைச்சின் அனு மதியில் இயங்கி வருகின்றது. என முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் ரி. வரதராஜமூர்த்தி தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டத்துக்குட்பட்ட உடையார்கட்டு மகாவித்தியாலயம் ஆயிரம் பாடசாலைத்திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டதை யடுத்து அதன் அருகில் உடையார்கட்டு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை' என்ற பெயரில்தனி யாக இயங்கி வருகின்றது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலை யில் தரம் ஒன்று தொடக்கம் 5 வரையான வகுப்பு மாணவர்கள் கல்வி கற்று வருகின் றதுடன் உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் ஆரம்ப வகுப்பில் கல்வி கற்று வந்த மாணவர் களே உடையார்கட்டு அரசினர் தமிழ்க்கலவன் பாட சாலைக்கு உள்வாங்கப்பட்ட வர்களாவர் மேலும் புதுக்குடியிருப்பு கல்விக்கோட்டத்துக் குட்பட்ட பாடசாலைகள் ஆயிரம் பாடசாலை வேலைத்திட் டத்துக்குள்வாங்கினாலும் ஏக்கனவே உள்வாங் கப்பட்ட பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களே கற்றுவருகின் றனர். என்பதுடன் வேறாக இயங்குவதற்கான அவசியம் இல்லை எனவும் தெரிவித்தார். (116)

# அடுத்த தவணையில் 9 பாடசாலைகள் முல்லைக் கல்வி வலயத்தில் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட 55 பாடசாலைகளில் 41 பாடசாலை தற்போது இயங்க ஆரம்பித்துள்ளன. ஏனைய 14 பாடசாலைகள் இயங்குவதற்கான ஏதுவான நிலை 3ஆம் தவணை ஆரம்பத்தில் உருவாகும் இதில் 4 பாட சாலைகள் பல்வேறு நெருக்கடிகள் காரணமாக காலதாமதம் ஏற்படலாம் என முல்லைத்தீவு வலயக கல்விப்பணிப்பாளர் வரதராஜமூர்த்தி தெரிவித் துள்ளார்.

இதன் பிரகாரம் அண்மையில் சிவநகர் தமிழ் வித்தியாலயம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு கடந்த 27ஆம் திகதி திறக்கப்பட்டு பாடசாலை அதிபர் சி. சின்னராசா தலைமையில் இயங்கி வருகின்றது. 6ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார் கள் இப்பாடசாலையில் சுமார் 52 மாணவர்கள் தரம் ஒன்று தொடக்கம் 5 வரை கல்வி கற்று வரு கின்றனர்.

பாடசாலை மேற்கூரைகள்பாதிக்கப்பட்டுள்ளன பாடசாலைக் கட்டத்தை திருத்துவதற்கான ஒரு தொகை நிதியினை சேவாலங்கா நிதியம் வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இவ் வருடம் 3ஆம் தவணை ஆரம்பத் தில் மந்துவில் அரசரடிணம் வித்தியாலயம் வேணா வில் ஸ்ரீமுருகானந்தா வித்தியாலயம் புதுக்கு டியிருப்பு றோமன் கத்தோலிக்கப்பாடசாலை அம் மலவன் பொக்கணை மகாவித்தியாலயம் முள்ளி வாய்க்கால் மேற்கு கனிஷ்ட இந்து வித்தியால யம் மாத்தளன் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை முள்ளிவாய்க்கால் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வலைஞர் மடம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆனந் தபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய 9 பாடசாலைகளும் 3ஆம் தவணை தொடக் கத்தி லிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளன. ஏனைய பாட சாலைகளில் கேப்பாப்புலவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ளதாலும் முல்லைத்தீவு வித்தியாலயம் பிரதே சத்தில் மீள்குடியேற்றம் செய்யப்படாமையினாலும் கொக்குளாய் சிங்கள கலவன் பாடசாலை அநுராத புரம் கல்வி வலயத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ள தாலும் நாயாறு சிங்கள கலவன் பாடசாலை சிங்கள மக்களை மீள்குடியேற்றம் செய்யப்படாத தாலும் ஆரம்பிப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டு ள்ள பிரதேசங் களில் இயங்கும் பாடசாலைகளுக்கு. அரசாங்கத் துடன் இணைந்து யுனிசெவ், சேவாலங்காநிதிய நிறுவனம் போன்ற அரசசார்பற்ற நிறுவனங் களின்உதவியுடன் அபிவிருத்தி மற்றும் உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரி வித்துள்ளார். (116)

# துணுக்காய் கல்வி வலய திருக்குறள் மனனப்போட்டி

(துணுக்காய்)

துணுக்காய் கல்வி வலயத்தின் பாடசாலை களுக்கிடையிலான வலயமட்ட போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. தரம் 1இல் 1ஆம் இடம் அ.யனுசியா மு/முத்தையன்கட்டு இடது கரை அ.த.க. பாடசாலை, 2அம் இடம் அ.அர்ச் சயா மு/அணிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் பாடசாலை, 3ஆம் இடம் வி.கலைப்பிரியன் மு/ பாலிநகர் மகாவித்தியாலயம்.

தரம் 2இல் 1ஆம் இடம் வி.மகிழினி மு/ஐயங் கன்குளம் அ.த.க. பாடசாலை, 2அம் இடம் உ.மிதுர்சிகா மு/ முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை, 3அம் இடம் கே.அபிநேகா மு/கருவேலங்கண்டல் அத.க. பாடசாலை.

தரம் 3இல் 1ஆம் இடம் இ.தர்மிதா மு/ கருவேலங்கண்டல் அ.த.க. பாடசாலை 2ஆம் இடம் சி.குபேனி மு/ நட்டாங்கண்டல் அ.த.க. பாடசால்ல 3ஆம் இடம் க.யதுர்சிகா மு/ஆறு முகம் வித்தியாலயம்.

தரம் 4இல் 1அம் இடம் பு.சுமதினி மு/கற்சி லைமடு அ.த.க. பாடசாலை 2ஆம் இடம் செ.புவி ராஜ். மு/ பாண்டியன்குளம் ஆரம்ப வித்தியா லயம், 3ஆம் இடம் ம.நிலோஜன் மு/கருப்படடை முறிப்பு அ.த.க. பாடசாலை.

தரம் 5இல் 1அம் இடம் ரி.கோகிலா, மு/ முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை, 2ஆம் இடம் கு/அபிநயா மு/அணிஞ்சயன்குளம் தமிழ்க் கலவன் பாடசாலை, 3ஆம் இடம் கி.கிரு ஷியா மு/கருப்பட்டை முறிப்பு, அ.த.க. பாட சாலை.

இதில் 1ஆம் இடத்தைப் பெற்றவர்கள் அடுத் தமாதம் 8ஆம் திகதி யா/மருதனார்மடம் இராம நாதன் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு மாகாண மட்ட போட்டி நடைபெறும் எனவும் அவர்களை அனுப்பி வைப்பதற்கான ஒழுங்கமைப்புக்களை அப்பகுதி அதிபர்களை ஏற்குமாறும் துணுக்காய் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.(12)



நவாலி வடக்கு வாகுசாட்ட வீதியின் புனரமைப்புக்கான ஆரம்ப வேலை நிகழ்வில் வலிதென் மேற்கு பிரதேச சபை செயலாளர் ஜெபநேசன் உபதவிசாளர் சிவகுமாரன். ஈ.பி.டி.பி உறுப் பினர்களான அன்ரன் ஜோன்சன் ஜீவா எஸ்.ஜே.செல்வராசா க.நடராசா மற்றும் கௌரி காந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (104)

# மெய்தான் பாருங்கோ...

## நிதானம் வேண்டும்



மழை விட்டாலும் தூவானம் விடா தமாதிரி... வன்னிச்சனத்தின்ர உயிர் இழப்புகளும் சேதங்களும் நிகழுற தைப் பாக்க மனசுக்கு மெத்தக் கவ லையாக்கிடக்குது பாருங்கோ!

போருக்கை அம்பிட்டு அதின்ர அழிவுகளை நேரடியாகப் பாத்த மன விரக்தியின் வெளிப்பாடோ என் னவோ தெரியாது 'சாவு ஒரு தூசு'... எண்டமாதிரி எங்கட சிலசனங்கள் நடந்து கொள்ளுதுகள் எண்டதை இப்ப நான் இதில சொல்லவாறன்.

என்ன பிரச்சினை எண்டால் இப்ப கடைசியாக புதுக்குடியிருப்புப் பிரதே சத்திலும் சரி வேற இடங்களிலும் சரி மீளக்குடியேற்றம் செய்யப்பட்ட இடங் களில பாருங்கோ அங்கினேக்கை தவறவிடப்பட்ட சில வெடிக்கிறசாமானுகள்கிடந்து இப்ப "இந்தா உன்னைப்பலியெடுக்கிறன்..." என்கிறமாதிரி வெடிச் சுத்தள்ளுது.

கண்ணி வெடியகற்றுகிற ஆட்கள்நிலத்தைக் 'கிளியறிங்' செய்த தெண்டாலும், எல்லாஇடத்தையும், எல்லாராலும் 'கிளியறிங்' செய்ய முடியாதெண்டது உண்மைதான் பாருங்கோ! ஏனெண்டால், சண்டையெண்டு புதுக்குடியிருப்பிலதானநல்ல உச்சமா நடந்தது. ரண்டு பகுதியும் பரஸ்பரம் ஆளுக்காள் மாறி மாறி எறிஞ்சு விளையாடின வெடிசாமானுகள் கொஞ்சம் நஞ்சமில்லைக் கண்டியளே!

ஐஞ்சிஞ்சி... பத்திஞ்சி... ஆட்டிலறி... கொத்து... கனான்... பசிலன்... இப்பிடி எத்தனை கோதாரியில போன குண்டு கள்குவியல்குவியலாகவிழுந்த இடத்தில வெடிக்காமல் கிடந் திருக்குங்கள்? மூண்டு வருசத்துக்குப்பிறகு கிளியறிங்செய்யிற தெண்டது சும்மா விளையாட்டான செயலில்லைப் பாருங்கோ!

ஏனெண்டால், ஒருவருச மழைத்தண்ணியிலையே பத்தை பறையள் முசி வளருகிற இடத்தில, மூண்டு வருச மழைத் தண்ணிக்கு எப்பிடி வளந்திருக்குங்கள்எண்டதையும்யோசிச் சுப்பாக்கவேணும்.

நாயுண்ணிச் செடியள்,மூக்குத்திப்பூண்டுகள், மாங்கொடி யள்... எண்டு எத்தனைவகையானவை தலைக்கு மேலால வளந்து பத்திப்பிடிச்சுப் போய்க்கிடக்குது. இந்தச் செடி கொடி யளைத்துப்புரவாக்கிற தெண்டது சும்மா இலேசுப்பட்ட விசயமில்லைக்கண்டியளே!

தலைக்கு மேலால வளந்து நிக்கிற நாயுண்ணிச் செடியை வெட்டுறதுக்கு காட்டுக்கத்தியை ஏங்கிப்போடுற நேரத்தில கத்தியின்ர நுனி மண்ணில வெடிக்காமல் கிடக்கிற ஏதாவது குண்டில கொத்துப் பட்டுதெண்டால்அவ்வளவுதான்... அந்த இடத்தில வெட்டினவன்ர எலும்புகூட மிஞ்சாது பாருங்கோ!

இப்படியான வெடிக்காத சாமானுகள்'கிளியறிங்' செய் யிறவையின்ர கண்ணில எத்துப்படாமல் போச்சு தெண்டால், பிறகு அந்த இடத்தில் குடியிருக்க வாறவையைத்தான் பலி யெடுக்கப் பாக்கும்.

எங்கட சனத்துக்கு அரசியலும் சரி, தன்நலம், பொதுநலம் சார்ந்த செய்கை காரியங்களிலும் சரி இன்னமும் விழிப்புணர் வுகாணாது.பாருங்கோ.

மீள்குடியேறின இடங்களில தங்கட வளவு வாய்க் காலுகளைத் துப்புரவாக்கேக்கை கொஞ்சம் அவதானமாக நடந்து கொள்ளலாம் தானே! நிலம் வெட்டை வெளியான இடத்தில செருக்கிறபுல்லுகளையும், கூட்டுற குப்பையளையும், மற்றத்தடி தண்டுகளையும் ஒரு இடமாப்போட்டு நெருப்பு வைக்கலாம்தானே! அந்தச்சிந்தனை இன்னும் எங்கட சனத் துக்கு வரேல்லை கண்ட கண்ட இடங்களில நெருப்பு வைச்சு எரிக்கிறதால, கன இடங்களில கனபேருக்கு சேதாரம் ஏற்பட்டி ருக்கு கண்டியளே!

உயிர்போகும் எண்டும் தெரிஞ்சும்... எங்கடசனங்களில பல பேர் ஏன் இப்பிடி நடக்கினம்...? எண்டு நான் யோசிக் கிறனான் பாருங்கோ!

உண்மையில இது வொரு விழிப்புணர்வற்ற செயற்பாடா? அல்லாட்டி விரக்தி உணர்வின் வெளிப்பாடா?


என்னஏதுவாக இருந்தாலும் போறது விலைமதிப்பற்ற ஓர்உயிர் எண்டதைப் புரிஞ்சு கொள்ளவேணும்.

போரோடை எல்லாம் போச்சுது... இனி என்னத்துக்கு...? எண்டநிலைப்பாட்டிலயிருந்து விலகி, குடும்பத்தில உயிர் தப்பியிருக்கிறவைக்கெண்டாலும் உயிர் வாழவேண்டிய கடமை ஒண்டு இருக்குதல்லோ. அதை மீளகுடியேறின எங்கட சனங்கள் அதுவும் தங்கட வளவு வாய்க்காலைத் துப்புர வாக்கிற ஆட்கள் புரிஞ்சு நடந்தினமெண்டால் எல்லாருக்கும் நல்லதுபாருங்கோ!

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# அபிவிருத்தியில் அமைச்சர் டக்ளஸ்...

## மீன்வலை தொழிற்சாலைக்கு விஜயம்



வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள தனியார் மீன் வலை உற்பத்தி தொழிற்சாலைக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த புதன் கிழமை விஜயம் மேற்கொண்டு தொழிற்துறை நடவடிக்கைகளையும் பார்வையிட்டார்.

வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் இத்தொழிற்சாலையில் தற்போது 28 பேர். பணிபுரிந்து வருகின்றனர்.

அங்கு விஜயம் மேற்கொண்ட அமைசச்ர் அவர்கள் பல்வேறு பகுதிகளையும், இயந்திரசாதனங்களையும் பார்வையிட்டதுடன், அது தொடர்பில் துறைசார்ந்தவர்களுடனும் கலந்துரையாடினார்.

இதன்போது அதன் பணிப்பாளர் சௌந்தரராஜா, முகாமையாளர் சூரியகுமார், ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப்பாளர் ஜீவன், உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## வடகடல் நிறுவன ஆராய்வு

வடகடல் நிறுவனத்தின் கீழான குருநகர் வலைத் தொழிற்சாலையின் செயற்திட்டங்களை விரிவாக்கம் செய்வது தொடர்பில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆராய்ந்துள்ளார்.

குருநகரில் அமைந்துள்ள வலைத் தொழிற்சாலையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே மேற்படி விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது தொழிற்சாலையினது உற்பத்தி,




விற்பனை மற்றும் அது தொடர்பில் எதிர்நோக்கி வருகின்ற இடர்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. குறிப்பாக மூலப் பொருட்கள், அவற்றினது உற்பத்திகள் மற்றும் விற்பனை தொடர்பில் மேற்கொள்ளப்படவேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் கலந்து ரையாடப்பட்டது. இதில் பாரம் பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, வடகடல் நிறுவனத் தலைவர் பரந்தாமன் ஆகியோர் உடனிருந்தனர்.

## யாழ்.முஸ்லிம்களின் பிரச்சினைக்கு உரிய வகையில் தீர்வு

உயர்மட்ட மாநாடொன்றின் மூலமாக முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வு காணப்படும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மொஹிதீன் ஜும் ஆப் பள்ளிவாசலில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற இன ஐக்கியத்திற்கான ஒன்றுகூடல் நோன்பு திறக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் முன்பொரு காலத்தில் தமிழர், முஸ்லிம் என்ற எவ் விதமான வேறுபாடும் இல்லாமல் வாழ்ந்து வந்த நிலையில் கடந்த சில காலங்கள் கசப்பான காலங்களாக அமைந்திருந்தன.




அந்தவகையில் முஸ்லிம் மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து வாழ்ந்துவரும் நிலையில் அவர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளுக்கு உயர்மட்ட மாநாடொன்று விரைவில் நடாத்தப்பட்டு அதனூடாக உரிய தீர்வு காணப்படும் என்று உறுதிபடத் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் கலாசார பிரிவினரால் ஒருங்கமைக்கப்பட்ட இன ஐக்கியத்திற்கான இவ்வொன்றுகூடல் நிகழ்வில் ஈ.பி.டி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்), யாழ்.மாநகர ஆணையாளர் பிரணவநாதன் ஆகியோருடன் இந்தியத்துணைத் தூதுவர் மகாலிங்கமும் உடனிருந்தார்.

## முரசின் இன்றைய பலன்

(18.08.2012 – சனிக்கிழமை)

நந்தன வருஷம் ஆவணி மாதம் 02 ஆம் திகதி. பிரதமை முன்னிரவு 9.23 வரை. நட்சத்திரம் மகம் முன்னிரவு 8.46 வரை. அமிர்தசித்தம் கரிநாள். இராகுகாலம் 9.05 - 10.35 வரை. சுபநேரம் 3.05 - 4.35 வரை. எமகண்டம் 1.35 - 3.05 வரை. குளிகன்.காலம் 6.05 - 7.35 வரை. நல்லூர் முருகன் பூங்காவனம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பொருள் விருத்தி, சாதனை நிலைநாட்டுவீர், கல்வியில் மந்த நிலை, பயண அனுகூலம். |
| ரிஷபம் | சுலப நன்மை, பகைவரால் நன்மை, பெற்றோர் ஆதரவு, சீரான பொருளாதாரம். |
| மிதுனம் | கீர்த்தி, சஞ்சலங்கள் நீங்கும், வாக்கு சாதுர்யம், பொன்பொருள் சேரும். |
| கடகம் | மகிழ்ச்சி, எதிலும் ஆர்வக்குறைவு, கல்வியில் மந்த நிலை, இருப்பிடப் போட்டி. |
| சிம்மம் | மனத்திருப்தி, உடல் ஆரோக்கியம், மனக் கசப்புகள் நீங்கும், திடீர் தனவரவு. |
| கன்னி | சுபச்செலவுகள், தடைப்பட்டவை நிறைவேறும், பணவசதிகள், குடும்பத்தில் தன்னிறைவு. |
| துலாம் | திருப்தி மேல் திருப்தி, கஷ்டங்கள் தீரும், புதிய வாழ்க்கை, நண்பர்கள் உதவி. |
| விருச்சிகம் | பெருமை வந்து சேரும், குடும்ப வளம், எதிர்பாராத வெற்றிகள், உடல் ஆரோக்கியம். |
| தனுசு | கவனம் தேவை, வெளியூர்ப்பயணம், புதிய ஒப்பந்தம், சிந்தித்து செயற்படவும். |
| மகரம் | சந்திராட்டமம் பயணம் தவிர், செய்தொழிலில் திருப்தி, சொத்து கைமாறும், கடன் தொல்லை. |
| கும்பம் | புதிய தகவல்கள், விருந்துபசாரம், மேலதிகாரிகள் அனுசரணை, கல்வியில் மேன்மை. |
| மீனம் | மனோதிடம், குடும்ப அன்னியோன்யம், கல்விச் செல்வு அதிகரிப்பு, வீண் பழிகேட்டல். |

## பவளவிழா

உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலயப்பிரதம குரு சிவஸ்ரீ கணேச குகதாசக் குருக்களின் அகவை எழுபதை எய்திய பவள விழா நடைபெறவுள்ளது.

இவ்விழா ஆனைக்கோட்டை உயரப் புலம் உத்துங்கவிநாயகர் ஆலய மண்டபத்தில் நாளை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. ஆலயத்தில் அந்தணப் பெருமக்களின் முற்சந்ததியினரின் ஆசி வேண்டி ''பீமரத சாந்தி'' உற்சவம் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து சுன்னாகம் கதிரைமலைச் சிவன் ஆலயகுரு கலாநிதி சிவஸ்ரீ நிர.சோமஸ்கந்த சிவாச்சாரியார் தலைமையில் பவளவிழா நடைபெறவுள்ளது. (06)

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம்

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தரம் உயர் தரவகுப்புக்களில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கரைத்துறை கல்விக் கோட்டத்துக்குட்பட்ட முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் கடந்த 29 ஆம் திகதி புலமை பரிசில் திட்டத்திற்கான ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றன. இத் திட்டத்திற்கான நிதியுதவியினை ஜப்பானில் வசிக்கும் யசூசி ஓசாக்கா என்பவர் இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வைத்திருந்தார்.

மாதாந்தம் வழங்கப்படும் நிதியினை கல்வித்திறமை, யுத்த வடுக்களால் பாதிக்கப்பட்டுள்ள குடும்ப நிலைமை, வறுமை போன்ற நியதிகளின் அடிப்படையில் 25 மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபா என வழங்கப்படும் நிதியை தமது கல்வித் தேவைகளுக்காக மாணவர்கள் பயன்படுத்தலாம். பாதிக்கப்பட்ட பிரதேச பாடசாலை மாணவர்களை இனங் கண்டு வழங்கப்படும் புலமைப் பரிசில் திட்டம் ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கப்படும் எனவும் இவ் விழாவில் தெரிவிக்கப்பட்டது.


இவ் அறிமுக விழாவில் இலங்கை ரெலிக்கொம் நிறுவன அதிகாரி, முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர், வரதராஜமூர்த்தி, கோட்டக் கல்வி அதிகாரிகள், வித்தியாலய அதிபர், சிவலிங்கம், மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (116)

## 3000 விண்ணப்பங்கள்

யாழ்.செயலகத்தில் இருந்து கடந்த மாதம் ஆட்பதிவுத்திணைக்களத்திற்கு தேசிய ஆள்அடையாள அட்டைக்கான 3000வரையான விண்ணப்பப்படிவங்கள் அனுப்பிவைக்கப்படுவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. பாடசாலை அதிபர்களினாலும், கிராம சேவையாளர்களினாலும் மற்றும் தனிப்பட்ட முறையிலும் இவ்வாறு கிடைத்துவரும் விண்ணப்பங்களே யாழ்.செயலக ஆட்பதிவுத் திணைக்கள கிளை அலுவலகத்தால் அனுப்பிவைக்கப்படுவதாக மேலும் அவ்வட்டாரங்கள தெரிவித்தன. இந்த விண்ணப்பப்படிவங்களின்படி அதற்குரிய தேசிய ஆள்அடையாள அட்டைகள் மூன்று மாதங்களுக்குள் விண்ணப்பதாரர்களுக்கு ஆட்பதிவுத்திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்படுதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் படாசாலை விண்ணப்பதாரிகளுக்கும் பாடசாலைகளுக்கு அக்காலப்பகுதிக்குள அனுப்பி வைக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)

## தெல்லிப்பழை துர்க்கையம்மன் கொடியேற்றம்

"நல்லதோர் முகூர்த்த நாயகி"



வல்லதோர் சக்தியே, வாலாய முதல்வியே,
வடிவாம்பிகையே, வண்ண சொரூபியே
நல்லதோர் முகூர்த்த நாயகியே பைரவியே,
நளின காந்தியே நடை பைரவியே,
மெல்ல வரமருளும் வல்லியே மேவு சொரூபியே,
மீட்சிபெறும் ஆட்சி வித்தகியே,
தெல்லியூர் மணங்கமழும் திரிபுரசுந்தரியே
திருந்தாத இவ்வுலகமதைத் திருத்திட மாட்டாயா?

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்.

விஞ்ஞானம்

க.பொ.த.(சாதாரணதர)
மாதிரிப் பரீட்சை வினாத்தாள்
கல்வி முரசு

34 | T | II
Grade - 10

ஆசிரியர் :
S.T.ஜனார்த்தனன்
(Bsc)

## பகுதி II

(தொடர்ச்சி...)

2) தாவரங்கள் தொடர்பான இயற்கை முறைப்பாகுபாட்டை முதலில் மேற்கொண்டவர் கரோலஸ் லீனியஸ் (Carlous Linn aeus 1707 -1778) ஆவார்.

1. தாவரங்களின் பொதுவான சிறப்பியல்புகள் நான்கு தருக?

...........................................................................

2. பூக்கும் தாவரங்களின் சிறப்பியல்புகள் இரண்டு தருக?

...........................................................................

3) இருவித்திலை, ஒரு வித்திலை, தாவரங்களுக்கிடையிலான வேறுபாடுகள் 5 தருக?

| | இருவித்திலைத் தாவரம் | ஒரு வித்திலைத் தாவரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

4) மெய்ப்பாசிகளுக்கும் ஈரலுருத் தாவரங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் மூன்று தருக?

| | மெய்ப்பாசிகள் | ஈரலுருத் தாவரங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

5) கீழே தரப்படும் தரவுகளிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கான விடையை பெறுக?

- குப்பைபேமனி
- சோளம்
- பாசி
- பன்னம்
- சைக்கசு
- நெப்ரோலிப்பிஸ்

a) அங்கியஸ் பேர்ம்ஸ் இல் அடங்கும் தாவரங்கள் எவை?

...........................................................................

b) வித்திகளை உண்டாக்கும் தாவரங்கள் எவை?

...........................................................................

c) மாறிழையம் கொண்ட தாவரம் எது?

...........................................................................

e) கடத்தும் இழையங்கள் காணப்படும் தாவரங்கள் எவை?

...........................................................................

3) கீழே நுண்ணங்கிகள் சில தரப்பட்டுள்ளன




1. நுண்ணங்கிகள் என்றால் என்ன?

...........................................................................

2. மேலுள்ள நுண்ணங்கிகளுள் போலிப்பாதம், சவுக்குமுளை, பிசிர் போன்ற இடப்பெயர்ச்சிப் புன்னங்கள் காணப்படும் அங்கி எவ்வெழுத்துக்களால் காட்டப்பட்டுள்ளது?

...........................................................................

3. உயிருள்ள, உயிரற்ற இயல்புகளை காட்டுகின்ற நுண்ணங்கி எவ்வெழுத்தால் காட்டப்பட்டுள்ளா?

...........................................................................

4. நுண்ணங்கிகள் C,E என்பவற்றின் இனப்பெருக்க முறைகளைக் குறிப்பிடுக?

C: ...........................................................................

E : ...........................................................................

5. மேலுள்ள நுண்ணங்கிகள் அடங்கும் பிரிவுகளைக் குறிப்பிடுக?

A : ...........................................................................

B : ....................... வைரசு

C : ...........................................................................

D : ...........................................................................

E : ...........................................................................

F : ...........................................................................

4) 1. இரு சொற் பெயரீடு என்றால் என்ன?

...........................................................................

2. இரு சொற் பெயரீட்டின் விதிமுறைகள் மூன்று தருக?

...........................................................................

3. இரு சொற் பெயரீட்டு முறையை அறிமுகம் செய்த விஞ்ஞானி யார்?

...........................................................................


4. தற்கால மனிதனின் விஞ்ஞானப் பெயரை எழுதுக?

...........................................................................

5. உயிரங்கிகளின் பிரதான ஐந்து இராச்சியங்களையும் தருக?

...........................................................................

5) 1. தாவரங்களின் காற்றுக்குரிய பகுதியில் இருந்து நீர் நீராவியாக இழக்கப்படுதல் ஆவியுயிர்ப்பு எனப்படும்.




1. மேலே காட்டப்பட்டுள்ள உபகரண அமைப்பை பெயரிடுக?

2. மேலுள்ள உபகரண அமைப்பில் ஆங்கில எழுத்துக்களால் பெயரிடப்பட்ட பகுதிகளை எழுதுக.

A : ..............................　C : ..............................

B : ..............................　D : ..............................

3. ஆவியுயிர்ப்பு வேகத்தைக் கணிப்பதற்கு பயன்படுத்தும் சமன்பாட்டைத் தருக?

...........................................................................

4. ஆவியுயிர்ப்பு வேகத்தை அளவிடும் பரிசோதனை ஒன்றின் போது மேலுள்ள உபகரணத்தில் வளிக்குமிழி 10 cm தூரத்தைக் கடப்பதற்கு 5 செக்கன்கள் எடுத்தது எனின் ஆவியுயிர்ப்பு வேகம் எவ்வளவு?

...........................................................................

5. ஆவியுயிர்ப்பு, கசிவு ஆகியவற்றுக்கு இடையிலான பிரதான வேறுபாடுகள் நான்கு தருக?

| | ஆவியுயிர்ப்பு | கசிவு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

2) தாவரங்களில் ஒளித்தொகுப்புக்கு தேவையான காரணிகள் ஒளி, நீர், $CO_2$ ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இக்காரணிகளை மிகச் சிறந்த முறையில் பெற்றுக்கொள்வதற்கு தாவரங்கள் வடிவமைத்துள்ளன?


1. ஒளித் தொகுப்பு என்றால் என்ன?

...........................................................................

2. ஒளித் தொகுப்பின்போது நடைபெறும் சக்தி மாற்றத்தை தருக?

...........................................................................

3. தாவர இலையின் குறுக்குவெட்டு முகம் கீழே காணப்படுகின்றது.




a) மேற்குறித்த உருவில் A,B,C,D,E ஆகிய பகுதிகளை பெயரிடுக?

A :.......................... C :..........................
B :.......................... D :..........................
E :..........................

b) ஒளித்தொகுப்பு செயன்முறையின்போது மேலே C,F எனக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியினால் நிறைவேற்றப்படும் தொழில்களை தனித்தனியாக விளக்குக.

..........................................................................
..........................................................................


c) இலைகளில் உணவு உற்பத்தி செய்யப்படுவதற்கு பச்சையம் அவசியம் என்பதைக் காட்டும் பொருட்டு நீர் செய்த ஒரு பரிசோதனையின் படிமுறைகளை முறையே விபரிக்க. எதிர்பார்க்கும் அவதானங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

..........................................................................
..........................................................................
..........................................................................

4. தாவரங்களில் உணவு உற்பத்தி செய்யப்படும் செயன்முறைக்குரிய தாக்கத்தை சமன் செய்த சமன்பாட்டில் தருக?

..........................................................................
..........................................................................

3) மனிதனில் உணவு சமிபாடு நிகழும் தொகுதி சமிபாட்டுத் தொகுதியாகும். இது உணவுக் கால்வாயையும் அதனுடன் தொடர்புடைய சுரப்பிகளையும் கொண்டமைந்தது.




1. சமிபாடு என்பதால் கருதப்படுவது யாது?

..........................................................................
..........................................................................

2. மனித உணவுக் கால்வாயில் நிகழும் பிரதான அசைவு ஒன்றின் வகைகயைக் குறிப்பிடுக? இவ்வசைவின் தொழிற்பாடு யாது?

..........................................................................
..........................................................................

3. மாணவன் ஒருவன் காலை உணவாக பாணும் பட்டரும், வாழைப்பழமும் உண்டான். எனின் அவன் உட்கொண்ட உணவில் உள்ள போசணைக் கூறுகளைக் குறிப்பிடுக?

..........................................................................
..........................................................................

4. மனிதனின் உணவுக் கால்வாயின் அமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

..........................................................................
..........................................................................

a) மேலே தரப்பட்ட அமைப்பில் A - K வரையான பகுதிகளை பெயரிடுக?

A :.......................... C :..........................
B :.......................... D :..........................
E :.......................... F :..........................
G :.......................... H :..........................
I :.......................... J :..........................
K :..........................

b) J இல் வாழும் ஒன்றிய வாழி உயிரினம் எது?

..........................................................................

c) பருப்பில் அடங்கியுள்ள போசணைப் பொருள் முறை H,C,B ஆகிய பகுதிகளில் எவ்வாறான இரசாயன மாற்றங்களிற்கு உள்ளாகின்றன என்பதை விளக்குக.

..........................................................................
..........................................................................
..........................................................................

d) I இல் உறிஞ்சப்பட்ட குளுக்கோசும், அமினோ அமிலமும் எக்குருதிக் கலன்கள் மூலம் எவ்வங்கத்திற்கு எடுத்துச் செல்லப்படும்?

..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

4) தாவரங்களில் பூவும் பூவின் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பதியப்பாகங்களின் மூலம் நிகழும் இனப்பெருக்கம் பதியமுறை இனப்பெருக்கம் ஆகும்.

1. இழைய வளர்ப்பு என்றால் என்ன?

..........................................................................
..........................................................................
..........................................................................

2. இழைய வளர்ப்புக்கு பயன்படுத்தப்படும் தாவர இழையங்கள் நான்கினைக் குறிப்பிடுக?

..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

3. விவசாயத்துறையில் தாவர ஓமோன்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் மூன்று தருக?

..........................................................................
..........................................................................
..........................................................................

4. இழைய வளர்ப்பு போசணை ஊடகத்தில் அடங்கியிருக்க வேண்டிய போசணைக் கூறுகள் ஐந்தினைக் கூறுக?

..........................................................................
..........................................................................
..........................................................................

5. இழைய வளர்ப்பின் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் இவ்விரண்டினைத் தருக?

அனுகூலங்கள் : ..........................................................................

பிரதிகூலங்கள் : ..........................................................................

6) 1. அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் திரவியங்களை மூன்று வகைக்குள் அடக்கலாம். அவையாவன உலோகங்கள் அல்லுலோகங்கள், கலப்புலோக்கள் ஆகும்.

கீழே சில பதார்த்தங்க்ள தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக?

- காபன்
- இரும்பு
- கறியுப்பு
- கொண்டிசு
- இரசம்
- குளுக்கோசு
- அயடீன்
- நாகம்
- ஐதான சல்பூரிக்கமிலம்
- பொன்
- பித்தளை
- உருக்கு
- நீர்
- அற்ககோல்

1. மேலுள்ளவற்றில் மூலகம், மூலகம் அல்லாதவை எவை என அட்டவணைப் படுத்துக?

| மூலகம் | மூலகம் அல்லாதவை |
|---|---|
| | |
| | |
| | |

2. மேலுள்ளவற்றில் உலோகங்கள் எவை?

..........................................................................

3. மினுமினுக்கமான அல்லுலோக மூலகம் எது?

..........................................................................

4. திரவ உலோகம் எது?

..........................................................................

5. மேலுள்ளவற்றில் கலப்புலோகங்கள் எவை?

..........................................................................

6. மின்னைக் கடத்தும் மூலகங்கள் எவை?

..........................................................................

7. மின்னைக் கடத்தும் அல்லுலோகம் எது?

..........................................................................

8. கீழ்வரும் ஒவ்வொன்றும் மேலுள்ளவற்றில் எத்திரவத்தில் இட்டால் அவை கரையும்?

a) அயடீன் : ..........................................................................

b) குளுக்கோசு : ..........................................................................

(தொடரும்...)

# டெசோ தீர்மானத்துடன் பான் கீ மூனை சந்திக்கிறார் ஸ்டாலின்



டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூனை நேரில் சந்தித்து தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்டாலின் வழங்க உள்ளார்.திமுக தலைவர் கருணாநிதி தலைமையில் டெசோ மாநாடு சென்னையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஐ.நா. சபையின் மனித உரிமைக்குழு சார்பில் ஒரு சர்வதேசக் குழு அமைக்கப்பட்டு இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்களைக் கண்டறிந்து போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இலங்கைத் தமிழர்கள் தாங்கள் விரும்பும் அரசியல் தீர்வை தாங்களே முடிவு செய்து கொள்ள முழு உரிமை வழங்க வேண்டும் என்று இந்திய அரசு, ஐ.நா. சபையில் தீர்மானமாகக் கொண்டு வர வேண்டும் என்பன உள்ளிட்ட 14 தீர்மானங்கள் டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

இந்தத் தீர்மானங்களை ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூனை நேரில் சந்தித்து கருணாநிதியே கொடுக்க வேண்டும் என்று மாநாட்டில் பங்கேற்றோரால் வலியுறுத்தப்பட்டது. உடல்நலம் சரியில்லாததால் கருணாநிதி வெளிநாட்டுக்குப் பயணம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார். இதனால் தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று பான் கீ மூனை சந்தித்து தீர்மானங்களைக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக அனுமதி கேட்கப்பட்டு வருகிறது. இன்னும் 10 நாள்களில் பான் கீ மூனை மு.க.ஸ்டாலின் நேரில் சந்தித்து டெசோ மாநாட்டு தீர்மானங்களைக் கொடுப்பார் என அறிவாலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ஈழத்தமிழரைக் கைவிடமாட்டோம்




இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர் பகுதிகளில் 50 ஆயிரம் வீடுகள், 400 டிராக்டர்கள், இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு விதைகள், யாழ்ப்பாணத்தில் இந்தியத் தூதரகம் என பல்வேறு உதவிகளை மத்திய அரசு செய்து வருகிறது. இன்னும் அதிகமான உதவிகளைச் செய்ய வேண்டும் என தமிழக காங்கிரஸ் சார்பில் வலியுறுத்தியுள்ளோம் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் பி.எஸ். ஞானதேசிகன் தெரிவித்தார்.

ஈழத் தமிழர்களின் மறுவாழ்வுக்கும், எல்லாவித சம உரிமையுடன் அவர்கள் வாழ்வதற்கும் உரிய பணிகளை மத்திய அரசும், காங்கிரஸ் கட்சியும் செய்யும். அதிலிருந்து ஒருபோதும் பின்வாங்க மாட்டோம். ஈழத் தமிழர்கள் பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் காங்கிரஸ் மிகுந்த அக்கறையுடன் உள்ளது என்றார் ஞானதேசிகன்.

இந்தியச் செய்திகள்

# பேஸ்புக் கணக்கை மூடினார் கருணாநிதி




தி.மு.க. தலைவர் கருணாநிதியின், "பேஸ் புக்" கணக்கு கடும் எதிர்ப்பால் ஒரே நாளில் மூடப்பட்டது. கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் தி.மு.க. தலைவர் கருணாநிதி, "கலைஞர் கருணாநிதி" என்கிற பெயரில், பேஸ் புக்கில் புதிய கணக்கை துவக்கினார். துவங்கிய அன்றே சுமார், 2,700 பேர் அந்த பக்கத்தில் இணைந்தனர். தொடங்கிய மறு நாளான நேற்றுமுன்தினம் மாலை வரை, சுமார், 5 ஆயிரம் பேர், அவருடைய பக்கத்தில் இணைந்து இருந்தனர். கருணாநிதியின், "பேஸ் புக்" பக்கத்தில் "டெசோ" மாநாட்டு தீர்மானங்கள், கருணாநிதி உரை, அவரது அறிக்கைகள் ஆகியவை வெளியிடப்பட்டு இருந்தன.

நேற்றுமுன்தினம் காலை முதலே கருணாநிதியின் பக்கத்தில் இணைந்த புதியவர்கள் பலர், அவருடைய அறிக்கைகள், "டெசோ" மாநாடு, ஈழப் பிரச்னையில் அவருடைய நிலைப்பாடு, குடும்ப அரசியல் என கருணாநிதி குறித்து கடுமையான எதிர்ப்பு கருத்துகளை தெரிவித்து வந்தனர். அதில், கருணாநிதியை தனிப்பட்ட முறையில் தாக்கி மிக கடுமையான பதிவுகள் பதியப்பட்டன. இந்த பதிவுகளுக்கு, இந்த பக்கத்தில் இணைந்து இருந்த, பல தி.மு.க.,வினரும் பதிலடி தந்தபடி இருந்தனர். இருப்பினும், ஒரு கட்டத்திற்கு மேல் கருணாநிதியை பற்றி கடுமையான விமர்சனங்கள் அதிகமாயின. இதனால், கருணாநிதியை தனிப்பட்ட முறையில், விமர்சனங்களை பதிவிட்ட பலர், மாலையில் தடை செய்யப்பட்டனர். பின்னர், மாலை 6 மணியில் இருந்து புதிதாக துவங்கப்பட்ட கருணாநிதியின் "பேஸ் புக்" காணாமல் போனது.

# பஞ்சாப் குடிநீரில் யுரேனியம் கதிர்வீச்சு

பஞ்சாபில் குழாய் கிணறுகளில் யுரேனியம் கதிர்வீச்சு இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய குடிநீர் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் மக்களவையில் எழுத்து பூர்வமாக அளித்துள்ள பதிலில் கூறியுள்ளார். பஞ்சாபின் பதிண்டா மாவட்டத்தில் 22 கிராமங்களில் போர்வெல் குழாய்களில் இருந்து எடுக்கப்பட்ட 100 நிலத்தடி நீரின் மாதிரிகளை அமிர்தசரில் உள்ள குருநாநக் பல்கலைக் கழகம், பாபா அணு ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து கடந்த 2009ஆம் ஆண்டு சோதித்து பார்த்தது.

இதேபோல் பஞ்சாபின் பிற பகுதிகளில் உள்ள போர்வெல் குழாய்களில் இருந்து எடுக்கப்பட்ட 2 ஆயிரம் குடிநீர் மாதிரிகளும், மும்பையில் உள்ள பாபா அணு ஆராய்ச்சி மையத்துக்கு அனுப்பப்பட்டது. இவற்றில் 1,686 மாதிரிகளில் கதிர்வீச்சு தாக்கமும், 261 மாதிரிகளில் யுரேனியம் கதிர்வீச்சு தாக்கமும் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமாக இருந்தது கண்டறிப்பட்டுள்ளது. இப்பிரச்னையை தீர்க்க மத்திய அரசு பல நலவடிக்கைகளை எடுத்துள்ளது. இவ்வாறு ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.





# கைலாயத்தில் இருந்து வந்தார் நித்தியானந்தா



சுவாமி நித்தியானந்தா, தன் கைலாய யாத்திரையை முடித்துக்கொண்டு நேபாளத்திலிருந்து இந்தியா வந்தார். கடந்த சில நாட்களுக்கு முன்பு கைலாய யாத்திரைக்காக தனது சீடர்களுடன் சுவாமி நித்தியானந்தா நேபாளம் சென்றிருந்தார். இவர் தன் நேபாள பயணத்தில் நடிகை ரஞ்சிதாவையும் அழைத்துச்சென்றார். இந்நிலையில் இந்த யாத்திரையை முடித்துக் கொண்டு நேற்றுமுன்தினம் மாலை புதுடில்லி வந்தடைந்தார்.

புதுடில்லி விமான நிலையத்தில் ஊடகங்களை சந்தித்த நித்தியானந்தா, தன் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகள் அனைத்தும் பொய்யானவை என்றும் அவ்வழக்குகளை சட்டப்படி எதிர்கொள்ள தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். பின்னர் விமானம் மூலம் டில்லியில் இருந்து சென்னை வந்தார். விமான நிலையத்தில் திரண்டிருந்த அவரது ஆதரவாளர்கள் 200 பேர், பூரண கும்ப மரியாதையுடன் நித்யானந்தாவிற்கு வரவேற்பு அளித்தனர். நித்யானந்தா கூறுகையில், இமாச்சல சுற்றுப் பயணம் வெற்றிகரமாக முடிந்தது. டில்லியில் என் மீது இரண்டு பெண்கள் வழக்கு தொடர்ந்து இருப்பதாக கூறப்படுவது பொய்யான செய்தி, என்றார்.

# இராமேஸ்வரத்தில் சூரிய மின்சாரம்



இராமேஸ்வரம் கோயிலில், மத்திய அரசின் மரபு சார எரிசக்தி துறை நிதி மூலம், சூரிய சக்தி மின்விளக்குகள் நிறுவும் பணி நடந்து வருகிறது. இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோயிலில், 50 இலட்சம் ரூபாயில் சூரிய சக்தியில் இயங்கும் மின்விளக்குகள் பொருத்தப்படு கின்றன. இதற்காக, கோயில் மேல்தளத்தில், "சோலார்" தகடுகளை, பொருத்தும் பணியில், தனியார் நிறுவன ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் உற்பத்தியாகும், 20 கிலோ வால்ட் மின்சாரம், பட்டரிகள் மூலம் சேமிக்கப்பட்டு இரவில் விளக்குகள் எரிவதற்கு பயன்படுத்தப்படும். முதல் கட்டமாக சுவாமி, அம்பாள் சந்நிதிகளில் தேவையான இடங்களில், விளக்குகள் பொருத்தும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........................................

முகவரி : ..........................................

பிறந்த ஆண்டு : ..........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..........................................


பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# தண்ணீர் சிக்கனத்தை வலியுறுத்தி ஒரு லீட்டர் தண்ணீரில் குளிப்பு

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை மறவர் தெருவைச் சேர்ந்த சித்தா டாக்டர் வேல்முருகன் (வயது - 38). இவர் மானாமதுரையில் நடந்த "ஏசியன் ஜிம்" 7ஆம் ஆண்டு விழாவில், நாட்டில் நிலவும் தண்ணீர் சிக்கனத்தை வலியுறுத்தி "ஒரு லிட்டர் தண்ணீரில் சோப்பு, ஷாம்பு போட்டு குளிக்கும் சாதனையை" நடத்திக் காட்டினார். பொதுவாக ஒருவர் குளிப்பதற்கு ஒரு வாளி தண்ணீராவது தேவைப்படும். ஆனால் இவர் பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரு லிட்டர் தண்ணீரில் குளிக்கும் சாதனையை செய்து காட்டினர். வேல்முருகன் கூறியதாவது: தமிழகத்தில் சில இடங்களில் பொதுமக்கள் குடிப்பதற்கு ஒரு வாய் தண்ணீர் கூட இல்லாமல் கஷ்டப்படுகின்றனர். ஆனால் நாம் குளிப்பதற்கு 2,3 வாளி தண்ணீரை செலவழிக்கின்றோம். வரும் காலங்களில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து தண்ணீர் கிடைப்பதே அரிதாகி விடும். இதனை கருத்தில் கொண்டு பொதுமக்களிடம் தண்ணீரை வீணாக செலவழிக்காமல் இருக்க விழிப்புணர்வு ஏற்படுத்தவே இதனை செய்து காட்டினேன் என்றார்.

# அமெரிக்க கடற்பகுதியில் ஊடுருவி உளவு பார்த்த ரஷ்ய கப்பல்



ரஷ்யாவின் அணு சக்தி நீர்மூழ்கிக் கப்பல் அமெரிக்க கடற்படையின் அனைத்துக் கண்காணிப்புகளையும் மீறி, அமெரிக்க கடற்பகுதியில் ஊடுருவி பல நாட்கள் உளவு பார்த்துவிட்டு திரும்பிச் சென்றுள்ளது. ஏராளமான ஏவுகணைகளோடு அமெரிக்காவின் மெக்சிக்கோ வளைகுடா பகுதியில் உலா வந்த இந்த நீர்மூழ்கிக் கப்பல் அகுலா ரகத்தைச் சேர்ந்த தாக்குதல் கப்பலாகும்.

விளாடிமிர் புடின் மீண்டும் ரஷ்ய ஜனாதிபதியான பிறகு இந்த ஆண்டின் தொடக்கத்தில் இந்த ஊடுருவல் நடந்துள்ளது. அது அமெரிக்க கடல் பகுதியை விட்டு வெளியே சென்ற பிறகு தான் இந்தத் தகவலே அமெரிக்கக் கடற்படையின் அட்லாண்டிக் பிரிவிவுக்குத் தெரியவந்துள்ளது. ஆனாலும் இதை அமெரிக்கா வெளியில் சொல்லாமல் மறைத்துவிட்டது. இந் நிலையில் இந்தத் தகவல் வெளியே கசிந்துள்ளது.

கடந்த மாதம் ரஷ்யாவின் பியர் எச் ரக குண்டுவீசும் விமானம்(Bear H strategic bomber) கலிபோர்னியா அருகே அமெரிக்க வான் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தது. இதையடுத்து அமெரிக்க விமானப் படை விமானங்கள் அந்த விமானத்தை நெருங்கியதையடுத்து அது திரும்பிச் சென்றது. சர்வதேச விவகாரங்களில் ரஷ்யாவின் ஆதிக்கத்தை மீண்டும் நிலை நிறுத்தும் முயற்சிகளில் புடின் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்கா கருதுகிறது.

சிரியா விவகாரத்தில் அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு எதிராக ரஷ்ய ஜனாதிபதி புடின் களமிறங்கி அந்நாட்டு அரசுக்கு உதவி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

## உலகச் செய்திகள்



பிரான்ஸின் ஸ்ட்ராஸ்பர்க் நகருக்கு அருகே சிறிய கிராமம் ஒன்றில் கிளிக் செய்யப்பட்ட காட்சி. இது. கிரிஸ்டோ:.ப் லூட்ஸ் என்ற இந்த நபர் அழைத்துச் செல்வது அவரது செல்லப் பிராணி. பெயர், மார்செல். இது 30 மாதம் வயதானது. பார்வைக்கு வித்தியாசமாக உள்ள இம்மிருகம் பரிசோதனை முயற்சியாக வளர்ப்பு பன்றி மற்றும் காட்டு பன்றியிடையே செய்யப்பட்ட கலப்பினத்தின் முதலாவது வாரிசு ஆகும்.

# ஜூலியன் அசாஞ்சேவை விவகாரம் ஈக்குவடோர் தூதரகத்தை தாக்குவோம் - பிரிட்டன் மிரட்டல்

விக்கிலீக்ஸ் இணையதள நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேவைக் கைது செய்வதற்காக லண்டனில் உள்ள தங்கள் நாட்டுத் தூதரகத்தின் மீது தாக்குதல் நடத்தப் போவதாக பிரிட்டன் மிரட்டியதாக ஈக்குவடார் குற்றம் சாட்டியுள்ளது.

அஸ்ரேலியாவைச் சேர்ந்த ஜூலியன் அசாஞ்சே, லண்டனில் உள்ளார். இவருக்கு எதிராக சுவீடனில் பாலியல் குற்றம் சாட்டப்பட்டு லண்டனில் இருந்து சுவீடனுக்கு நாடுகடத்தப்படும் நிலையில் லண்டனில் உள்ள ஈக்குவடார் நாட்டுத் தூதரகத்தில் கடந்த ஜூன் 19ஆம் தேதி தஞ்சம் புகுந்தார். இரண்டு மாதங்களாக அங்கேயே பதுங்கியுள்ளார். இந்நிலையில், ஈக்குவடார் நாட்டின் வெளியுறவு அமைச்சர் ரிகார்டோ பாடினோ வியாழக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது, அசாஞ்சேவை எங்களிடம் ஒப்படைக்கா விட்டால் லண்டனில் உள்ள ஈக்குவடார் தூதரகத்தின் மீது தாக்குதல் நடத்துவோம் என்று பிரிட்டன் மிரட்டியுள்ளது. இந்த எச்சரிக்கையை எங்கள் வெளியுறவு அமைச்சகத்திடமும், தூதரிடமும் அந்நாடு எழுத்து மூலமாக அளித்துள்ளது என்று அவர் தெரிவித்தார். அவரைக் கைது செய்வதற்காக லண்டனில் உள்ள தனது தூதரகத்தில் பிரிட்டன் போலீஸார் நுழைந்தால், அது வியன்னா மாநாட்டுத் தீர்மானத்தை மீறிய செயலாகும் என்று ஈக்குவடார் தெரிவித்துள்ளது. இதனிடையே, தனக்கு ஈக்குவடாரில் அடைக்கலம் தருமாறு அசாஞ்சே அளித்துள்ள விண்ணப்பம் குறித்து அந்நாட்டு அரசு வியாழக்கிழமை மாலை பரிசீலித்தது. இதைத் தொடர்ந்து, அசாஞ்சேவுக்கு அடைக்கலம் தருவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

# தெற்கு சூடான் அகதிகளுக்கு விமான மூலம் உணவு விநியோகம்



தெற்கு சூடானில் அகதிகளாக உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு ஐக்கிய நாட்டு உணவு நிறுவனம் விமானங்களின் மூலமாக உணவுப் பொருள்களை விநியோகித்தது.சூடானிலிருந்து கடந்த ஆண்டு தெற்கு சூடான் தனி நாடாகப் பிரிந்தது. அப்போதிலிருந்து இன்று வரை இரு நாடுகளின் எல்லைப் பகுதியில் சண்டை நடந்து வருகிறது. இதனால் இலட்சக்கணக்கான மக்கள் சூடானிலிருந்து வெளியேறி தெற்கு சூடானின் நீலி பகுதியில் தஞ்சம் அடைந்துள்ளனர்.அப்பகுதியில் பெய்த மழை அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு உள்ளிட்டவற்றால் அகதிகள் பெரும் அவதிக்குள்ளாயினர். நீலியில் 3இல் 2 பகுதி வெள்ளநீர் சூழ்ந்துள்ளது.

அவர்களுக்கு இதுவரை 32 தொன் எடையுள்ள கோதுமை உணவுப் பொருள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்ட அமைப்பு தெரிவித்தது. மேலும் கூடுதல் விமானங்கள் மூலம் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படும் என்று இந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் சல்லிஸ் மெஹ்டொனஹ் தெரிவித்தார்.

# துப்பாக்கிப் பிரயோகம் பயணிகள் 20 பேர் பலி

பாகிஸ்தானில் பஸ் ஒன்றிலிருந்து இறக்கப்பட்ட ஷியா முஸ்லிம்கள் மீது ஆயுதபாணிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் குறைந்தபட்சம் இருபது பேர் பலியாகியுள்ளனர். பாகிஸ்தானின் வடமேற்கு மாவட்டமான மான்செஹ்ராவில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மேற்படி பஸ் ராவல்பிண்டிக்கும் கில்கிட் நகருக்கும் இடையில் பயணம் செய்தபோது, பாபுசர் குன்றில் வைத்து வழி மறிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


இந்த பஸ்ஸை சுமார் 10-12 பேர் கொண்ட குழுவினர் வழி மறித்தனர். பயணிகள் பலவந்தமாக இறக்கப்பட்டு, அவர்களின் ஆவணங்கள் சோதிக்கப்பட்டபின் பயணிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதன் போது குறைந்தபட்சம் 20 பேர் உயிரிழந்தனர் இதுதான் ஆரம்பக் கட்ட தகவல். அவர்கள் அனைவரும் ஷியாக்கள் என மன்செஹ்ரா மாவட்ட நிர்வாக தலைவர் காலித் ஓமர்ஸாய் கூறினார்.

# தரையிறக்கப்பட்ட ரஷ்ய விமானம்



அமெரிக்காவிலிருந்து ரஷ்யாவுக்கு சென்ற பயணிகள் விமானம் ஒன்று அவசரமாக ஐஸ்லாந்தில் தரையிறக்கப்பட்டுள்ளது. விமானத்தில் குண்டு இருப்பதாக தகவல் கிடைத்ததை அடுத்து அவசரமாக தரையிறக்க நடவடிக்கை எடுத்ததாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். எனினும் அனாமதேய தொலைபேசி அழைப்பு ஒன்றின் மூலம் இந்த தகவல் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த சம்பவம் குறித்த விசாரணைகளை அதிகாரிகள் மேற்கொண்டுவருகின்றனர். விமானத்தில் 200 பயணிகள் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

# ஸ்டீவ் ஜாப்ஸ் வீட்டில் திருடியதால் பலநாட் கள்ளன் அகப்பட்டான்



கணனி, ஐபேட் துறையில் புரட்சி செய்து வரும் ஆப்பிள் நிறுவனத்தை தோற்றுவித்தவரான மறைந்த ஸ்டீவ் ஜாப்ஸ் வீட்டில் திருடியவன் கைது செய்யப்பட்டுள்ளான். சான்பிரான்சிஸ்கோ நகரில் ஸ்டீவ் ஜாப்ஸ் வசித்து வந்த வீடு தற்போது பூட்டப்பட்டிருக்கிறது. அவரது மனைவி வேறொரு வீட்டில் குடியிருந்து வருகிறார்.

இந்நிலையில் டோசி கரெம் மெக்பர்லின் என்ற திருடன் பூட்டிக் கிடந்த ஸ்டீவ் ஜாப்ஸ் வீட்டிற்குள் நுழைந்து, அவர் பயன்படுத்திய ஐபேட், ஐபோன்கள் உள்ளிட்ட 65 ஆயிரம் டொலர் மதிப்பிலான பொருட்களை திருடி கொண்டு சென்று விட்டான். எடுத்துச் சென்றபின், ஸ்டீவ் ஜாப்ஸின் சேர்வரை இயக்கும் முயற்சியில் இறங்கியபோது அது ஸ்டீவ் ஜாப்ஸ்க்கு சொந்தமானது என்று காட்டிக் கொடுத்திருக்கிறது.

இந்நிலையில் ஸ்டீவ் ஜாப்ஸ் வீட்டுப் பொருட்களைத் திருடியவனைத் தேடிய பொலிஸாருக்கும் சேர்வரிலிருந்து வந்த தகவல்கள உதவின. இதையடுத்து பின்னர் சந்தேக நபரான டோசியின் கலிபோர்னியா குடியிருப்புக்குச் சென்று திருட்டுப் போன ஸ்டீவ் ஜாப்ஸுக்கு சொந்தமான அத்தனை பொருட்களையும் கைப்பற்றியிருக்கின்றனர் தாம் திருடியது ஸ்டீவ் ஜாப்ஸ் வீடுதான் என்பது தனக்கு தெரியாது என்றும், இதேபோல் சான்பிரான்சிஸ்கோ பகுதிகளில் நான்கைந்து வீடுகளில் திருடியதையும் ஒப்புக் கொண்டுள்ளான்.

# சார்க் அமைப்பு நாடுகளுடன் இணைந்து பணியாற்ற விருப்பம்



இந்தியா எங்களின் விரோதியல்ல, கூட்டாளி என்று சீன வெளியுறவுத் துறை துணை அமைச்சர் :.பூ யிங் தெரிவித்துள்ளார்.இந்தியாவுடனும், சார்க் அமைப்பைச் சேர்ந்த நாடுகளுடனும் இணைந்து பணி யாற்றவே நாங்கள் விரும்புகிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

நேபாளம், பூடான் நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பின் நாடு திரும்பிய :.பூ யிங் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது, சீனாவும், இந்தியாவும் விரோதிகளல்ல் கூட்டாளிகள். சமீப காலமாக இரு நாட்டு உறவுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இரு நாட்டு தலைவர்களிடையே கருத்தொற்றுமை நிலவி வருகிறது. பூடான், நேபாளம் உள்ளிட்ட தெற்கு ஆசிய நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்த சீனா மேற்கொள்ளும் முயற்சி, மற்ற நாடுகளின் நலனைப் பாதிக்காது இப்பிராந்தியத்தில் சுபிட்சத்தை ஏற்படுத்தவே உதவும். இப்பகுதியில் வளத்தை ஏற்படுத்த இந்தியாவுக்கு ஒத்துழைப்புத் தர தயாராக உள்ளோம். இந்தியா உள்ளிட்ட தெற்கு ஆசிய நாடுகளுடன் போக்குவரத்துப் பாதை அமைப்பதற்கும் நாங்கள் ஆர்வமாக உள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

# கல்வித்துறையின் மேம்பாடே தலைமைத்துவத்தின் பெரு விருப்பம்

(யாழ்ப்பாணம்)

கற்பவர்களையும் கற்பிப்பவர்களையும் கல்வி நிலையங்களையும் மேம்படுத்த வேண்டுமென்பதே எமது தலைவரினதும் தலைமைத்துவத்தினதும் பெருவிருப்பாகும். மேற்படி கருத்தினைத் தெரிவித்தார் ஈ.பி.டி.பியின் வலி. மேற்கு அமைப்பாளரும் வலி. மேற்குப் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்).

நேற்றுப் பி.ப. ஒரு மணியளவில் மூளாய் தொல்புரம் றெமிங்ரன் கல்வி வளர்சோலையில் ஈ.பி.டி.பியின் வலி.மேற்குப் அமைப்பாளரினால் நடத்தப்பட்ட கற்றல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் போன்றவற்றை மாணவர்களுக்கு கையளிக்கும் வைபவத்திலேயே பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் அமைப்பாளருமான ஜீவன் மேற்படி கருத்தினைத் தெரிவித்தார்.



அவர் மேலும் அங்கு குறிப்பிடுகையில்,

கடந்த பல ஆண்டுகளாக கற்பதிலும் கற்பிப்பதிலும் கல்வி நிலையங்களை மேம்படுத்துவதிலும் பல இன்னல்களையும் இடையூறுகளையும் நாம் சந்தித்திருக்கிறோம்.

அதனால் நாங்கள் எல்லோரும் கல்விநிலையில் மிகவும் பின்தள்ளப்பட்டு விட்டோம். அந்த வலியினை நாங்கள் இப்போது உணர்கின்றோம். அதனால் எதிர்காலச் சந்ததியினர்களையாவது கல்வி நிலையில் மேம்படுத்துவதற்காக எம்மாலான அனைத்தும் செய்யுமாறு எங்கள் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா எமக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதன் அடிப்படையிலேயே நான் இன்று அக்கல்வி நிலையத்திற்கு விஜயம் செய்துள்ளேன். மாணவர்கள் கற்பதற்கான கற்றல் உபகரணங்களையும் கற்றல் இல்லாத நேரங்களில் மாணவர்கள் பொழுதுபோக்குவதற்கான விளையாட்டு உபகரணங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளேன்.

மேலும் மாணவர்களுக்கு வேறு என்னென்ன அடிப்படைத் தேவைகள் தேவைப்படுகின்றதோ அவற்றைத் தெரிவித்தால் அவற்றையும் பெற்றுத்தருவதற்குத் தயாராக உள்ளேன்.

அரசியலுக்கு அப்பாற்பட்டு கற்பவர்களுக்கும் கல்விக்கும் சேவை செய்யவேண்டும் என்பதே எங்களதும் எங்கள் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுடைய கொள்கையுமாகும்.

கல்விக்காகவும் கற்பதற்காகவும் நீங்கள் எதுவேண்டுமானாலும் தயக்கமின்றி எந்த வேளையிலும் என்னிடம் வந்து கேட்கலாம். அதை நான் அமைச்சரிடமும் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் தெரிவித்து ஆவன செய்து தருவேன் என உறுதிகூறுகிறேன்.

மேற்படி வைபவம் மாணவர் தலைவரின் தலைமையில் இடம்பெற்றது. மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது. ஆசியுரையினை செ.சிவசுப்பிரமணியமும், பிரதம உரையினை கல்வி நிர்வாகி க.மனோகரும் நிகழ்த்தினர்.

பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பெருந்திரளான பெற்றோர்களும், ஆசிரியர்களும் மண்டபம் நிறைந்த மாணவர்களும் நிறைந்திருந்தனர். வைபவ முடிவில் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) பெற்றோருடன் ஓர் சந்திப்பினை நடத்தினார். அவர்கள் தங்களுடைய பலதரப்பட்ட பிரச்சினைகளையும் அவரிடம் கூறி அவற்றுக்கான தீர்வினையும் பெற்றுக் கொண்டனர்.

# அவுஸ்ரேலியா செல்ல முயற்சி 57 பேர் புல்மோட்டையில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவுக்கு படகில் பயணிக்க முற்பட்டதாகக் கூறப்படும் குறைந்தபட்சம் 57 பேர் புல்மோட்டை கரையோரப்பகுதியிலிருந்து 40 கடல் மைல்களுக்கு அப்பால் கடற்படையினரால் கடந்த வியாழக்கிழமை நண்பகல் கைதுசெய்யப்பட்டதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

52 தமிழர்களும் 5 சிங்களவர்களுமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

திருகோணமலைக்கு அழைத்துவரப்பட்ட இவர்கள், மேலதிக விசாரணைக்காக குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## நகைத்தொழிலாளி...

மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் இரவு குறித்த நபர் தனது வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த வேளை இனந்தெரியாதவர்கள் இவரை அழைத்து இவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட பின்னர் தப்பிச் சென்றுள்ளனர்.

கால் தொடைப்பகுதியில் துப்பாக்கிச் சன்னம் பாய்ந்த நிலையில் உறவினர்களால் இவர் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (29,77,4)

## மனிதாபிமான...

வெடிகளை அகழ வேண்டியது அவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனிதனால் ஏற்படுத்தப்படும் அழிவுகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களின் போது தன்னார்வ தொண்டர்கள் அளப்பரிய சேவையாற்றி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மனிதாபிமான உதவியாளர்களின் ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## யாழ். போதனாவிலும்...

நடவடிக்கை எடுக்காவிட்டால் திங்கட்கிழமை முதல் தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக யாழ். அரச வைத்தியர் சங்கம் அறிவித்துள்ளது.

முதற்கட்ட விசாரணையில் சந்தேக நபர்களாகக் குறிப்பிட்ட இரு அதிகாரிகள் மீதும் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனச்சுட்டிக்காட்டிய வைத்திய அதிகாரிகள் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு இரு அதிகாரிகள் மீது நடவ்டிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

## லலித், குகன்...

முன்னணி சோசலிசக் கட்சி குற்றம் சுமத்தியிருந்தது.

இது தொடர்பில் உயர் இராணுவ அதிகாரிகள் இரகசிய பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதாக கட்சியின் பிரசாரச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்திருந்தார்.

லலித் மற்றும் குகனை நீதிமன்றில் ஆஜர் படுத்துமாறு உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவின் போது கூட இவர்கள் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என இராணுவம் தெரிவித்துள்ளது. லலித் மற்றும் குகன் ஆகியோரை இராணுவத்தினர் கைது செய்யவில்லை எனவும், முகாமில் தடுத்து வைக்கவில்லை எனவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# யாழ். குடாவில் மலிந்துவிட்டது பெண்களுக்கு எதிரான வன்முறைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் குடும்பப் பிரச்சினைகள் மற்றும் பெண்கள் மீதான வன்முறைகள் சமுதாயத்தில் அதிகரித்துக் காணப்படுவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி சி.சிவரூபன் தெரிவித்தார்.

பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரிப்புக்கு காரணம் தன்னம்பிக்கையின்மை மற்றும் எதிர்காலம் பற்றிய கன்வுகள் இல்லாமையே காரணமாகும்.

அனலைதீவுப் பகுதியில் கணவனால் மனைவி அடித்து சித்திரவதை செய்தமை, தீவகத்தில் மனைவியின் கையை முறித்தமை, வரணிப் பகுதியில் மனைவியின் வயிற்றில் மிதித்தமையினால் மண்ணீரல் வெடித்து சத்திர சிசிக்சை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறான சம்பவங்களின் மூலம் பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், வன்முறைகள் கூடிக்கொண்டு செல்கின்றன. அதற்கான தீர்வுகள் என்ன என்பதை இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை உருவாக்க வேண்டும்.

பசுக்களைக் கொல்வதற்கு யோசிக்கும் நாம், வன்முறைகளைச் செய்கின்றோம் என்றால் அதற்கான காரணம் யுத்தத்தினால் ஏற்பட்ட தாக்கமே.

குடும்பப் பிணக்குகள் ஏற்படும் போது அவை தீர்க்கக் கூடியதாக இருக்கின்றதா? இதனால் பல்வேறு சமூகத்திடம் விரக்திகளும் குழப்பங்களும் ஏற்படுகின்றன.

கணவன் மதுபோதையில் வரும்போது பெண்கள் பிரச்சினைகளை முன் வைப்பதால் வன்முறைகள் வெடிக்கின்றன.

வன்முறைகள் வெடிக்கும் போது குடும்பங்களுக்கு கருத்துக்களை சொல்வதற்கு சமூக அமைப்புக்கள் இல்லை.

குடும்பங்களைப் பிரிக்கும் நோக்கத்துடன் இல்லாது கணவனால் கொடுமைப்படுத்தப்படும் பெண்ணுக்கு ஆதரவான கருத்துக்களையும் பாதுகாப்பினையும் வழங்க சமூக அமைப்புக்கள் முன்வர வேண்டும்.

கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்ணோ அல்லது இல்லற வாழ்க்கையில் நிலைத்து நிற்காத பெண்ணோ முன்வரும் போது அது பாதிக்கப்பட்ட பெண்ணை மீண்டும் வன்முறைக்கு தூண்டும் செயலாக மாறிவிடுகின்றது.

இவ்விடயத்தில் அனுபவம் வாய்ந்தவர்கள் மூலம் கருத்துக்கள் பரிமாறப்பட்டால் குடும்ப வனமுறைகள் மற்றும் வன்முறைக்குள்ளாகும் பெண்களுக்கு சிறந்ததொரு தீர்வு கிடைக்கும்.

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தீர்வு கிடைக்க சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருந்து பெண் தலைமைத்துவத்தினை தேர்ந்தெடுக்க வேண்டும். அதனால் அவர்களின் வாழ்வை உயர்த்த முடியும்.

பெண்கள் மீதான வன்முறைக்கு தீர்வு என்பது கேள்வி குறியாகவே இருப்பதால், இதனை கருத்திற் கொண்டு சமூக அமைப்புக்கள் முன்வந்து செயற்பட வேண்டும் என்றார்.

## வைத்தியர்களுக்கு...

செலுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இதேவேளை தேசிய வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் லசந்த அபேரணசிங்கவின் தெஹிவளையில் உள்ள வீட்டின்மீது கைக்குண்டு வீசப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையிலான குழு இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிழக்கு மாகாண...

வழியில் - கண்ணியமான, நிதானமான வழியில் சென்று கொண்டிருக்கும் நாம், அதன் மூலம் நீடித்து நிலைக்கத்தக்க நிரந்தரத் தீர்வைப்பெற முனைகிறோம். அரசாங்கம் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழு தனது பரிந்துரையில், அதிகபட்ச அதிகாரத்துடன் கூடிய அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டுமென்றே கூறியுள்ளது.

ஆனால் அதிகபட்ச அதிகாரப்பகிர்வை தமிழர்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் விரும்பவில்லை. ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினால் எழுந்துள்ள அனைத்துலக அழுத்தங்களில் இருந்து விடுபட, கிழக்கு மாகாணசபையில் வெற்றி பெறவேண்டும் என்று அமைச்சர்கள் இப்போது பகிரங்கமாகவே கூறுகின்றனர்.

இதனை நாம் அனுமதிக்க முடியுமா? அனைத்துலக சமூகத்திடம் உள்ள தமிழர்களுக்கு சார்பான சிந்தனையை இந்தத் தேர்தல் மூலம் நாம் பலப்படுத்தப் போகின்றோமா? அல்லது பலவீனப்படுத்தப் போகின்றோமா? திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களை நாம் கைப்பற்ற வேண்டும்.

இதனை நாம் சாதித்தால், கிழக்கு மாகாணசபையின் அதிகாரத்தை எம்மால் கைப்பற்ற முடியும். அதன் மூலம் அனைத்துலக சமூகத்துக்கு நாம் தெளிவான ஒரு செய்தியை சொல்ல முடியும்.

ஜனநாயக ரீதியான முடிவைத் தவிர, பலம் வாய்ந்த முடிவு வேறு ஏதும் இல்லை. மாகாணசபை முறைமை முழுமையானது அல்ல. ஆனால் அர்த்தபூர்வமான அதிகாரங்களைக் கொண்டதாக அதனைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## ஜனாதிபதி...


உறுதியென்றோ இங்கிலாந்து காணி உறுதியென்றோ எதுவும் கிடையாது. காணிகளுக்கு காணி ஆணையாளரின் ஊடாக அரசாங்கம் வழங்குகின்ற ஒரேயொரு உறுதிப்பத்திரம்தான் உள்ளது. ஏனைய காணி உறுதிப்பத்திரங்கள் செல்லுபடியாகாது என ஜனாதிபதி குறிப்பிட்டார். காணிகள் இல்லாதவர்களுக்கு காணிகள் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

வீடமைப்பு தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்ட போது, வீடற்றவர்களுக்கு வீடுகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மேற்படி நிகழ்வில் அரச அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண அமைச்சின் செயலாளர்கள், மாகாண மற்றும் மாவட்ட அரச உயர் அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் உள்ளிட்ட அரச அரசசார்ாபற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பிரபாகரன் வளர்வதற்கு காரணம் செல்வநாயகம்

## கூறுகிறார் எல்லாவெல



(கொழும்பு)

பிரபாகரனின் பயங்கரவாதம் இந்நாட்டில் வளர்ச்சியடைவதற்கு செல்வநாயகத்தின் கோரிக்கைகளே அடிப்படைக் காரணங்களாக அமைந்ததுடன் இதனால் இலங்கை மக்கள் மாத்திரமல்லாது வெளிநாட்டு மக்களும் பாதிப்புக்களை அனுபவித்துள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளதாவது,

உலகத்தில் எந்த இடத்தில் ஈழம் தொடர்பான மாநாடுகளை நடத்தினாலும் இலங்கையில் ஈழ நாட்டை உருவாக்குவது என்பது வெறும் கனவு மாத்திரமே. இதற்கு உந்து சக்தியை வழங்கும் நாட்டின் துரதிஷ்டத்திற்கு உருவாகியுள்ள தேசத்துரோகிகள் இதனை நினைவில் கொள்ள வேண்டும்.

நாட்டுக்கு துரோகம் இழைக்கும் இவ்வாறான தேசத்துரோகிகளை நாட்டில் இருந்து வெளியேற்ற வேண்டும்.

பயங்கரவாதம் காரணமாக நாட்டில் ஆயிரக்கணக்கான உயிர்கள் அழிந்தன. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. தேசிய உரிமைகள் அழிந்தன. இந்த பின்னணியில், நாட்டின் அதிஷ்டமாக ஜனாதிபதி தலைமையில், பாதுகாப்பு செயலாளர் உட்பட்டோர் கொடூர பயங்கரவாத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

எனினும் உயிரிழந்த பயங்கரவாதத்திற்கு மீண்டும் உயிரூட்ட நினைக்கும் தேசத்துரோகிகள் நாட்டில் உள்ளனர். தென் இந்தியாவில் உள்ள இனவாதிகள் இந்திய மத்திய அரசாங்கத்திற்கு தலைவலியாக மாறியுள்ளதை காணமுடிகிறது. அந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இனவாத குழுக்கள் பெரும் தடையாக இருப்பதைக் காணமுடிகிறது.

இந்தியாவையும், இலங்கையையும் மீண்டும் பயங்கரவாதத்தினால் அழிக்கவே அவர்கள் முயற்சித்து வருகின்றனர். இதற்கு உந்து சக்திகளை வழங்கும் தேசத்துரோகிகள் இலங்கையில் பிறந்திருப்பது நாட்டின் துரதிஷ்டம். இலங்கையில் பிறந்து, அந்த மண்ணில் தண்ணீர் அருந்தி, அதில் விளையும் பயிர்களை உண்டு அந்த மண்ணிலேயே மரணிக்கும் இந்த தேசத்துரோகிகள், ஆடை அணிந்து கொண்டா, நாட்டை பிளவுப்படுத்தும் ஈழம் என்ற எண்ணக்கருவிற்கு ஆதரவு வழங்குகின்றனர் எனவும எல்லாவெல மேதானந்த தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# கோமாளிகளின் சவால்களுக்கு பதிலளிக்கமாட்டார் ரணில்

## என்கிறார் திஸ்ஸ

நாட்டில் பிரச்சினைகள் கொழுந்துவிட்டு எரியும் இத்தருணத்தில் கோமாளிகளின் சிறுபிள்ளைத்தனமான சவால்களுக்கு பதிலளிப்பதற்கான நேரம் எதிர்க்கட்சித் தலைவருக்கு இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முடியுமாயின் அனைத்து ஆதாரங்களுடன் காலம் கடத்தாது தம்முடன் நேருக்கு நேர் விவாதத்திற்கு வருமாறு அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கு சவால் விடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

முக்கிய பதவி வகிக்கும் அமைச்சர் என்ற வகையில் கோமாளியாக செயற்படாது தமது சவாலை ஏற்றுக்கொள்ளு மாறும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சில் இடம் பெற்று வருகின்ற ஊழல் மற்றும் மோசடிகளை மூழ்கடிப்பதற்காக அரசியல் தலைவர்களுக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

# சீன நிபுணர் குழு இலங்கை விஜயம்

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள இயந்திரக் கோளாறு தொடர்பில் ஆராய்வதற்கு சீன நிபுணர்கள் குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

இந்தக் குழு கடந்த சில நாட்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் விமல தர்ம அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

இவர்கள் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளைத் திருத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருத்தும் பணிகள் நிறைவடைந்ததும் ஒரு வாரத்திற்குள் மின உற்பத்தியை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் விமல தர்ம அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

# பதவியிலிருந்து விலகினார் திலக் கருணாரட்டன



(கொழும்பு)

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து திலக் கருணாரட்ன நேற்று ராஜினாமா செய்துள்ளார். தனது ராஜினாமாக் கடிதத்தை நிதியமைச்சிடம் அவர் நேற்று கையளித்தார்.

எனினும், இந்த ராஜினாமாவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்ளாததால், பிணையங்கள் ப்ரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு மற்றொருவரை தெரிவு செய்வதற்கு தான் இன்னும் தீர்மானிக்கவில்லை என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

# அரசியல் தீர்வு இல்லை அமைச்சர் திஸ்ஸ கவலை

(கொழும்பு)

முப்பது வருடகால யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் கடந்துவிட்டபோதிலும், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இன்னமும் கிடைக்காமை கவலைக்குரிய விடயம் என சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பு வட, கிழக்கு பெண்கள் சம்பந்தமாக தயாரித்த அறிக்கை ஒன்றை கண்டி எர்ல்ஸ் ரிஜென்சி ஹோட்டலில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரணவிடம் கையளித்தது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களின் சமாதானம், பாதுகாப்பு, அபிவிருத்தி தொடர்பாக இலங்கை பெண்களுக்கான நிகழச்சித் திட்டம் என்ற பெயரில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

பெண்கள் அமைப்பு இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் மிக பொருத்தமாக உள்ளன. இதனை அமுல்படுத்துவதில் நாம் சில சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. முதலாவதாக கொழும்பு முதல் கிராமங்கள் வரை அதிகாரப் பகிர்வு முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். இதற்கு பாரிய நிதி ஒதுக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான நிலை ஒன்று ஏற்பட்டால் மட்டுமே முழுமையாக தீர்மானம் எடுக்கும் சந்தர்ப்பம் பெண்களுக்குக் கிடைக்கும்.

பல்லின சமூகம் வாழும் எமது நாட்டில் இனங்களுக்கு இடையிலும் சமூகங்களுக்கு இடையிலும் புரிந்துணர்வையும், சமாதானத்தையும் கட்டியெழுப்பினால் மட்டுமே பெண்களது அபிவிருத்தியை பூரணமாக முன்னெடுக்க முடியும்.

உலகில் எந்த நாட்டில் யுத்தம் நடந்தாலும் எந்தக் காலத்தில் நடந்தாலும் அதனால் கூடுதலாகப் பாதிக்கப்படுவோர் பெண்களே. எனவே தீர்மானம் எடுக்கும் அமைப்புக்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும். எனது கருத்தின்படி ஆகக் குறைந்தது தேர்தல்களில் 30 சதவீதமான பெண்ளுக்காவது சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்றார்.

அமைச்சர் சுமேதா் டீ.ஜயசேன, நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனாநாயக்க, சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற லைபீரியவை சேர்ந்த லெமா கோபி, டிஸ்னி நிறுவனத்தை சேர்ந்த அல்பியன் டிஸ்னி, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் பணிப்பாளர் சுமித்திரா ரத்நாயக்க, தலைவி விசாகா தர்மதாச உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

# திலக் கருணாரட்ன பதவி விலகல் கவலை கொள்கிறது ஐ.எம்.எப்.

(கொழும்பு)

பங்கு பரிவர்த்தனை தலைவர் திலக் கருணாரட்ன பதவி விலகியமை குறித்து சர்வதேச நாணய நிதியம் கவலை வெளியிட்டுள்ளது. மிகவும் வலுவான மற்றுமொரு உயர் அதிகாரியை இலங்கைப் பங்குப் பரிவர்த்தனை இழந்துள்ளதாகவும், அதுவும் குறுகிய காலத்தில் இந்த இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

பங்குச் சந்தையின் சில முதலீட்டாளர்கள் பிரயோகித்த கடுமையான அழுத்தம் காரணமாக திலக் கருணாரட்ன பதவியை ராஜினாமா செய்துள்ளார். இதேபோன்று அழுத்தம் பிரயோகிக்கப்பட்ட காரணத்தினால் கடந்த டிசம்பர் மாதம் தலைவராகச் செயற்பட்ட இந்திராணி சுகததாச பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

பங் குச் சந்தையை சரியான வழிக்கு இட்டுச் செல்லும் நோக்கிலேயே திலக் கருணாரட்ன செயற்பட்டு வந்ததாக சர்வதேச நாணய நிதியத் தின் இலங்கைப் பணிப்பாளர் கோஷி மாத்தாய் தெரிவித்துள்ளார்.

# பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தில் மாகாண சபைகளுக்கு அங்கத்துவம்

(கொழும்பு)

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் மாநாட்டின்போது மாகாண சபைகளுக்கு இச்சங்கத்தின் உறுப்புரிமை பெறுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செப்ரெம்பர் 7 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை இம்மாநாடு நடைபெறவுள்ளது. 54 நாடுகள் மற்றும் 179 மாநில அரசாங்கங்களைச் சேர்ந்த 600 பேர் இம்மாநாட்டில் பங்குபற்றவுள்ளதாக சபாநாயகர் தெரிவித்தார். மேலும் 100 பேர் பார்வையாளர்களாக பங்குபற்றவுள்ளனர்.

இம்மாநாட்டின்பேது, இந்நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற பிரதிநிதிகள் இலங்கையின் பல்வேறு பாகங்களுக்கும் செல்வதற்கான வாய்ப்பை பெறுவர். வடக்கு கிழக்குக்கும்கூட செல்வதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கும் என செய்தியாளர் மாநாடொன்றில் சபாநாயகர் கூறினார்.

இம்மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுத் தலைவரான பிரதி சபாநாயகர் சந்திமா வீரகொடி கருத்துத் தெரிவிக்கையில், இசங்கத்தில் மாகாண சபைகளுக்கு அங்கத்துவம் பெற்றுக்கொடுப்பதற்கு இலங்கை முயற்சிக்கும் எனக் கூறினார்.

மாநாட்டின்போது இது தொடர்பான தீர்மானத்தை நாம் முன்வைப்போம். இப்பிரேரணை ஒவ்வொரு மாகாண சபையிலும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என அவர் கூறினார். இத்தகைய அங்கத்துவத்தின் பலன்கள் குறித்து அவர் தெரிவிக்கையில் உலகின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள பல் வகையான ஜனநாயக முறைமைகளை தெரிந்துகொள்வதற்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் எனத் தெரிவித்தார்.

# ஆணைக்குழு அறிக்கையின் மொழிபெயர்ப்பு விரைவில்

(கொழும்பு)

ஆணைக்குழு அறிக்கையின் சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்பு அறிக்கைகள் விரைவில் பகிரங்கப்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னுரிமை அடிப்படையில் இந்த மொழி பெயர்ப்பு பிரதிகள் வெளியிடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்புக்களை இலங்கை மத்திய வங்கி தயாரித்துள்ளது.

இந்த மொழிப் பெயர்ப்பு பிரதிகளை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரிடம் ஒப்படைத்துள்ளார்.

அறிக்கையின் தமிழ், சிங்கள பிரதிகள் விரைவில் பொதுமக்களின் பார்வைக்கு விடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஆகஸ்ட் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.